www.padippakam.com

# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 488 — 1998 ஜுன் — ரூபா 8.00

உள்ளே


- யாழ்ப்பாண மேயர் படுகொலை ..................... 2
- மார்க்சிச விரிவுரைகளுக்கு பேராதரவு ....... 3
- இந்தோனேஷிய ஆளும் வர்க்க நெருக்கடி உக்கிரம் ........................................ 4
- தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் படிப்பினைகள் ............... 5–7
- இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ..... 8–9
- பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும் ........................... 12–13
- சோசலிச சமத்துவக் கட்சி சோசலிசக் கொள்கைகளுக்கு போராட்டம்! .................. 14
- இந்தியாவின் அணுகுண்டு சோதனையின் பின்னணியில் .................... 16–17


**1998 மே தினம் – சோசலிச சமத்துவக் கட்சி**

## பாகிஸ்தான் அணுகுண்டுப் பரிசோதனை

# தென் ஆசியாவில் யுத்த மேகங்கள் கவிகின்றன

**ஆசிரியர் குழு அறிக்கை– மே 30 1998**

மே 28ம் திகதி பாகிஸ்தான் அணுகுண்டுப் பரிசோதனையில் இறங்கியதும் தென்ஆசியா நான்காவது இந்திய பாகிஸ்தானிய யுத்த விளிம்புக்குக் கொணரப்பட்டுள்ளது. தனது அணுகுண்டு பரிசோதனையை நியாயப்படுத்தும் பொருட்டு பாகிஸ்தான் இந்தியா தனது அணுகுண்டு பரிசோதனை நிலையத்தின் மீது ஒரு விமானத் தாக்குதலை தொடுக்க உள்ளதாக குற்றம்சாட்டியது. இந்தியா இந்தக் குற்றச்சாட்டை மூர்க்கமாக மறுத்தது. ஆனால் பாகிஸ்தானிய பரிசோதனையை அடுத்து வந்த நாட்களில் இந்திய அரசாங்க அதிகாரிகள் இந்தியப் படைகள் வெகுவிரைவில் பாகிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள காஷ்மீரினுள் பிரவேசிக்கும் என இடைவிடாது எச்சரித்து வந்தனர்.

புதுடில்லியிலும் இஸ்லாமாபாத்திலும் உள்ள ஆளும் கும்பல்கள் எந்தளவுக்கு அச்சுறுத்தல்களை விடுக்கின்றதோ எந்தளவுக்கு அணுகுண்டு பரிசோதனைகளையும் பேரழிவுகள் நிறைந்த ஏவுகணைகளையும் மற்றும் ஆயுதங்களையும் கையாள்கின்றதோ எந்தளவுக்கு 'தேசிய ஐக்கிய' வேண்டுகோள்களை விடுக்கின்றதோ அந்தளவுக்கு அது ஆதிக்க சக்திகளின் ஒரு பொதுவான நெழிவுசுழிவு பாதையாகி விடுகின்றது. ஒவ்வொரு நாட்டினதும் தேசிய முதலாளி வர்க்கமும் சோவினிசத்தையும் இராணுவத்தையும் அதனது பிற்போக்கு சமூக, பொருளாதாரக் கொள்கையில் இருந்து மக்களின் கவனத்தைத் திருப்பவும் அதிகரித்துவரும் சமூகப் பதட்டத்தையும் விரக்தியையும் ஒரு பிற்போக்குத் திசையில் திருப்பவும் கையாள முயற்சிக்கின்றன.

இந்திய, பாகிஸ்தானிய தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் தத்தம் நாடுகளின் அரசாங்கங்கள் சோவினிசத்தை தூண்டவும் பரஸ்பரம் கசப்பு உணர்வை வளர்க்கவும் செய்யும் பிரச்சாரங்களை வன்மையாக எதிர்க்க வேண்டும். இதனது இறுதி இலக்கு இவ்விரு நாடுகளுக்கும் இடையே மற்றொரு மோதுதலை உருவாக்குவதே.

இந்தியத் துணைக் கண்டத்தில் இராணுவவாதம் வெடிப்பது எந்த விதத்திலும் ஒரு வெறும் பிராந்திய நெருக்கடியாகிவிடாது. இது உலகம் பூராவும் உள்ள தொழிலாளர் வர்க்கத்தின் மாபெரும் அக்கறைக்கு உரிய விடயமாகும். தென் ஆசியாவில் அணுகுண்டு பரிசோதனைகள் தளிர்விட்டமை பூகோள ரீதியானதும் ஆழமானதுமான முரண்பாடுகளின் ஒரு வெளிப்பாடாகும்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, ஒரு புதிய ஒழுங்குக்கான சமாதானம், ஸ்திரப்பாட்டுக்கான சகல பேச்சுக்களும் குளிர்யுத்த காலப்பகுதி அனைத்துலக அரசியலும் அதிகரித்த

19ம் பக்கம் பார்க்க

# செய்தி தணிக்கை: இராணுவக் கடிவாளம்

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஜுன் 5ம் திகதியில் இருந்து இராணுவ, பொலிஸ் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகள் பிரசுரிக்கும் ஜனநாயக உரிமையை அடியோடு ஒழித்துக்கட்டும் இராணுவ தணிக்கையைக் கொணர்ந்துள்ளது. இது தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கும் இனவாத யுத்தத்தின் மக்கள் படுகொலையாளர்களை மூடி மறைக்க மட்டும் அல்லாது நாடு பூராவும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இடம்பெறும் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மூடி மறைக்கவும் போடும் வாய்ப்பூட்டாகும். இது இராணுவ பொலிஸ் அடக்குமுறை ஆட்சியை அபிவிருத்தி செய்வது புதிய கட்டத்துக்கு வந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

இராணுவத் தணிக்கை இடம்பெறுவது முன்னர் ஒருபோதும் இருந்திராத ஒரு தாக்குதலாகும். கடந்த காலத்தில் முதலாளித்துவ அரசாங்கத்தினால் இராணுவ செய்தி தொடர்பாக என்றாலும் சரி வேறு விடயங்கள் பற்றி என்றாலும் சரி செய்திகளையும் கட்டுரைகளையும் பிரசுரிப்பதை நசுக்க அவசரகாலச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தணிக்கையின் போது "அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்" ஆக அரசாங்க சிவில் உத்தியோகத்தர் விளங்கி வந்தார். இம்முறை தணிக்கை, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சினால் விதிக்கப்பட்டு தணிக்கை செய்வதை இராணுவம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. அதிகாரம்பெற்ற அதிகாரியாக இலங்கை இராணுவத்தின் மேஜர் ஜெனரால் ஜாலிய நம்முனி நியமிக்கப்பட்டுள்ளார். வெகுஜனத் தொடர்புச் சாதனங்களைச் சேர்ந்தோர் இராணுவத் தலைமையகத்தில் அமைந்துள்ள அலுவலகத்துக்கு நேரில் கட்டுரைகளையும் அறிக்கைகளையும் எடுத்துச் சென்று, தணிக்கைக்கு உள்ளாக்க வேண்டும். அல்லது பக்ஸ் மூலம் அனுப்பு அதைச் செய்து கொள்ள வேண்டும்.

இனவாத யுத்தத்தை பற்றியோ அல்லது ஏனைய இராணுவ நடவடிக்கைகளைப் பற்றியோ அதை நடாத்தும் முப்படைகளின் தளபதிகளினதோ அல்லது பொலிஸ் மா அதிபரினதோ யுத்த நடவடிக்கைகள் பற்றியோ மட்டும் அல்ல அவர்களின் எந்த ஒரு நடவடிக்கை பற்றியும் எதையும் எழுதுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டளைகள் மூலம் அரச படைகள் நாடு பூராவும் சித்திரவதைகளையும் கொலைகளையும் நடாத்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இனவாத யுத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் கடந்த சில தினங்களாக பிரசுரிக்க சென்ற இராணுவ நடவடிக்கை பற்றிய செய்திகள் கருச்சிதைவுக்கு உள்ளாகி இருந்த விதத்தில் இருந்து இராணுவத்தின் கீழ் தணிக்கை எவ்வளவு மோசமாக இடம்பெறுகின்றது என்பதை எடுத்துக் காட்டியது.

இப்போது மாங்குளத்தை கைப்பற்ற ஆரம்பமாகியுள்ள போராட்டங்களின் பெறுபேறுகளை மூடி மறைப்பதே அரசாங்கத்தின் தணிக்கையின் இலக்காகும் என முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் கூறிக் கொண்டுள்ளன. கொடிய மக்கட் படுகொலை பற்றிய தகவல்களை மக்களிடம் இருந்து ஒழித்து மறைத்து யுத்தத்தை நடாத்துவதே அரசாங்கத்தின் இறுதி இலக்காக இருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் ஆளும் வர்க்கத்தினதும் திட்டம் அதற்கு அப்பால் வெகு தூரம் செல்வதாகும்.

மாங்குளத்தைக் கைப்பற்றும் பொருட்டு பொதுஜன முன்னணி அரசாங்கம் தற்கொலை யுத்தத்துக்கு இராணுவத்தை இறக்கி உள்ளது என்பது இராணுவத் தணிக்கை மூலமும் நாலாபுறமும் இருந்து காதடைக்கும் விதத்தில் ஒலிக்கும் விடயங்கள் மூலமும் அம்பலமாகியுள்ளது. ஆஸ் பத்திரிகள் காயமடைந்த படையாட்களால் நிரம்பி வழிவதோடு தினமும் காய்ந்து போகும் இரத்த வங்கியை நிரப்ப இரத்த தானம் செய்யும்படி இரத்த வங்கி அதிகாரிகள் தொடர்ந்து பொதுமக்களை கோரி வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் கோட்டையெனக் கூறப்படும் மாங்குளத்தையும் யாழ்ப்பாண பிரதான வீதியையும் இரத்தப் பலிகள் மூலம் பிடிக்கும் இனவாத யுத்தத்தை வெற்றி கொள்ள அரசாங்கம் பந்தயம் பிடித்துள்ளது ஏன்? தமிழ் ஒடுக்கப்படும் மக்களைக் கீழ்ப்படுத்துவதைப் போலவே யுத்த வெற்றி எனப்படுவதன் மூலம் பேரின சிங்கள இனவாத அலையை கரைபுரண்டோடச் செய்து அதன் மூலம் சமூக, பொருளாதார பிரச்சினைகளால் பதட்டம் அடைந்துள்ள தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கி, அவர்களின் கண்களில் மண்ணைத் தூவி, இராணுவ பொலிஸ் ஆட்சிக்கு வழிவகுப்பதை விரைவுபடுத்துவதே திட்டம்.

ஆளும் வர்க்கத்தின் இந்த எதிர்ப்புரட்சி அவசியங்களும் அவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் குழப்பங்களும் பூகோளமயமான உலக முதலாளித்துவத்தின் நெருக்கடியினுள்ளேயே தோன்றியுள்ளது.

கடந்த எப்பிரல் இறுதி வாரத்தில் அமெரிக்க கிளின்டன் அரசாங்கத்தின் சிறப்பு பிரதிநிதியான ஐ.நா.சபையின் அமெரிக்கத் தூதுவர் பில் றிச்சார்ட்சனும் இராஜாங்கத் திணைக்களத்தின் கார்ள் இன்டர்பேர்த்தும் இலங்கை வந்தனர். அவர்கள் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் யுத்தத்துக்கும் அரசியல் பொதிக்கும் அங்கீகாரம் வழங்கியதோடு தீவின் சிங்கள தமிழ் முதலாளித்துவ சகல தரப்பினரையும் உள்ளடக்கிய ஒரு சமரசத்தின் மூலம் ஒரு "உறுதியான ஆட்சியை" விரைவில் உருவாக்கும் அவசியத்தை வலியுறுத்தினர். இதைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியத்தினாலும் உலக வங்கியினாலும் இயக்கப்படும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் குழுவின் கூட்டம் நடந்தது. அமெரிக்கா தொடக்கம் பிரித்தானியா வரையிலான

18ம் பக்கம் பார்க்க

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள– தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளர் பாதை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
சோசலிச சமத்துவக் கட்சியின்
பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90. 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

# யாழ்ப்பாண மேயர் படுகொலை

1998 மே 17ம் திகதி விடுதலைப் புலிகள் யாழ்ப்பாண மேயர் சரோஜினி யோகேஸ்வரனை கொலை செய்தமை ஒரு அரசியல் படுகொலையாகும். இந்தக் கொலைக்கு "சங்கிலியன் படை" என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளதாகக் கூறப்பட்ட போதிலும் சங்கிலியன் படை விடுதலைப் புலிகளின் ஆயுதம் என்பது பிரசித்தமானது. இந்த அரசியல் படுகொலையானது தமது அரசியல் எதிர்ப்பாளர்களை துடைத்துக் கட்டும் பொருட்டு விடுதலைப் புலிகள் முன்னெடுக்கும் பயங்கரவாத தாக்குதல்களின் ஒரு பாகமாகும்.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான தமது கைகளைப் பலப்படுத்த பொதுஜன முன்னணி அரசாங்கமும் அரச படைகளும் பயன்படுத்திக் கொண்டுள்ளன. வடக்கில் "சிவில் நிர்வாகத்தை" நிலைநாட்டி, "ஜனநாயகத்தை" ஸ்தாபிதம் செய்யும் தமது இயக்கத்தை நாசமாக்குவது விடுதலைப் புலிகளுக்கு அவசியமாகியுள்ளதாக படுகொலையை கண்டனம் செய்து பொதுஜன முன்னணி அரசாங்கமும் வடக்கின் இராணுவத் தளபதி பலகொல்லவும் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். இவை எல்லாம் அவர்களின் வேஷங்களுக்கு மேலும் உரமூட்டும் முயற்சிகளாகும். அமெரிக்க அரசாங்கத்தின் இராஜாங்கத் திணைக்களமும் மற்றும் ஏகாதிபத்திய நாடுகளின் ஆட்சியாளர்களும் யாழ்நகர மேயர் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்ததன் மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அரசியல் தீர்வு திட்டத்தை சூழ சிங்கள தமிழ் முதலாளிகள் ஒன்றிணையும் அவசியத்தை வலியுறுத்துவதற்கான மற்றொரு சந்தர்ப்பமாக்கிக் கொண்டுள்ளனர்.

அரசியல் எதிர்ப்பாளர்களை படுகொலை செய்வதை "சமரசவாதிகளுடன் கணக்கு வழக்குத் தீர்க்கும் ஒரு விதிமுறை" என விடுதலைப் புலிகள் கூறிவந்துள்ளது. பல குட்டி முதலாளித்துவ இயக்கங்களின் இன்றியமையாத இலட்சணமான தமது அரசியல் எதிர்ப்பாளர்களை படுகொலை செய்வதன் மூலம் அவர்களுடனான "கணக்கு வழக்குகளை தீர்ப்பது" 1970பதுகளில் இருந்து தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்களிடையே பரந்து கிடந்தது. விடுதலைப் புலிகள், புளொட், டெலோ, ஈரோஸ் அமைப்புக்களிடையே இந்தக் கணக்கு வழக்கு தீர்ப்பு, வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் தமிழ் நாட்டிலும் மக்கட் படுகொலை இரத்தக் களரிகளாக புகழ்பெற்றது. இறுதியாக இராணுவ பலத்தின் மூலம் முன்னணியில் நின்று தமது எதிர்ப்பாளர்களை படுகொலை செய்து, விடுதலைப் புலிகள் முன்னேறிச் செல்லும் நிலைமையினுள் ஏனைய குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் இனவாத யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து, விடுதலைப் புலிகளை துடைத்துக் கட்டுவதில் ஈடுபட்டுள்ளன.

"தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் நாமே" என விடுதலைப் புலிகள் உரிமை கொண்டாடுகின்றது. அதை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு விடுதலைப் புலிகள் தமது எதிர் குழுக்களை படுகொலை செய்வதில் ஈடுபடுகின்றது. விடுதலைப் புலிகள் இந்த பிற்போக்கானதும் போலியானதுமான உரிமை கோரலை முன் தள்ளியுள்ளதற்கு காரணம், தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை அனைத்துலக மூலதனத்துக்கு விற்றுத்தள்ளி, சுரண்டுவதற்கு கூட்டுச் சேரும் "ஏக பிரதிநிதியாக" தம்மை ஸ்தாபிதம் செய்வதேயாகும். சொத்துக்களையும் வசதி வாய்ப்புக்களையும் பகிர்ந்து கொள்ளுவதற்காக இடம்பெறும் இந்த இழுபறிகளில் விடுதலைப் புலிகளுக்கும் மற்றும் தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அமைப்புக்களுக்கும் இடையே அடிப்படை வேறுபாடு கிடையாது. காட்டுமிராண்டி இராணுவ பலத்தின் மூலமும் பயங்கரவாதத்தின் மூலமும் தமது முதலாளித்துவ அபிலாசைகளை பூர்த்தி செய்து கொள்ள விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றது. அதன் மூலம் மறுபுறத்தில் ஒரு காட்டுமிராண்டி சர்வாதிகார சக்தி என்ற வகையில் தமது முக்கியத்துவத்தையும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு பிரத்தியட்ச மாக்கவும் முயற்சிக்கின்றது.



சரோஜினி யோகேஸ்வரன்

விடுதலைப் புலிகளின் பிரிவினை வாதத்தின் அரசியல் வங்குரோத்தும் பிற்போக்கும் தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நடுத்தெருவில் தள்ளியுள்ளது. இவை ஒரு புறத்தில் தமிழ் மக்களை மிலேச்ச ஆட்சிக்குள் கீழ்ப்படுத்தும் நடவடிக்கையாக உள்ளது .

மறுபுறத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தம், ஏகாதிபத்தியவாதிகள் அனைத்துலக மூலதனத்துக்கான சிறந்த நிலைமைகளை சிருஷ்டிக்கும் பொருட்டு இந்த இரு தரப்பினரையும் ஒரு சமரசத்துக்கு கொணரவும் செயற்படுகின்றது. தமது அரசியலைப் பொதுமக்கள் புரிந்துகொண்டு தமது பிடியின் கடிவாளம் உடைந்து போகையில் ஏனைய தமிழ் முதலாளித்துவ அமைப்புக்கள் இடம்பிடித்துக் கொள்ளுமோ என்ற பீதி விடுதலைப் புலிகளை பிடித்துக் கொண்டுள்ளது. இத்தகைய ஒரு நிலைமையின் கீழ் யாழ்ப்பாண மேயரைப் படுகொலை செய்ததன் மூலம் தமது எதிர்ப்பாளர்களை பயமுறுத்த விடுதலைப் புலிகள் நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட்ட முதலாளித்துவ அமைப்புக்கள் ஏகாதிபத்தியவாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு பொதுஜன முன்னணியும் திறந்து வைக்கும் வழிகள் மூலம் தமக்கு ஒரு நிலைமையை உருவாக்கிக் கொள்ளும் அவஸ்தையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை யாழ்ப்பாணக் குடாநாட்டின் சரி அரைவாசிக்கும் அதிகமான மக்கள் இனவாத யுத்தத்தினால் வெளியேற்றப் பட்டும் அங்கு திரும்பியுள்ளவர்கள் இராணுவ சர்வாதிகாரத்துக்குக் கீழ்ப்படுத்தப்பட்டும் உள்ள ஒரு நிலைமையில் பலாத்காரமான முறையில் நடாத்தப்பட்ட தேர்தலில் கலந்து கொள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட்ட தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் முன்நின்றதற்கு இந்த அவஸ்தையான அவசியங்களே காரணம்.

இந்தக் கட்சிகள் "தமிழ் மக்களுக்கு தீர்வு பெற்றுத்தர" ஏகாதிபத்திய வாதிகளையும் ஐக்கிய நாடுகள் சபையையும் வேண்டிக் கொண்டுள்ளன். தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் சரோஜினி யோகேஸ்வரனின் முக்கிய கோரிக்கையாக இருந்தது "பிரச்சினையை தீர்க்க" தலையிடும்படி இந்திய முதலாளிகளை கோருவதுதான். இப்போது அவர் கொலை செய்யப்பட்டுள்ள ஒரு நிலைமையினுள் புதிய தீர்வை காணுமாறு கோரும் இந்த தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் 'சிவில் அரசியல்வாதிகள்' கொலையையும் ஒரு பயங்கரவாத நடவடிக்கையாக பேர்சூட்ட வேண்டும் எனவும் இதை ஐ.நா..அமைப்பின் விதிகளுக்குள் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் கோரியுள்ளன. இது ஏகாதிபத்திய தலையீட்டுக்கு வழிவகுப்பதாகும்.

இதற்கிடையே சரோஜினி யோகேஸ்வரனின் கொலையையிட்டு கண்ணீர் வடிக்க ஜனாதிபதியும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் யூ.என்.பி.யும் மற்றும் முதலாளித்துவ கட்சிகளும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் முன்னணிக்கு பாய்ந்துள்ளன. இவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றார்கள். இந்த முதலாளித்துவக் கட்சிகளும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் முற்றிலும் மோசடியானவை. சரோஜினி யோகேஸ்வரன் கொலை பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் முதலாளி வர்க்கத்தின் இந்தச் சகல தரப்பினரதும் உதவியோடு நடாத்தும் இனவாத யுத்தத்தின் ஒரு பெறுபேறாகும். இந்த யுத்தத்தினை தென் மாகாணங்களையும் உள்ளடக்கிய ஒரு இராணுவ பொலிஸ் சர்வாதிகாரத்துக்கு மாறுவதற்கான ஒரு துரும்பாகப் பாவிக்க ஆளும் வர்க்கம் செயற்படுகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் காட்டுமிராண்டி இனவாத யுத்தத்துக்கும் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதத்துக்கும் எதிராக ஈழம் சிறீலங்கா தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை அனைத்துலக ரீதியில் ஐக்கியப்படுத்திய புதிய அரசியல் குரல் ஒலிக்க வேண்டியதன் அவசியத்தை இந்தச் சகல அரசியல் அபிவிருத்திகளும் சுட்டிக் காட்டுகின்றன. தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்யும், நிஜ ஜனநாயக ஐக்கியத்தினை அனைத்துலக சோசலிசத்தை அடிப்படையாகக் கொண்ட ஈழம் சிறீலங்கா சோசலிச குடியரசு ஒன்றியத்தை, தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர்வதன் மூலமே ஊர்ஜிதம் செய்ய முடியும்.

அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

World Socialist Web Site
http://www.wsws.com

* அமெரிக்கா:
http://www.socialequality.com


* அவுஸ்திரேலியா:
http:www.workersnews.flex.com.au

* பிரித்தானியா:
http:/www.socialequality.org.uk

* கனடா:
http://www.egalitesociale.com

* ஜேர்மன்:
http://gleichheit.de

# தோழர். கிரேஷன் நினைவு நீடுழி வாழ்க!



சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவராக விளங்கிய தோழர். கிறேஷன் கீகியனகே ஜே.வீ.பி.பாசிஸ்டுகளால் கொலை செய்யப்பட்டு இந்த ஜூன் 23ம் திகதியுடன் ஒன்பது ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்துக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்து தோழர் .கிறேஷியன் ஒரு ட்ரொட்ஸ்கிச போராளியாக விளங்கியவர். இந்த ஒன்பது ஆண்டுகள் நிறைவு பெறும் இத்தருணத்தில் அவருக்கு புரட்சிகர அஞ்சலியைச் செலுத்தும் பொருட்டு சோசலிச சமத்துவக் கட்சி எதிர்வரும் ஜூன் 24ம் திகதி சிலாபம் தொடுவாவை கிராமத்தில் நினைவுதினக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. ஆண்டுதோறும் இடம்பெறும் இந்த நினைவுதினக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நாம் சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் தொழிலாளர் பாதை வாசகர்கள் சகலரையும் வேண்டுகின்றோம். சந்தர்ப்பவாத நவசமசமாஜக் கட்சியினர் கிறேஷனை படுகொலை செய்த பாசிச ஜே.வீ.பி.யினருடன் அப்பட்டமான அரசியல் கூட்டுக்கு செல்லும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் இத்தருணத்தில் தோழர். கிறேஷனின் நினைவுதினக் கூட்டத்தின் அரசியல் முக்கியத்துவம் பன்மடங்கு அதிகரிக்கின்றது. தோழர். கீறேஷியனின் நினைவு நீடுழி வாழ்க! அனைத்துலக சோசலிசத்துக்கு போராடு!

படிப்பகம்

www.padippakam.com



# மார்க்சிச விரிவுரைகளுக்கு பேராதரவு

மார்க்சிசமும் இருபதாம் நூற்றாண்டின் பிரச்சினைகளும் என்ற தலைப்பின் ஒரு பாகமாக நான்காம் அகிலத்தின் அனைத்து லகக் குழு உலகம் பூராவும் நடாத்தி வரும் மார்க்சிச விரிவுரைத் தொடரின் ஒரு அங்கமாக சோசலிச சமத்து வக் கட்சி ஆரம்பித்த விரிவுரைகள் நாட்டின் பல பாகங்களிலு ம் வெற்றிகரமான முறையில் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சகல இடங்களிலு ம் தொழிலாளர்களும் இளைஞர்களும் புத்திஜீவிகளும் விரிவுரைகளில் அக்கறை காட்டி கலந்து கொண்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது .

இந்த விரிவுரைகள் ஏற்கனவே சிலாபம். கம்பஹா, கொழும்பு. கண்டி. கேகாலை. அட்டன் , களுத்து றை. பலப்பிட்டி முதலான நகரங்களிலு ம் கிராமங்களிலு ம் நடாத்தப்பட்டு வருகின்றன.கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களிடையே இடம்பெற்ற பிரச்சாரத்தினைத் தொடர்ந்து இந்த விரிவுரைத் தொடர் கட்டுநாயக்க-குரண 'கம்கறு செவண் வில் ஆரம்பமாகியுள்ளது . கைத்தொழில் பிராந்தியமான இரத்மலானையிலு ம் தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த பண்டாரவளையிலு ம் இந்த விரிவுரைகளை ஜூனில் இருந்து ஆரம்பிக்க சோசலிச சமத்து வக் கட்சி முடிவு செய்து ள்ளது . தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பான்மையினராக வாழும் அட்டனிலு ம் தமிழ் ஒடுக்கப்படும் மீனவர்கள் நிறைந்த உடப்புவிலு ம் இந்த விரிவுரைத் தொடரிலான விரிவுரைகள் சில வெற்றிகரமாக நிறைவு பெற்று ள்ளன. தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் இந்த இரண்டு இடங்களிலு ம் விரிவுரைகளை தமிழ் மொழியில் நடாத்தியமை இலங்கையினு ள் மார்க்சிச இயக்கத்தின் ஒரு விசேட இலட்சணமாகும்.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களுடன் நின்றுவிடாமல் இந்த விரிவுரைகள் பல்கலைக்கழகங்களிலு ம் ஆரம்ப மாகியுள்ளதோடு இந்த விரிவுரைகளில் முதல் இரண்டு விரிவுரைகளையும் களனி பல்கலைக் கழகத்தில் மே 14ம் 21ம் திகதிகளில் இளம் சோசலிஸ்டுகள் வெற்றிகரமாக நடாத்தினர்.சோசலிச சமத்து வக் கட்சியின் பொது ச் செயலாளர் விஜே டயஸ் "லியொன் ட்ரொட்ஸ்கியும் இருபதாம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்" என்ற தலைப்பிலான முதல் விரிவுரையை நிகழ்த்தினார்.இந்த விரிவுரைகளில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட 80க்கும் அதிகமான மாணவ. மாணவியர்கள் கலந்து கொண்டனர். விரிவுரையைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்து ரையாடலின் போது மாணவர்கள் தமது கருத்து க்களையும் பிரச்சினைகளையும் முன் வைத்தனர். சோ.ச.க.வின் இளைஞர் அமைப்பான இளம் சோசலிஸ்டுகள் இயக்கம் இத்தகைய விரிவுரைகளை கொழும்பு. மொரட்டுவை. பேராதனை பல்கலைக்கழகங்களிலு ம் நடாத்த உள்ளது .

இந்த விரிவுரைகள் 1998 ஜனவரியில் நான்காம் அகிலத்தின் அனைத்து லகக் குழு அவுஸ்திரேலிய அனைத்து லகத் தொழிலாளர் பாடசாலையில் - பல நாடுகளில் இருந்து வந்த தொழிலாளர்கள். மாணவர்கள். புத்திஜீவிகள் முன்நிலையில் நடாத்தியதாகும். நான்காம் அகிலத்தின் அனைத்து லகக் குழுவின் முக்கிய தலைவர்களான டேவிட் நோர்த். நிக் பீம்ஸ். பீட்டர் சுவார்ட்ஸ். விஜே டயஸ். உலக சோசலிச வெப் நிலையத்தின் அனைத்து லக பத்திரிகை எழுத்தாளர் பில் வான். புகழ்பெற்ற மார்க்சிச கலை விமர்சகர் டேவிட் வோல்ஷ். புகழ்பெற்ற ருஷ்ய வரலாற்றாசிரியர் வடிம் றொகோவின் ஆகியோரின் விரிவுரைகள் இதில் அடங்கும்.

இந்த அனைத்து லக பாடசாலையில் இடம்பெற்ற ஒன்பது விரிவுரைகளும் ஏற்கனவே ஆங்கிலத்திலு ம் ஜேர்மனிலு ம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை சிங்களத்திலு மபுரு தமிழிலு ம் வெளியிடும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன. "லியொன் ட்ரொட்ஸ்கியும் இருபதாம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்." "பூகோளமயமாக்கம்-வரலாற்று அர்த்தமும் புரட்சிகரப் பணியும்" என்ற இரண்டு விரிவுரைகளும் சிங்களத்தில் நூல் வடிவில் வெளியாகி உள்ளன. இதில் முதல் விரிவுரை தமிழில் நூல்வடிவில் வெளிவந்து ள்ளது .இன்னு ம், அச்சிட்டு நூல்வடிவில் வெளியாகவுள்ள விரிவுரைகளில் சீர்திருத்தமும் புரட்சியும்- போர்ண்ஸ்டைனு க்கு எதிரான போராட்டமும் வரலாற்று முன்நோக்கும். கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிசம்- ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் எழுச்சியும் வீழ்ச்சியும் . நிரந்தரப் புரட்சி- இந்தியாவினது ம் சீனாவினது ம் படிப்பினைகள். நிரந்தரப்புரட்சி- காஸ்ட்ரோவாதமும் குட்டிமுதலாளித்து வ தேசியவாதமும் . தொழிற்சங்கங்களின் 150 வருடகால மார்க்சிச மதிப்பீடு. கலாச்சாரமும் சோசலிசமும் சமூக சமத்து வமும் புரட்சிக் கட்சியின் வேலைத்திட்டமும் என்பன அடங்கும்.

இந்த விரிவுரைத் தொடரின் இலக்கு . கிட்டத்தட்ட எட்டு தசாப்தங்களாக ஸ்டாலினிச அதிகாரத்து வத்தினாலு ம் அதன் பாிந் து ரையாளா் களினாலு ம் காட்டிக்கொடுக்கப்பட்டு சீர்குலைக்கப்பட்ட மார்க்சிச புரட்சிகர கலாச்சாரத்தை புத்து யிர் பெறச் செய்வதன் மூலம் முதலாளித்து வத்து க்கு எதிரான போராட்டத்து க்கு தள்ளப்படும் தொழிலாளர் -ஒடுக்கப்படும் மக்களை ஆயுதபாணிகளாக்குவதேயாகும். தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர உலகக் கட்சியை கட்டி எழுப்பும் பணியுடன் பிரிக்க முடியாத வகையில் இணைந்து கொண்டுள்ள இப்போராட்டம் நான்காம் அகிலத்தின் அனைத்து லகக் குழுவின் பகுதிகளை உலகம் பூராவும் ஸ்தாபிதம் செய்யும் பணியில் முக்கிய இடம் வகிக்கின்றது . இந்த விரிவுரைகளில் கலந்து கொள்ளுமாறு தொழிலாளர்கள். ஒடுக்கப்படும் மக்கள். இளைஞர்கள். புத்திஜீவிகளைத் "தொழிலாளர் பாதை" வேண்டுகின்றது .



களனி பல்கலைக் கழகத்தில் நடாத்திய விரிவுரைகளில் கலந்து கொண்டவர்கள்



உடப்புவில் இடம்பெற்ற ஆரம்ப விரிவுரையில் கலந்து கொண்டவர்கள்

# இராணுவத் தளபதியின் அரசியல் அறிக்கையின் ஆபத்து

இராணுவத் தளபதி ரொஹான் தலுவத்த சமீபத்தில் வெகுஜனத் தொடர்புச் சாதனங் களுக்கு வெளியிட்ட கருத்துக்களையும் அவற்றைத் தொடர்ந்து வளர்சசி கண்டுள்ள அபிவிருத்திகளையும் வர்க்க உண்ர்வுள்ள தொழிலாளர். இளைஞர்கள். ஒடுக்கப்படும் மக்கள் ஒதுக்கிவிட முடியாது.

"லக்பிம" பத்திரிகைக்கு இராணுவத் தளபதி வழங்கிய ஒரு பேட்டியில் "தேசிய இனப்பிரச்சினையை தீர்க்கும் " பேரில் அரசாங்கம் கொணர்ந்துள்ள அரசியல் பிரேரணைகள் அல்லது "பக்கேஜ்" நாட்டின் இன்றைய பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாகி விடாது என அவர் குறிப்பிட்டுள்ளார். அவை இன்றைய பிரச்சினைகளை உக்கிரமாக்கவும் புதிய பல பிரச்சினைகளை தோற்றுவிக்கவுமே உதவும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

கடந்த மே 3ம் திகதி வெளியான "சண்டே டைம்ஸ்" பத்திரிகையின் முன்பக்கத் தலைப்புச் செய்தி இராணுவத்துக்கு புதிதாக 15000 பேரைத் திரட்டும் பொருட்டு நாடு பூராவும் உள்ள பாடசாலைகளில் ஒரு ஆட்திரட்டும் இயக்கம் இடம்பெற உள்ளதாக தெரிவித்தது. ஆனால் மே 7ம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய தகவல் அமைச்சர் மங்கள சமரவீர அத்தகைய திட்டம் எதுவும் கிடையாது எனக் கூறி அச்செய்தியை நிராகரித்தார் . ஆனால் இராணுவம் அமைச்சரின் அறிக்கைக்கு முரணான விதத்தில் செயல்பட்டது. தாம் கல்வி கற்ற பாடசாலைகளுக்கு சென்று 18வயது வந்த மாணவர்களை தூண்டுமாறு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு இராணுவ தளபதி எழுத்து மூலமாக ஆலோசனை கூறவுள்ளதாக முதலாளித்துவ வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் செய்தி வெளியிட்டன.

விடயம் இத்துடன் நின்றுவிடவில்லை. அமைச்சரின் இந்த அறிக்கை வெளியான 24 மணித்தியாலத்துக்குள் இராணுவ ஆட்திரட்டல் திட்டம் பற்றியும் "ஜயசிக்குறு" இராணுவ நடவடிக்கை பற்றியும் பேசுவதற்காக இராணுவத் தளபதி இராணுவத் தலைமையகத்தில் ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டினார். இந்த மகாநாடு ஆரம்பமாகுவதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்னர் அங்கு அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் ஆரிய அபேசிங்க வந்திறங்கினார்.

பாடசாலைகளை இலக்காக வைத்து இடம்பெறப்போகும் ஆட்திரட்டல் இயக்கத்தைப் பற்றிப் பேச வேண்டாம் என அவர் இராணுவத் தளபதியைக் கேட்டுக் கொண்டதாகத் தெரிகின்றது. ஆனால் அம்மகாநாட்டில் பத்திரிகையாளர்கள் அந்த ஆட்திரட்டல் பற்றிக் கேட்டபோது அத்தகைய ஒரு திட்டம் இல்லை எனக் குறிப்பிட்ட இராணுவத் தளபதி பிரச்சினையை இராணுவ அதிகாரியான ஜெனரால் வசந்த பெரேராவிடம் விட்டு வைத்தார். அக்கட்டத்தில் வசந்த பெரேரா பாடசாலைகளுக்கு சென்று பாடசாலைகளை விட்டு விலகிச் செல்பவர்களை இராணுவத்துக்கு திரட்டும் ஒரு இயக்கம் இருப்பதை ஒப்புக் கொண்டார். பின்னர் இராணுவத் தளபதியும் இதை அங்கீகரித்தார்.

இராணுவத்தின் திட்டங்களை இந்த வகையில் வெளிவெளியாக பேசுவதன் மூலம் தலை தூக்கக் கூடிய நிலைமைகளையிட்டு அமைச்சர் மங்கள சமரவீர அச்சம் அடைந்தார். இதனால் இதைத் தொடர்ந்து இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இராணுவத் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாடு பற்றிக் குறிப்பிட்ட அமைச்சர் "இராணுவம் இருப்பது அங்கு யுத்தம் செய்வதற்கு அல்லாது வெகுஜன தொடர்பு சாதனங்களுடன் கருத்தரங்கு நடாத்துவதற்கு அல்ல "எனக் கூறியதாகத் தெரிய வருகின்றது.

## குழப்பம்

இராணுவத் தளபதி இந்த விதத்தில் அரசாங்கத்தின் அரசியல் தீர்வு பொதிக்கு எதிராகவும் இராணுவத்துக்கு ஆட்திரட்டும் திட்டம் பற்றியும் பகிரங்கமாக அறிக்கை வெளியிடுவதையிட்டு குழப்பம் அடைந்த அமைச்சர்கள் பலர் ஜனாதிபதிக்கு இதைப்பற்றி முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிகின்றது.

இராணுவத் தளபதியின் அறிக்கை சிறப்பாக அரசியல் தீர்வு பொதி பற்றிய விமர்சனம் அப்பட்டமான அரசியல் அறிக்கையாகும். கடந்த யூ.என்.பி. அரசாங்க காலத்தில் இடம்பெற்றதைப் போல் சரியாகச் சொன்னால் அதைக் காட்டிலும் மேலும் உக்கிரமான முறையில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்றுவரும் இனவாத யுத்தத்தைச் சாட்டாகக் கொண்டு இராணுவம் பலப்படுத்தப்படுகின்றது: போஷிக்கப்படுகின்றது. இதன்மூலம் தமிழ் சிங்கள தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான படுகொடூரமான இராணுவச் சதிக்கான நிலைமைகள் தயார் செய்யப்படுகின்றது. இந்தத் தொழிற்பாட்டுடன் இணைந்த விதத்தில் இராணுவம் அரசியல் நடவடிக்கைகளின் உச்சிக்கு பாய்ந்து கொள்ள முயற்சிக்கின்றது. இவை பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தலைவர்களின் ஆசீர்வாதங்களுடனேயே இடம் பெறுகின்றன. இருப்பினும் இராணுவத் தளபதி இங்ஙனம் வெளிவெளியாக பேசிக் கொள்வது தமது பொதுஜன எதிர்ப்பு சர்வாதிகாரத் திட்டங்களை அம்பலப்படுத்துவதாக அமைந்து விடுமோ என்ற கலக்கத்தினாலேயே அரசாங்க அமைச்சர்கள் இதில் தலையிட்டுக் கொண்டுள்ளனர்.

அமைச்சர்களின் இந்த தலையீட்டைத் தொடர்ந்து தமது ,செயல்களினால் தலைதூக்கக் கூடிய பாரதூரமான நிலைமையையிட்டு விழிப்படைந்த இராணுவத் தளபதி "லக்பிம" பத்திரிகையின் சம்பந்தப்பட்ட பத்திரிகையாளருடன் கலந்துரையாடி ஒரு "விளக்கத்தை" அடுத்த இதழில் வெளியிட ஏற்பாடு செய்தார்.

இந்தச் சம்பவங்களின் அபிவிருத்திப் போக்கினை பாரதூரமாகக் கொள்ளும்படி வேண்டும் சோசலிச சமத்துவக் கட்சியும் தொழிலாளர் பாதையும் சமாதானத்தை தோற்றுவிப்பது பற்றி அரசாங்கத் தலைவர்கள் எழுப்பும் பொய்க் கூச்சல்களால் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் ஏமாந்து போகக் கூடாது என வேண்டுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

## ஜனாதிபதி சுகார்ட்டோ இராஜினாமா:

# இந்தோனேஷிய ஆளும் வர்க்க நெருக்கடி உக்கிரம்

இந்தோனேஷிய ஜனாதிபதி சுகார்ட்டோ இராஜினாமாச் செய்து, அவரின் உயிர் நண்பரான உப ஜனாதிபதி எச்.ஜே.ஹபிபியை ஜனாதிபதியாக நியமனம் செய்ததன் மூலம் உயிரைப் பிடித்துக் கொள்ள இந்தோனேஷிய இராணுவ ஆட்சியாளர்கள் எடுத்துள்ள நடவடிக்கை அந்நாட்டின் ஆளும் வர்க்கத்தின் வளர்ச்சி கண்டுவரும் பொருளாதார , அரசியல் நெருக்கடியை மேலும் உக்கிரமாக்க மட்டுமே துணைபோயுள்ளது.

கடந்த பல வாரங்களாக சுகார்ட்டோ ஆட்சிக்கு எதிராக வளர்ச்சி கண்டுள்ள மாணவர், ஆசிரியர்களையும் அவ்வாறே தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களையும் கொண்ட வெகுஜன இயக்கமானது முதலாளி வர்க்க ஆட்சியை ஆபத்துக்கு உள்ளாக்கும் ஒரு சமூக வெடிப்பை உருவாக்கும் என ஆளும் வர்க்கம் பீதியடைந்துள்ளது. அதனால் அத்தகைய ஒரு நிலைமையைத் தவிர்க்கும் நடவடிக்கையாக உபாயமாகவே இந்த ஹபீபியின் நியமனம் அமைந்துள்ளது.

இந்தோனேஷியாவின் நிஜ ஆட்சி தொடர்ந்தும் இராணுவத்தின் கைகளிலேயே இருந்து கொண்டுள்ளது. ஹபீபீயின் புதிய அமைச்சரவையில் இராணுவத்தின் பலம் இருந்துவருவதும் இராணுவம் வீதிகளில் இறங்கி உள்ளதும் இந்த விடயத்தை எடுத்துக் காட்டுகின்றது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக இரத்தக் களரி தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்ட இராணுவத் தளபதி ஜெனரால் வீரன்டோ பாதுகாப்பு அமைச்சர் பதவியைத் தொடர்ந்து வகித்து வருகின்றார். அத்தோடு மாஜி. தளபதி ஜெனரால் பைசால் டன்சுங் அரசியல் நடவடிக்கைகளுக்கான இணைப்பு அமைச்சராகவும் ஜெனரால் ஹெறன்டி ரோபியானோ குடியகல்வு அமைச்சராகவும் தொடர்ந்து இருந்துவருகின்றார்கள்.

1996 ஜூலையில் எதிர்க் கட்சித் தலைவியான மேகவதி சுகார்னோ புத்திரியை இந்தோனேஷிய ஜனநாயகக் கட்சியில் அவள் வகித்த பதவியில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுத்த ஜெனரால் ஸ்யர்வான் ஹமீட் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஒரு தசாப்தத்துக்கு அதிகமான காலத்தின் பின்னர் முதற் தடவையாக ஒரு இராணுவ அதிகாரி ஜெனரால் யூனுஸ் யொஸ்பியா தகவல் அமைச்சர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.


சர்வாதிகாரி சுகார்ட்டோவின் கீழ் சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளை நடைமுறைக்கிடும் பொறுப்புக்கு தோள்கொடுத்த கினன்ஜார் கட்ச சமிட்டா பொருளாதார, கைத்தொழில், நிதி நடவடிக்கை இணைப்பு அமைச்சராக அமைச்சரவையினுள் இருந்து கொண்டுள்ளார். புதிய நிதி அமைச்சர் பம்பாங், சுபியன்டோ சர்வதேச நாணய நிதியத்தின் திட்டமிடலின் கீழ் அமைக்கப்பட்ட வங்கி மறுசீரமைப்பு ஏஜன்சியின் மாஜி.தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நியமனங்கள் எல்லாம் தாம் இன்னமும் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைக்கு இணங்க செயற்படும் புள்ளிகள் என்பதை தமது ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு ஹபீபி உத்தரவாதம் செய்வதாக அமைந்துள்ளது.

சுகார்ட்டோவின் மிக நெருக்கமானவர்களான சிலர் அவரின் மகள் சித்தி ருக்மானும் அவரது வர்த்தக சகாவுமான பொபி ஹசனும் சுகார்ட்டோ குடும்பத்தின் வரி நடவடிக்கைகளைக் கண்காணித்துவந்த பவுட் பவாசியர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ள போதிலும் அவரின் அமைச்சரவையில் இருந்து வந்த 36 பேரில் 20 பேர் தமது பதவிகளைக் காத்துக் கொண்டுள்ளனர். சுகார்ட்டோவின் நீண்ட கால ஆதரவாளரான வெளிநாட்டு அமைச்சர் அலி அலடாசும் அந்தப் பதவியைத் தொடர்ந்து வகித்து வருகின்றார்.

1965 66ல் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவுடன் இடம்பெற்ற இராணுவ சதியின் மூலம் ஆட்சியில் இருத்தப்பட்ட சுகார்ட்டோவுக்கு கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் முண்டு கிடைத்துவந்தது. தமது ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் இலாப அவசியங்களுக்கு இணங்க இந்தோனேஷியாவினுள் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை நடாத்துவதே சிறந்த வழி எனக் கண்டு அவர்கள் சுகார்ட்டோ ஆட்சிக்கு ஆதரவு வழங்கினர். ஆனால் வளர்ச்சி கண்டுவந்த பொதுஜன எதிர்ப்பை நசுக்கி சர்வதேச நாணய நிதியத்தின் சிபார்சுகளின் பேரில் வெட்டல் விதிமுறைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பது சுகார்ட்டோவுக்கு கஷ்டமாகியது. அது மட்டுமன்றி அவரின் உறவினர் நண்பர் கொண்டாட்ட விதிமுறைகள் மூலம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் சுரண்டல்களுக்கு தடை ஏற்படும் என்பதையும் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டனர். இதனால் அவர்கள் சுகார்ட்டோவை ஜனாதிபதி பதவியில் இருந்து விலக்கி, அந்தப் பணிகளை மிகச் சிறந்த முறையில் இட்டு நிரப்பக் கூடிய வகையில் இந்தோனேஷிய ஆட்சியை மறு சீரமைப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் ஹபீபீ நியமனம் செய்யப்பட்டதில் இருந்தும் அவர் வழங்கியுள்ள உத்தரவாதத்தில் இருந்தும் ஏகாதிபத்திய வங்கியாளர்களும் பொருளாதார ஆய்வாளர்களும் திருப்தியடைவதாய் இல்லை. சமீபத்தில் கனடாவில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பொருளாதார மகாநாட்டின் நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைப் பணிப்பாளர் மைக்கேல் கெம்டேசு இந்தோனேஷியாவுக்கு இடைநிறுத்தப் பட்டுள்ள ச.நா.நி.கடன்களை மீண்டும் வழங்குவதில் தாம் அவசரப்படவில்லை எனக் குறிப்பிட்டார். அதே கூட்டத்தில் பேசிய அமெரிக்க திறைசேரி செயலாளர் றொபேட் றுபின் "பொருளாத்ார சீர்திருத்தங்கள். அவை நடைமுறைக் கிடப்படும் அரசியல் நிலைமையின் ஸ்திரப்பாட்டினுள்" மட்டுமே என்றார். "இது இடைக்கால(ஹபீபியின் நியமனம்) நடவடிக்கை மட்டுமே . பிரச்சினைகள் இன்னமும் தீர்ந்து போய் விட்டதாக நான் நினைக்கவில்லை " என சிங்கப்பூர் எம்.எம்.எஸ். ஸ்டார்ண்டட் அன்ட் புவர்ஸ் நிறுவனத்தின் பொருளியலாளர் அன்டி டொன் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியமும், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகளும் கோருவது என்ன? ஏகாதிபத்திய வங்கியாளர்களதும் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளதும் அவசியங்களுக்கு ஏற்ற விதத்தில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான கொடிய தாக்குதல் நிறைந்த பொருளாதார "சீர்திருத்தத்தை" நடைமுறைக்கிடுவதில் வெற்றி கண்ட ஒரு "ஜனப்பிரிய" அரசாங்கமாகும். அத்தகைய ஒரு அரசாங்கம் அந்த "சீர்திருத்த" நடவடிக்கைகளை அதை எதிர்த்து வெடித்துள்ள சமூகப் போராட்டங்களை இராணுவ பொலிஸ் அடக்குமுறைகள் மூலம் நசுக்குவதன் மூலமே பொதுமக்கள் மீது திணிக்க முடியும்.ஹபீபியின் கீழோ அல்லது அவனை வீழ்த்தி ஆட்சிக்குவரும் அமீன் ரையிஸ் ஆட்சியின் கீழோ அல்லது மேகவதி சுகார்னோ புத்திரி போன்ற வேறு முதலாளித்துவ ஆட்சியாளர்களின் கீழோ இந்தோனேஷிய தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்க நேரிடுவது என்ன? அத்தகைய கொடிய அடக்குமுறைகள் மூலம் நடைமுறைக்கிடப்படும் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் வேலைத்திட்டமேயாகும்.



சர்வாதிகாரி சுகார்ட்டோவுக்கு எதிரான மாணவர் ஆர்ப்பாட்டங்கள்

# இந்தோனேஷிய மாணவர் கிளர்ச்சிகள் வளர்ச்சி கண்டது எப்படி?

இந்தோனேஷிய ஜனாதிபதி சுகார்ட்டோ ஆட்சிக்கு எதிரான மாணவர் ஆர்ப்பாட்டங்கள், கலந்துரையாடல்கள், உண்ணாவிரதங்கள், கூட்டங்கள் பல்கலைக்கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் கல்வி நிலையங்களுக்கும் வளர்ச்சி கண்டது. ஒரு மாத காலத்தினுள் இது முழு இந்தோனேஷியாவுக்கும் பரவியது.

மாணவர் ஆர்பபாட்டங்கள் மார்ச் ஆரம்பத்தில் இந்தோனேசிய பாராளுமன்ற அமர்வுகளின் போது இந்தோனேஷிய பல்கலைக் கழகத்தின் வசதி வாய்ப்புக்கள் நிறைந்த மாணவர் தட்டினரிடையே ஆரம்பமாகியது. ஆனால் இந்த அரசியல் கிளர்ச்சி சுமாத்திரா தொடக்கம் பாலி வரையிலான 100 பல்கலைக் கழகங்களுக்கு பரவியது.இதில் ஜகார்த்தா, யொக்கியகார்த்தா , பாண்டுங், சுரபாயா ஆகிய பெரும் நகரங்களும் அடங்கும். இந்த மாணவர் எதிர்ப்புக்கள் சிறிய கூட்டங்கள் தொடக்கம் பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்கள் வரையில் இலட்சோப இலட்சம் மாணவர்களை ஈர்த்துக் கொண்டது.

இந்த மாணவர் கலவரங்களுக்கு இந்தோனேசியாவின் ஆழமான பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் எண்ணெய் வார்த்தன. மாணவர்கள் சுகார்ட்டோவை வெளியேற்று, பெரும் அரசியல் சுதந்திரம், கைதான மாணவர்களின் விடுதலை , அத்தியாவசியப் பண்டங்களுக்கு குறைந்த விலையைக் கோரி வந்தனர்.

மாணவர்கள் பல்கலைக் கழக வளாகங்களில் இருந்து வெளியேறி வீதி ஆர்ப்பாட்டங்களில் இறங்க முயன்றதும் இராணுவமும் பொலிசும் வேகமாகவும் மூர்க்கமாகவும் செயற்பட்டன.

மார்ச் 19 தென் சுமாத்திராவில் உள்ள லம்பூல் பல்கலைக் கழகத்தில் இருந்து 5000 மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய வேளையில் அவர்கள் பொலிசினாலும் இராணுவத்தினாலும் தாக்கப்பட்டனர். 100 மாணவர்களுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். 70 பேர் கைதுசெய்யப்பட்டனர். மறுநாள் மாணவர்கள் நகரத்துக்கு அணிவகுத்துச் செல்ல முயன்றபோது வன்முறை மோதுதல்கள் தொடர்ந்தன.

மார்ச் 25 மத்திய ஜாவா நகரமான கோலோவில் பாதுகாப்புப் படைகள் 1000 மாணவர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை கண்ணீர்ப்புகை, குண்டாந்தடிகள் கொண்டு தாக்கினர். குறைந்தது 39 ஆர்ப்பாட்டக்காரர்கள் காயமடைந்தனர். பல பொலிஸ் அதிகாரிகளுடன் இன்னும் பலர் காணாமல் போயினர்.

மாணவர் ஆர்ப்பாட்டங்கள் அலைமோதத் தொடங்கியதும் சுகார்ட்டோ ஆட்சியாளர்கள் எதிர்க்கட்சி குழுக்களுக்கு எதிரான தாக்குதல்களில் இறங்கினர். அவுஸ்திரேலியன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தியின் படி. பெருந்தொகையான மாணவர்களும் அரசியல் தீவிரவாதிகளும் மார்ச்சில் காணாமல் போயினர்.தலைமறைவாகும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

மனித உரிமை குழுக்களின் அறிக்கைகளின் படி தடைசெய்யப்பட்ட மக்கள் ஜனநாயகக் கட்சியின் மூன்று மாணவர்கள் சித்திரவதை செய்யப்பட்டதோடு மின்சார அதிர்ச்சி தாக்குதல்களுக்கும் உள்ளாகினர். மார்ச் 13 ம் திகதி இந்தோனேசிய ஜனநாயக ஒத்துழைப்புக்கான இயக்கத்தின் மாணவர் தலைவர் அண்டி ஆரிப் கைது செய்யப்பட்டதோடு அவர் இருப்பிடமும் தெரியாது போயிற்று.

இராணுவ கைதுகள் அதிகரித்து வந்த அதே வேளையில் சுகார்ட்டோ ஆட்சி மாணவர் தலைவர்களில் ஒரு பகுதியினரை கைக்குள் போட்டுக் கொள்ளவும் முயன்றது. மார்ச் நடுப்பகுதியில் இராணுவத் தளபதி ஜெனரால் வைரான்டோ

www.padippakam.com

பேச்சுவார்த்தைகளுக்கு கதவுகளைத் திறந்தார். "மாணவர் கோரிக்கைகள் சாதாரணமானவை"என அவர் வர்ணித்தார். "அவை உருப்படியானவையாக இருக்குமானால் அவர்களின் கோரிக்கைகளை (இராணுவம்) மதிக்கும் "என அவர் அறிவித்தார்.

ஏப்பிரல் 4ம் திகதி ஜெனரால் வைரான்டோவுடன் இடம்பெற இருந்த பெரும் பல்கலைக் கழக மாணவர் தலைவர்களின் கூட்டங்களில் மாணவர்கள் கலந்து கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் எதிர்கால பேச்சுவார்த்தைகளை நிராகரித்துவிடவில்லை. அமெரிக்க டைம் சஞ்சிகை, மாணவர் குழுக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட இந்தோனேஷிய புத்திஜீவிகள் குழு ஒன்று இந்த சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் அந்தரங்கப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியதாக அறிவித்திருந்தது.

இந்தோனேஷியாவின் பொருளாதார, அரசியல் துறையின் உயர்மட்டத்தைச் சேர்ந்த சுகார்ட்டோ எதிர்ப்பாளர்களும் மாணவர் தலைவர்களிடம் ஆதரவு கோரி வந்தனர். மார்ச்சில் யொக்கியாஹார்த்தாவில் 30000 பல்கலைக் கழக மாணவர்கள் பங்கு பற்றிய ஒரு ஆர்ப்பாட்டத்தில் இஸ்லாமிய முகம்மதியா அமைப்பின் தலைவர் அமீன் ரீஸ் கலந்து கொண்டார். சுகார்ட்டோவின் சிலையைத் தீக்கிரையாக்கியதுடன் இது உச்சக் கட்டத்தை அடைந்தது. ஆனால் இந்த அமீன் ரீஸ் அங்கு உரையாற்றுகையில் 'சுகார்ட்டோவுக்கு மற்றொரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்' எனக் கோரியபோது மாணவர்கள் கூச்சலிட்டனர். வெகுஜனங்கள் வெற்றி பெறுவர்! சுகார்ட்டோவை எதிர்ப்போம்!என மாணவர்கள் கோஷித்தனர்.

இந்தோனேஷிய முதலாளி வர்க்கம் சுகார்ட்டோவை ஆதரிப்பவர்களும் சரி, அவருக்கு ஒரு பதிலீட்டைத் தேடுபவர்களும் சரி பெரும் மாணவர் ஆர்ப்பாட்டங்களுக்கும் பரந்த அளவிலான தொழிலாளர் வேலைநிறுத்தங்களுக்கும் சிறு விவசாயிகள், நகர்ப்புற, கிராமப்புற ஏழைகள் எதிர்ப்புக்களுக்கும் அடிப்படையான பொருளாதார நெருக்கடியைப் பற்றியே அக்கறை கொண்டிருந்தனர்.

சுகார்ட்டோ ஆட்சியாளர்களின் புள்ளிவிபரங்கள் குறைவாக இருந்தாலும் இந்தோனேசியாவில் இன்று 8.7 மில்லியன் மக்கள் வேலையற்று உள்ளனர். மற்றொரு 18.4 மில்லியன் மக்கள் அரைகுறை வேலைசெய்பவர்களாக உள்ளனர். உழைப்புப் படையில் 30வீதமானோர் போதிய உணவு, உறைவிடம், ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய வருமானத்தை பெறுவதற்கான தொழில் இல்லாது உள்ளனர்.

ஜகார்த்தாவில் ஒரு மாதக் குறைந்த பட்ச சம்பளம் 172500 ரூபியாவாகும். (இது 22 அமெரிக்க டாலர்களுக்கு சமமானது ரூபா.1320) ரூபியாவின் வீழ்ச்சிக்கு முன்னரே குறைந்த பட்சச் சம்பளம் அடிப்படைத் தேவைகளின் 92 வீதத்தையே கொள்வனவு செய்யக் கூடியதாகக் கணக்கிடப்பட்டது.

சர்வதேச தொழில் அமைப்பின்(ஐ.எல்.ஓ.) கணிப்பின்படி இந்தோனேஷியாவின் பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கு புதிதாக 10 மில்லியன் ஏழைகள் தோன்றியுள்ளனர். 1996ல் 22.5 மில்லியன்களாக இருந்த ஏழைகள் 1998ல் 32.5 மில்லியன்களாக பெருகியுள்ளனர்.

# தோட்டத் தொழிலாளர் போராட்ட படிப்பினைகள்

## சோசலிச சமத்துவக் கட்சியின் அரசியல் குழுவின் அறிக்கை-1998 மார்ச் 27

(கடந்த இதழின் தொடர்ச்சி)

தோட்டத் தொழிலாளர் போராட்டம் பொதுஜன முன்னணி அரசாங்கம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்கும் ஒரு அரசாங்கம் என தொழிற்சங்க தலைவர்களும் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ தலைவர்களும் அள்ளித் தூவி வந்த பொய்யினை தவிடுபொடியாக்கி உள்ளது. தொழிலாளர் போராட்டங்கள் நீண்டுவரும் ஒரு நிலைமையில் முதலாளித்துவ எஜமானர்கள் அரசாங்கத்தின் தலையீட்டை கோரினர். தொழிற்சங்கத் தலைவர்கள் அலரி மாளிகைக்குள் நுழைந்ததும் போராட்டத்தின் முதுகில் கத்தியால் குத்தும் சதி ஆரம்பமாகியது.

தோட்டத் தொழிலாளர் போராட்டங்கள் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் பிரமாண்டமான போராட்டங்கள் தோன்றுவதற்கான ஆரம்ப அறிகுறியாகும் என்பதை முதலாளி வர்க்கமும் அரசாங்கமும் அறிந்து கொண்டுள்ளன. இந்தச் சகல மக்களுக்கும் எதிராக கொடிய இராணுவத் தயாரிப்புக்களில் இறங்கி, பிற்போக்குச் சக்திகளை அணிதிரட்டிக் கொண்டு பாய்ந்து விழுவதற்கு அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் தனது தயாரிப்புக்களை விரைவுபடுத்தி வருகின்றன. இதை இன்று நாம் காணக் கூடியதாக உள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கம் வடக்கு கிழக்கு ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத யுத்தத்தை உக்கிரமாக்கிக் கொண்டு முன்னெடுப்பது இந்த இராணுவமயமாக்கல் நடவடிக்கையே. அதன் முக்கிய ஒரு உபாயம், தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டி விடுவதேயாகும்.

தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் நடுவில் தொழிலாளர்கள் டிக்கோயாவில் இருந்து அட்டன் வரை ஊர்வலம் சென்ற வேளையில் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் இறங்கிய சிங்கள இனவாதிகள் இடையே பொதுஜன முன்னணி , யூ.என்.பி., ஜே.வீ.பி.குண்டர்கள் இருந்தனர். மறுநாள் இந்த இனவாதிகள் தொழிலாளர்களின் சம்பளம், மற்றும் உரிமைகளை பிடுங்கிக் கொள்ள வேண்டும் எனக் கூச்சலிட்டபடி அட்டன் நகரில் தொழிலாளர் எதிர்ப்பு ஆத்திரமூட்டும் ஊர்வலத்தை நடாத்தினர். பொலிசாரும் இந்த இனவாதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினர்..அத்தோடு விடுதலைப் புலிகள் தோட்டத் துறையில் நுழைந்து கொண்டுள்ளதாகக் கூறி இடம்பெற்று வரும் பிரச்சாரத்தின் மத்தியில் இராணுவ பொலிஸ் ஒடுக்குமுறையின் புதிய கட்டம் ஆரம்பமாகி உள்ளது. இந்த விதத்திலேயே இனவாத யுத்தத்துக்கு தோள் கொடுப்பதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை பிளவுபடுத்துவதும் கிலியடையச் செய்து நசுக்குவதும் தயார் செய்யப்பட்டு வருகின்றது.

இதற்கிடையே யூ.என்.பி. தலைவர் வடக்கு கிழக்கு யுத்தத்தை ஆயுதப் படைகளது மனம்போன போக்கில் நடாத்திச் செல்ல இடமளிக்க வேண்டும் என கூறிக் கொண்டுள்ளார்..அத்தோடு ஜனநாயகத்தைக் காக்கும் பேரில் சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவாளர்கள் திரட்டும் வேலையையும் ஆரம்பித்துள்ளார். தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் தமது உரிமைகளின்பேரில் கிளர்ந்து எழுவதை நசுக்கும் பொருட்டு யூ.என்.பி.காரர்கள் அரசாங்கத்தை ஊக்குவிப்பதும் தயார் செய்வதும் இந்த விதத்தில் தான்.

ஏகாதிபத்தியவாதிகளின் இலாப வெறி அவசியங்களை பரவலாக்கவும் பாதுகாக்கவும் "அரசியல் ஸ்திரப்பாடு" உருவாக்கும் பேரில் பொதுஜன முன்னணி அரசாங்கமும் யூ.என்.பி.யும் தொழிற்சங்கத் தலைவர்களும் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களதும் உதவியோடு நாடு பூராவும் இராணுவ பொலிஸ் சர்வாதிகாரத்தை திணிக்கும் நிலைமைகளை அபிவிருத்தி செய்து வருவதையிட்டு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

### தோட்டத் தொழிற் சங்கங்களதும் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ, ஜே.வீ.பி.கட்சிகளதும் தொழிற்பாடு

தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டங்கள் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று நன்கு அம்பலமாகியது. 1996 ஏப்பிரல் வேலை நிறுத்தத்தின் போது இ.தொ.கா.தலைவர் அதை நடாத்தியது ஏன்? என்பதை முதலாளித்துவப் பத்திரிகைக்குப் பின்வருமாறு கூறினார்:

"நாம் அரசாங்கத்துக்கு உதவுகின்றோம். தென் மாகாணத்தினதும் வட மாகாணத்தினதும் இளைஞர்களைப் போல் தோட்டத்துறை மக்களும் குழம்பிப் போய் உள்ளனர். அவர்கள் அந்த மட்டத்தை அடைய விட்டு வைக்கக் கூடாது. நெருக்கடி எற்படுவதை ஒழித்துக் கட்ட வேண்டும். தொழிலாளர்கள் கெட்ட நடவடிக்கைகளின் தஞ்சத்தை அடைவதற்குத் தள்ளப்படுவதை தவிர்ப்பது எமக்கு அவசியம்." (த ஐலன்ட்)

அன்றும் சரி இன்றும் சரி தொழிற்சங்கத் தலைவர்கள் தோட்ட வேலைநிறுத்தத்துக்கு அழைப்புவிட நடவடிக்கை எடுத்தது தொழிலாளர்கள் தமது உரிமைகளின் பேரில் கிளர்ந்து எழும் ஒரு குமுறல் நிலைமையை அப்படியே அடித்துச் சென்று "துடைத்துக் கட்டி விடுவதேயாகும்".

இ.தொ.கா.அதிகாரத்துவத்தின் கடைகெட்ட காட்டிக் கொடுப்பினால், அந்த தோட்டத் தொழிலாளர் சங்கம் எந்தளவுக்கு தொழிலாளர்களிடையே வெறுப்புக்கு உள்ளாகியுள்ளது என்பது அதன் அங்கத்தவர்கள் தொகை 1970பதுகளில் இருந்ததை விட நூற்றுக்கு 25 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளமை காட்டுகின்றது. 1970பதுகளில் இ.தொ.கா..அங்கத்துவம் 300,000 என அறிவிக்கப்பட்டது. 1987 88 புள்ளி விபரங்களின்படி அங்கத்துவம் 164000 ஆக வீழ்ச்சி கண்டது. 1995 ஜூலை புள்ளிவிபரங்களின்படி அது 80756 ஆக மேலும் வீழ்ச்சி கண்டது. கடந்த காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் 10 இலட்சம் வாக்குக்களைத் திரட்டிக் கொள்ளும் பலம் இருப்பதாக தொண்டமான் வாயடித்துக் கொண்டார். 1996 தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தக் காட்டிக் கொடுப்பின் ஒரு வருடத்தின் பின்னர் தொண்டமானின் இ.தொ.கா.1997 மார்ச் மாகாண சபைத் தேர்தலில் படுதோல்வி கண்டது. இம்முறை வேலைநிறுத்தத்தை முடித்து வைப்பதற்கான காட்டிக் கொடுப்பு உடன்படிக்கையின் பின்னர் தொண்டமான் செய்த சிபார்சை, தோட்டத்தொழிலாளர்களின் பெரும் பான்மையினர் நிராகரித்தனர். இது இ.தொ.கா.ஆளுமை கவிழ்ந்து கொட்டியுள்ள விதத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இ.தொ.கா..அதிகாரத்துவத்தின் தலைமை பிரமுகர் என்ற வகையில் தொண்டமான் கடந்த 17 ஆண்டுகளாக யூ.என்.பி. அரசாங்கத்தின் அமைச்சராக குத்துக்கரணம் அடித்ததன் மூலம் தமது முதலாளித்துவ நலன்களை இறுக்கமாக்கிக் கொண்டுள்ளார். மறுபுறத்தில் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் பரந்த பகுதியினரான தோட்டத் தொழிலாளரை நசுக்கி, ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியை கட்டிக் காக்கும் தலைமை ஏசன்சியாக மாறிக் கொண்டுள்ளது.

தொண்டமானை எதிர்த்து தொழிலாளர் பயணம் செய்கையில் அவருடன் ஒரே இலையில் நக்கி வந்த பீ.சந்திரசேகரன் தொழிலாளர்களுக்கு மாற்றீடு வழங்குவதாகக் கூறி, இ.தொ.கா.வில் இருந்து பிரிந்து மலையக மக்கள் முன்னணியை அமைத்தார். இ.தொ.கா.வினுள் வசதி வாய்ப்புக்களை பங்கீட்டுக் கொள்ளும் பிரச்சினையில் அதில் இருந்து வெளியே தள்ளப்பட்ட எம்.எஸ்.செல்லச்சாமி இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தை அமைத்தார். சந்திரசேகரன் வெளியில் இறங்கியது தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுத்த அரசாங்கத்தினதும், அரசினதும் இனவாத அடக்குமுறைகளை சுரண்டுவதன் மூலம் மலையகத்துக்கு தனியான நிர்வாக குட்டி அரசு வேண்டும் எனக் கூறிக் கொண்டாகும். தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கு முடிந்தால் இன வெறியூட்டுவதன் மூலம் தமக்கு பின்னால் இழுத்துக் கொண்டு, சிங்களத் தொழிலாளர்களில் இருந்து அவர்களை பிளவுபடுத்தும் அதே வேளையில் ஏகாதிபத்தியவாதிகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய ஒரு தனியான முதலாளித்துவ சுரண்டல் குட்டி அரசை ஸ்தாபிதம் செய்வதே சந்திரசேகரனின் "மலையக முன்னணியின்" அரசியல் சாராம்சம். தொண்டமானால் தூண்டிவிடப்பட்டு யூ.என்.பி. அரசாங்கத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பீ. சந்திரசேகரனையும் அவரது சகாவான பீ.ஏ.காதரையும் சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விடுதலை செய்யும்படி நடாத்திய பிரச்சாரத்துக்கு எதிராக கூட சிறையில் நின்று கொண்டனர். இப்போது சந்திரசேகரன் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிரதி அமைச்சராக தோட்டத் தொழிலாளர்கள் உட்பட்ட சகல தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான தாக்குதலை நடாத்துபவராக மாறிக் கொண்டுள்ளனர்.

இம்முறை வேலைநிறுத்தம் நெருங்கிக் கொண்டு வந்த வேளையில் சந்திரசேகரன் அது "நிலைமைக்கு பொருந்தாத வேலை நிறுத்தம்"எனக் கூறிக் கொண்டார். இதன் பின்னர் சந்திரசேகரனும் எம்.எஸ் .செல்லச்சாமியும் தொண்டமான் உட்பட்ட ஏனைய தொழிற்சங்கத் தலைவர்களுடன் அலரி மாளிகைக்குள் நுழைந்து தொழிலாளர் போராட்டத்தை காட்டிக் கொடுக்கச் சதி செய்தனர். தோட்டத் தொழிலாளர்கள் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கைக்கு எதிராக ஆத்திரத்துடன் வேலை நிறுத்தத்தை தொடரும் ஒரு கொதிப்பு நிலையைக் கண்ட இந்த இருவரும் ஏனைய தொழிற்சங்கத் தலைவர்கள் காட்டிக் கொடுத்துவிட்டதாகக் கூறி, தொழிலாளர்களை மூன்று நாட்கள் தவறான வழியில் இறக்கும் வேலையில் ஈடுபடச் செய்து, பின்னர் வேலைக்குத் திரும்பும்படி சிபார்சு செய்தனர்.செல்லச்சாமி இன்று மீண்டும் யூ.என்.பி.யுடன் தொங்கிக் கொள்ள துடித்து வருகின்றார். தொண்டமான அதிகாரத்துவத்துக்கு பதிலாக ஒரு மாற்றீடு வழங்குவதாகக் கூறிக் கொண்ட செல்லச்சாமியினதும் சந்திரசேகரனினதும் முதலாளித்துவ வேலைத்திட்டம் இதுதான்.

ஸ்டாலினிஸ்டுகள் தலைமை தாங்கும் ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் செங்கொடிச் சங்கமும் என்.யூ.டபிள்யூ. உட்பட்ட வேறும் சில தொழிற்சங்கங்களும் அமைத்துக் கொண்டுள்ள தோட்டத் தொழிற்சங்க கூட்டு முன்னணியின் நடவடிக்கைகள் இதில் இருந்து எதுவிதத்திலும் மாறுபட்டது அல்ல. தொண்டமானுக்கு எதிரான "மாற்றீடு" எனத் தம்மை அழைத்துக் கொண்ட இந்த முன்னணி முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கைத்தேங்காயாக விளங்கி வந்ததோடு இத்தடவை தமது பேச்சுவார்த்தைகளின் தலைமை நாயகனாக தொண்டமானைப் பொறுக்கி எடுத்தனர்.

சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டு, தொழிலாளர்களுக்கு எதிரான தாக்குதலின் பங்காளிகளாகச் செயற்படும்

6ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# தோட்டத் தொழிலாளர் போராட்ட படிப்பினைகள்

5ம் பக்கத் தொடர்ச்சி

அதே வேளையில் தோட்டத் துறையில் சல்லடையாகிப் போன தமது தொழிற்சங்கங்களை தொழிலாளர்களை முதலாளிகளின் உடன்படிக்கைகளுக்கு தோள் கொடுக்க வைக்கும் பொலிஸ் வேலையில் இறக்கி இருந்தனர். இதே வேளையில் நவசமசமாஜக் கட்சி தொண்டமானின் இ.தொ.கா. தலைமையிலான தொழிற்சங்கங்கள் தோட்டந் துறையில் சம்பளப் போராட்டத்தை நடாத்தி வருவதாகக் கூறிக் கொண்டது. இதன் மூலம் தொழிற்சங்கத் தலைமைகளுக்கு வெண் சுண்ணம் பூசும் பணியில் ஈடுபட்டதன் மூலம் காட்டிக் கொடுப்பில் கூட்டுச் சேர்ந்தனர்.

இந்தத் தொழிற்சங்கங்களதும் கட்சிகளதும் காட்டிக் கொடுப்பு எந்தளவுக்கு எனக் கூறின், இவற்றைப்பயன்படுத்தி பாசிச ஜே.வீ.பி.யும் தோட்டத் தொழிலாளர்களிடையே நுழைய முதுகை நிமிர்த்திக் கொள்ள முடிந்ததுதான். ஜே.வீ.பி.என்பது பிறப்பில் இருந்தே தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரியான ஓர் அமைப்பாகும். தோட்டத் தொழிலாளர்கள் "கள்ளத் தோணிகள்" "இந்திய விஸ்தரிப்புவாதிகள்," இலங்கையின் புரட்சிக்கு எதிரான "ஐந்தாம் படை". "இலங்கைக்கு கொலராவை இறக்குவோா" என ஜெபம் செய்து ஜே.வீ.பி. தலைவர் தமது ஆரம்ப ஐந்து விரிவுரைகளில் ஒன்றில் முழு சிங்கள இனவாதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்.1989 90 காலப்பகுதியில் தமது சீடர்களைக் கொண்டு தோட்டப் பக்டரிகளை தீமூட்டி தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நீண்ட காலமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கொட்டகலை டிரேடன் தோட்டத் தொழிலாளர்கள் பக்டரியை தீமூட்டுவதற்கு வந்த ஜே.வீ.பி.கும்பலை அடித்துக் கலைத்தார்கள் என்பது வரலாற்றில் இடம்பெற்ற ஒன்றாகும்.

இம்முறை வேலைநிறுத்தத்தில் ஜே.வீ.பி.தொழிற்சங்கத் தலைவர்களின் காட்டிக் கொடுப்பை பற்றி முதலைக் கண்ணீர் வடித்ததை காணக்கூடியதாக இருந்தது. முன்நோக்கு , தலைமை பற்றிய நெருக்கடிக்கு உள்ளாகி உள்ள தொழிலாளர்கள் இடையே காலூன்றி உள்நாட்டு, வெளிநாட்டு கம்பனிகளின் பாசிச கைத்தேங்காயாக களத்தில் குதிப்பது ஜே.வீ.பி.யின் இன்றைய குத்துக்கரணத்தின் அர்த்தமாகும் என நாம் எச்சரிக்கின்றோம். கடந்த பெப்பிரவரி மாதத்தில் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தின் அன்சல் லங்கா கம்பனியில் இந்த பாசிச அமைப்பு தொழிற்சங்கத்தை அமைத்தது. அதைத் தொழிலாளர்களின் தொழில், சம்பளம், ஜனநாயக உரிமைகளை முழுமனே ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு காட்டிக் கொடுக்கும் கூட்டு ஒப்பந்தத்தின் மூலமே திணித்தது.

## புதிய ஜனநாயகக் கட்சி

இப்போது தொழிலாளர்களிடையே பதுங்கிக் கொள்ளும் புதிய ஜனநாயகக் கட்சியைப் பற்றியும் நாம் தொழிலாளர்களுக்கு எச்சரிக்கின்றோம். பீ.சந்திரசேகரனும் பீ.ஏ.காதரதும் மலையக மக்கள் முன்னணியிடம் இருந்து சுயநிர்ணய உரிமை பற்றிய சுலோகத்தை இந்த அமைப்பு முன்னணிக்குத் தள்ளியுள்ளது.

தொழிலாளர் போராட்டங்கள் நாடு பூராவும் பரந்து வரும் ஒரு காலப்பகுதி ஆரம்பமானதும் கடந்த பல தசாப்தங்களாக சமசமாஜ ஸ்டாலினிச நவசமசமாஜ இ.தொ.கா.முதலிய சந்தர்ப்பவாதிகளின் துணையோடு இலங்கை முதலாளிகள் சிங்களம் தமிழ் பேசும் தோட்ட, நகர்ப்புற தொழிலாளர்களிடையே உருவாக்கி இருந்த பிளவைக் கடந்து, வர்க்க எதிரிக்கு எதிராக அனைத்துலகவாத ஐக்கியத்தை ஸ்தாபிதம் செய்வதற்கான சந்தர்ப்பம் உருவாகின்றது. புதிய ஜனநாயகக் கட்சி சுயநிர்ணய உரிமை சுலோகத்தை தோட்டத் தொழிலாளர்களிடையே சிலம்பம் அடிக்கத் தொடங்குவது இந்நிலைமையினுள்ளேயே. அது தோட்டத் தொழிலாளர்கள் மீதான அனுதாபத்தினால் பிறந்தது அல்ல. சிங்களம் தமிழ் பேசும் தொழிலாளர்களிடையே இனவாத கோடுகளின் ஊடாக பிளவைத் தூவுவதற்கும் இனவாத இரத்தக் களரிகளுக்கான நிலைமைகளை சிருஷ்டிக்கவும் அதன் மூலம் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க ஆட்சியைக் காக்கவும் முன்வைக்கும் துரும்பாகும். உண்மையில் இந்த மத்தியதர வர்க்கக் கும்பல் தமிழ் பேசும் தொழிலாளர்களின் தோளில் ஏறி, வேறான ஒரு நிர்வாகத்தின் கீழான குட்டி அரசினை ஆட்சி புரிவதன் மூலம் ஏகாதிபத்தியவாதிகளுடன் கொடுக்கல் வாங்கல் நடாத்த கனவு கண்டு கொண்டிருப்பது நிச்சயம். இது தொழிலாளர்களுக்கு எதிராகக் கட்டியெழுப்பப்படும் ஒரு மத்தியதர வர்க்க இயக்கமாகும்.

சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகளும் இ.தொ.கா.உட்பட்ட தொழிற்சங்கங்களும் இன்று தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளுடனும் ஏகாதிபத்திய வாதிகளுடனும் அணிதிரண்டு கொண்டுள்ளனர். முன்னைய காலத்தில் முதலாளித்துவ அமைப்பினுள் சீர்திருத்தங்களுக்காக நின்றுவந்த இந்தக் கட்சிகள் இப்போது தொழிலாளர்கள் வென்றெடுத்த சகலதையும் திரும்பவும் பிடுங்கிக்கொள்ள ஆளும் வர்க்கத்துக்கு உதவி வருகின்றார்கள். இதன் மூலம் தமது "சீர்திருத்தவாதத்தை" வெளிநாட்டு மூலதனத்தின் சுரண்டலுக்கு அவசியமான நிலைமைகளை சிருஷ்டிக்கும் ஒரு ஆயுதம் ஆக்கியுள்ளனர்.

இ.தொ.கா.உட்பட்ட தொழிற் சங்கங்கள் ஒரு காலத்துக்கு முன்னர் தொழிலாளர்களின் அன்றன்றாடைய கோரிக்கைகளின் பேரில் பேரம் பேசுவதன் மூலம் முதலாளித்துவ அமைப்பினுள் "கைத்தொழில் அமைதி" யை உருவாக்கும் அமைப்புக்களாக செயற்பட்டன. தொழிற் சங்கங்கள் இந்த விதத்தில் உழைப்பு சக்திக்கு சிறந்த விலை பெற்றுக் கொள்ள பேரம் பேசும் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டன. இந்த அமைப்புக்கள் வேலைத் தலத்துடனும் "தேசிய முதலாளித்துவ அமைப்புடனும்" பிணைக்கப்பட்டவை. கடந்த இரண்டு தசாப்தங்களில் உற்பத்தி பூகோளமயமாக்கப் பட்டதோடு பாரதூரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொழிற்சங்கங்கள் கட்டுண்டு கிடந்த தேசிய கைத்தொழில்களுக்கு குழி வெட்டப் பட்டுள்ளது. தேசிய அரசினுள் முதலாளித்துவ ஏஜமானர்களுடன் பேரம் பேசும் வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சங்கங்களுக்கு குறைந்த உற்பத்தி செலவுகளை தேடி நாட்டுக்கு நாடு மாறிச் செல்லும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுடனும் அவற்றுடன் இணைந்த தேசிய முதலாளிகளுடனும் பேரம் பேசுவது தொடர்ந்தும் கடைப்பிடிக்க முடியாததாகியது.

இன்று இந்தத் தொழிற் சங்கங்கள் குறைந்த உற்பத்திச் செலவுகளை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு அதாவது ஏகாதிபத்திய முதலீட்டாளர்களுக்கு விநியோகிக்கச் செயற்படும் ஏஜன்சியாகி உள்ளன. அவை பொருளாதார ரீதியில் அதிக விளைதிறனை தொழிலாளர்களிடமிருந்து கசக்கிப் பிழியவும் குறைந்த வாழ்க்கை நிலைமைகளுக்குத் தள்ளவும் அத்தாக்குதல்களுக்கு எதிராக கிளர்ந்து எழும் தொழிலாளர்களை நசுக்கும் பொருட்டு முதலாளித்துவ அரசியல் பொலிஸ் ஏஜன்டு வேலையையும் ஏற்பதாகும். தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு எதிரான கால் விலங்காகியுள்ளது. தொழிற்சங்கத் தலைவர்களின் முன்னொருபோதும் இல்லாத அளவிலான காட்டிக் கொடுப்புகளும் முதலாளித்துவ சலுகைகளுக்கான கையேந்தல்களும் தொழிற்சங்கங்களின் இந்த பரிமாணத்தின் ஒரு வெளிப்பாடாகும்.



சம்பளப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பண்டாரவளை-குருகுந்த தோட்ட தொழிலாளர்

## புதிய முன்நோக்கும் தலைமையின் அவசியமும்

தொழிலாளர் வர்க்கத்தின் அன்றன்றாட உரிமைகளை வென்றெடுக்கவோ அல்லது பாதுகாக்கவோ இந்த அமைப்புக்களை பயன்படுத்த முடியாது. அவ்வாறே தொழிலாளர்களின் கோணத்தில் இருந்து பார்த்தால் இந்த தொழிற்சங்கங்களில் ஒப்புக் கொண்டு உயர்ந்த மட்டத்திலான போர்க் குணத்தைக் கொண்டிருந்தாலும் தமது உரிமைகளை வெற்றி கொள்ளவோ அல்லது பாதுகாக்கவோ முடியாது. தொழிலாளர் வர்க்கத்துக்கு புதிய முன்நோக்கும் புதிய தலைமையும் அவசியம். அதற்கு இடமளிக்கும் புதிய அமைப்பும் இல்லாமல் முடியாது.

ஆறு இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் சிபார்சுகளை கணக்கெடுக்காமல் நான்கு நாட்கள் வேலைநிறுத்தத்தை முன்னெடுத்ததன் மூலம் அதிகாரத்துவத்துக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டியும் ஊர்வலம் சென்றும் தொண்டமானதும் சந்திரசேகரனதும் கொடும்பாவிகளை எரித்தும் தமது ஆத்திரத்தை வெளிக்காட்டிக் கொண்டனர். தோட்டத் தொழிலாளர்களின் இந்தத் திடசங்கற்பம் மிக்க தலையீடு சகல தொழிலாளர்களுக்கும் ஒரு ஊக்குவிப்பாகும். ஆனால் இறுதியில் அவர்கள் தொழிற்சங்கங்கள் திணித்த உடன்படிக்கைகளின் கீழ் வேலைக்குத் திரும்ப நேரிட்டது. தொழிற்சங்கத்தின் உள்ளேயும் சரி, அதற்கு வெளியிலும் சரி தொழிலாளர்கள் திட்டவட்டமாகச் செல்லக் கூடிய தூரத்தை அது எடுத்துக் காட்டியது. தோட்டத் தொழிலாளர்கள் சிறைப்பட்டுக் கிடந்தது எங்கே? என்ன நெருக்கடியால்? தொழிலாளர்களுக்கு எதிராக இலாபம் கறக்கும் முதலாளித்துவ அமைப்பு குறுக்கே நின்று கொண்டது. இலாபம் சுரண்டும் முதலாளித்துவ அமைப்பு அதற்காக இன்று பூகோளரீதியாக அணிதிரண்டு தொடுக்கும் தாக்குதலில் உலகளாவிய ரீதியிலும் அதன் ஒரு பாகமாக இலங்கையின் உள்ளும் ஏற்பட்டுள்ள சமூக சமத்துவமின்மை தோட்டத் துறையினுள் உச்ச வெளிப்பாட்டை பெற்றுள்ளது. இந்த அமைப்பினுள் தொழிலாளர்களின் உரிமைகளை நாசமாக்க முடியுமே தவிர பாதுகாக்க முடியாது. இந்த அமைப்பினால் முடியாது எனின் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுக்கக் கூடியதும் பாதுகாக்கக் கூடியதுமான அமைப்பு எது? தொழிலாளர்களுக்கு அழிவுமிக்கதாக விளங்கும் இந்த முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாப்பதற்கு சபதம் பூண்ட தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் வேலைத் திட்டத்திற்கும் பதிலாக அவர்களின் உரிமைகளை பாதுகாக்கக் கூடிய வேலைத்திட்டமும் தலைமையும் அமைப்பும் என்ன? தொழிலாளர் எதிரில் தோன்றி இருந்தது இந்த அரசியல் பிரச்சினையாகும். இந்த அரசியல் பிரச்சினைகளுக்கு பதில் வழங்கக் கூடிய முன்நோக்கும் தலைமையும் இல்லாமை தோட்டத் தொழிலாளர் போராட்டத்தில முக்கிய பலவீனமாக விளங்கியது. இந்த நாட்டிலும் அவ்வாறே உலகம் பூராவும் முழுத் தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் தமது போராட்டத்தில் முகம் கொடுக்கும் தீர்க்கமான பிரச்சினை இதுவே.

நான்காம் அகிலத்தின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சி(சோ.ச.க.) ஏனைய சகல இடங்களிலும் போலவே தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் உள்ளும் தொழிலாளர்களுக்கு அவசியமான முன்நோக்கையும் தலைமையையும் வழங்குவதற்கே தலையிட்டது. தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளையும் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகிப்பதன் மூலமும் தமது பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தினை தலையிடச் செய்வதன் மூலமும் புரட்சிகரப் போராளிகள் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.இது நீண்ட காலமாக சோ.ச.க.தொடுத்துள்ள போராட்டத்தின் ஒரு பாகமாகும்.

மஸ்கேலிய தொழிலாளர் ஊர்வலத்தில் இ.தொ.கா., செங்கொடிச் சங்கத்தின் தலைவர்கள் இந்த அரசியல் போராட்டத்தில் ஈடுபட்ட சோ.ச.க. அங்கத்தவர்கள் மீது குண்டர் தாக்குதலில் ஈடுபட்டதோடு அவர்களை முதலாளித்துவ பொலிசாரிடமும் பிடித்துக் கொடுத்தனர்.ஒரு சில மணித்தியாலங்களுக்குள் தமது அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் விடுதலை செய்வதில் சோ.ச.க. வெற்றி பெற்ற போதிலும் , துரோக அதிகாரத்துவம் தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்தின் பேரில் காட்டும் கொடிய வன்மத்தையும் ஆத்திரத்தையும் காட்டிக் கொண்டனர்.

தோட்டத் தொழிலாளர்கள் நாகரீகமான வாழ்க்கை நடாத்துவதற்கு அவசியமான மாதச் சம்பளமும் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு ஏற்ப அதிகரிக்கும் சம்பளமும் நாகரீகமான வாழ்க்கைக்கு அவசியமான வீடு, கல்வி, சுகாதார வசதிகளும் குடிநீரும் சகல இளைஞர்களுக்கும் தோட்டங்களில் மட்டும் அல்லாது ஏனைய இடங்களிலும் இன வேறுபாடுகள் அற்ற தொழிலும், அனைத்து தோட்டத் தொழிலாளர்களுக்கும் குடியுரிமை முதலானவையும் அவசியம். ஆனால் இந்த அனைத்துக்கும் ஏகாதிபத்தியவாதிகளினதும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளினதும் இலாப அவசியங்கள் குறுக்கே நின்று கொண்டுள்ளது.

அப்படியானால் தோட்டத் தொழிலாளர்களுக்கு பதிலே கிடையாதா? பதில் உண்டு. தோட்டத் துறையின் உரிமையை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ்க் கொணர்ந்து, தொழிலாளர்களது அபிலாசைகளை கட்டிக் காக்கும் வகையில் மறுசீரமைப்புச் செய்வதே அதற்கான பதில். முழுத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களைப் பொறுத்தமட்டிலும் இன்று தலைநீட்டியுள்ள தீர்வு வேலைத்திட்டம் அதுவே. அதாவது, உற்பத்திச் சாதனங்கள் முதலாளிகளின் இலாபத்தைக் காப்பதற்காக அல்லாது பொதுமக்களின் அவசியங்களைக் காக்கும் வகையில் மறுசீரமைப்புச் செய்யப்படவேண்டும். அத்தகைய மறுசீரமைப்பைச் செய்வதற்கு தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் நிர்வாகம் அதாவது, தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரவேண்டும். இனவாத யுத்தத்துக்கு முடிவுகட்டி, சிங்களம் தமிழ் பேசும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் சமாதானத்துடன் வாழக்கூடிய நிலைமையை

www.padippakam.com



உருவாக்கவும் பொருளாதாரத்தின் இந்த மறுசீரமைப்பும் தீர்க்கமான முறையில் அவசியமாகியுள்ளது. தோட்டப் போராட்டத்தின் மிகவும் அடிப்படையான அனுபவம் அதுவேயாகும்.

அது அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் இணைந்து தொடுக்க வேண்டிய ஒரு போராட்டம் ஆகும். இலங்கையினுள் செயற்படும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும் ஏகாதிபத்திய மூலதனமும் முதலாளித்துவ அரசாங்கம் நடைமுறைக்கிடும் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் விதிமுறைகளையும் உலகளாவிய ரீதியில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக தூண்டிவிடும் தாக்குதலின் ஒரு பாகமாகும். அனைத்துலக மூலதனத்தின் இந்த கூட்டுத் தாக்குதலுக்கு எதிராக அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கம் ஒன்றிணைந்து அனைத்துலக சோசலிசத்துக்காக போராட வேண்டும். இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களை தம்மைச் சூழ அணிதிரட்டிக் கொண்டு, சோசலிச வேலைத்திட்டத்தினை நடைமுறைக்கிடும் பொருட்டு நடாத்த வேண்டிய அரசியல் போராட்டம். இந்த உலகப் போராட்டத்தின் ஒரு பாகமாகும். இதன் அடிப்படையில் வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளித்துவ தோட்டக் கம்பனிகள், வங்கிகள், பெரும் நிறுவனங்களை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கும் தொழிலாளர்களதும் விவசாயிகளதும் அரசாங்கத்துக்கு அதாவது சிறீலங்கா ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்துக்கு போராடும் வேலைத் திட்டத்தினை சோசலிச சமத்துவக் கட்சி முன்வைக்கின்றது.

சகல தொழிற்சங்கங்களும் இந்தப் போராட்டத்தை எதிர்க்கின்றன. கம்யூனிசத்தையும் சோசலிசத்தையும் எதிர்ப்பதாக தொண்டமான் அதிகாரத்துவம் வெளிவெளியாகக் கூறுவது. அனைத்து தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும் அந்த எதிர்ப்பினை அப்பட்டமாக வெளியிடும் விதத்திலாகும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்டங்களுடன் கட்டுப்பட்டு நின்றுவிடும் தீர்வு கிடையாது. ஏனைய வேலைத்தலங்களின் தொழிலாளர்களுக்கு அந்த வேலைத்தலங்களுடன் கட்டுப்பட்டு நின்றுவிடும் தீர்வு கிடையாததைப் போலவே இதுவும். தோட்டங்களதும் நகர்ப்புறங்களதும் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு தமது போராட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

தொழிலாளர்கள் பழைய அமைப்புக்களின் கால் விலங்குகளில் மாட்டிக் கொண்டு தமது உரிமைகளுக்கான போராட்டங்களை அபிவிருத்தி செய்ய முடியாது. தொழிலாளர்கள் தமது நிஜ பிரதிநிதிகளைக் கொண்ட தொழிலாளர் நடவடிக்கை குழுக்களை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் அவற்றின் கீழ் தமது பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய பாதுகாப்பு கமிட்டிகளை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் நாம் பிரேரிக்கின்றோம். அவற்றுள் முதலாளித்துவக் கட்சிகளின் பிரதிநிதிகளைப் போலவே தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்த கட்சிகளதும் தொழிற்சங்கங்களதும் துரோக அதிகாரத்துவங்களையும் ஊடுருவ இடம் கொடுக்கக் கூடாது. இந்த நடவடிக்கைக் குழுக்கள் ஒடுக்கப்படும் மக்களின் இளைஞர்களின் போராளி பிரதிநிதிகளை சேர்த்துக் கொள்வதன் மூலம் அவற்றை வேலைத்தலங்களுக்கு அப்பாலும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களுடன் புரட்சிகரக் கூட்டினை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் தொடுக்க வேண்டிய அரசியல் போராட்டத்தின் மட்டத்துக்குப் போராட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. தோட்டத் துறையை எடுத்துக் கொண்டால் தீர்க்கமான இந்தப் பிரச்சினை தலைநீட்டியுள்ள விதத்தைப் பாருங்கள்: தோட்டங்களின் நடுவிலும் அயலிலும் உள்ள ஏழை விவசாயிகளதும் இளைஞர்களதும் ஆதரவை தொழிலாளர் வெற்றி கொள்ளாது போனால் தொழிலாளர் இந்த ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி அவர்களுடன் கூட்டினை அமைத்துக் கொள்ளாது போனால் முதலாளி வர்க்கம் இனவாதத்தைத் தூண்டி இம்மக்களை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக பிற்போக்கு இயக்கங்களின் பின்னணியில் அணிதிரட்டிக் கொள்ளும்.

தோட்டத்துறையிலும் ஏனைய இடங்களிலும் இந்த முன்நோக்குக்காகப் போராடச் சோசலிச மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையே நடைமுறை நனவுடன் கூடிய சோசலிச போராளிகளை பயிற்றி எடுக்க வேண்டியுள்ளது. முதலாளித்துவத்தின்மகிமையைப் பற்றி கதை அளந்து கொண்டு அதன் நெருக்கடிக்கும் இலாபத்துக்கான வெறிபிடித்த போட்டிக்கும் தொழிலாளர்களை பலிகடாக்கள் ஆக்கும் முதலாளிகளுக்கும் முதலாளித்துவ ஏஜன்டுகளுக்கும் எதிராக தொழிலாளர் வர்க்க மாற்று வேலைத் திட்டத்திற்கான போராட்டத்தை கட்டியெழுப்ப வேண்டும். முதலாளித்துவ அரசியலில் இருந்து பிரிந்து, தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன அரசியல் வேலைத் திட்டத்தினைச் சூழ அணிதிரள வேண்டும். தோட்டத் தொழிலாளர் போராட்டத்தினுள் இந்தத் தீர்க்கமான அவசியம் தோன்றியது. தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையே இந்தச் சோசலிச இயக்கத்தைக் கட்டியெழுப்ப போராடுவது சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே. தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் படிப்பினைகளை கற்று, இக்கட்சியை ஒரு வெகுஜனக் கட்சியாக ஸ்தாபிதம் செய்ய இணையுமாறு நனவான தொழிலாளர்களையும் இளைஞர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் நாம் வேண்டுகின்றோம்.

## தோட்டத் தொழிலாளர் வரலாற்றில் ஒரு துளி

இன்றைய தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் படிப்பினைகளைப் படிக்க வரலாற்றின் பக்கம் திரும்புவது தீர்க்கமானது. 1930பதுகளின் கடைப் பகுதியிலும் 1940பதுகளிலும் தோட்டத் தொழிலாளர்கள் தொழிலாளர் வர்க்கத்தின் ஏனைய பகுதியினருடன் சேர்ந்து பெரிதும் பலம்வாய்ந்த நிலைமையில் இருந்து கொண்டிருந்தனர். தமது உரிமைகளைக் காக்கும் போராட்டத்தில் அவர்கள் பலம் வாயந்தவர்களாக விளங்கியதற்கு காரணம் அந்நாட்களில் அவர்களை நகர்ப்புறத் தொழிலாளர்களுடன் ஒன்றிணைந்து ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவைப் பெறும் சக்தியாக அணிதிரட்டுவதற்குப் போராடிய ட்ரொட்ஸ்கிச இயக்கத் தலைமையை பெற்றிருந்ததோடு, அத்தலைமையைக் கட்டியெழுப்புவதிலும் இணைந்து கொண்டிருந்ததேயாகும்.

அவர்களை தோட்டப் புறத்தின் வேலைத் தலங்களுடன் நிறுத்தி வைக்கும் அன்றன்றாடைய கோரிக்கைகளுடன் கால்கட்டுப் போடும் பிரித்தானிய ஏகாதிபத்தியச் சார்பு தொழிற் சங்கவாதிகளின் வேலைத் திட்டங்களுக்கு எதிராக ஏகாதிபத்தியவாதிகளுக்கும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளுக்கும் எதிராக அரசியல் ரீதியில் அணிதிரட்டும் போராட்டத்தில் ட்ரொட்ஸ்கிச இயக்கம் ஈடுபட்டிருந்தது. அன்று இந்த ட்ரொட்ஸ்கிச இயக்கம், சமசமாஜக் கட்சியில் இருந்து ஸ்டாலினிஸ்டுகளை வெளியேற்றப் போராடி 1940ல் ஒரு ட்ரொட்ஸ்கிசக் கட்சியாக முழுமனே பரிணாமம் கண்ட சமசமாஜக் கட்சியாகவும் பின்னர் அதையும் கொண்டு அமைக்கப்பட்ட இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியாகவும் விளங்கியது. 1940ல் தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் மத்தியில் சமசமாஜக் கட்சி வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்ட சுலோகங்களைப் பாருங்கள்:

(அ). கொடூரமாகச் சுரண்டும் தோட்டச் சொந்தக்காரர்களை நசுக்குவதற்கு தொழிற் சங்கங்களைச் சூழ அணிதிரண்டு சகல தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்துக்கு ஒன்றுபடுவோம்.

(ஆ). வெள்ளைக்கார தோட்டச் சொந்தக்காரர்களுக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் ஆரம்பித்துள்ள போராட்டம் ஏகாதிபத்திய அமைப்புக்கு எதிரான இன்றைய பலம் வாய்ந்த அடியாகும்.

(இ). உண்மையில் தோழர்களே, நாம் ஒன்றிணைந்து போராடுவதன் மூலம் செம் பதாகையை உயர்த்துவோமானால் சகல சுரண்டல்களும் நின்று போகும்.

(ஈ). விடுதலைக்கு புரட்சி அவசியம்..

(உ). பிரித்தானியர்கள் நிஜ யுத்தத்தை கொண்டு நடாத்துவது இலங்கையிலாகும்.

(ஊ). உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! பொலிஸ் அடக்குமுறை ஒழிக ! புரட்சி பரவட்டும்

(எ). காலனித்துவ நாடுகளின் மக்களை நசுக்குவதற்கு நாம் துணை போகக் கூடாது . இந்த அமைப்பைத் தூக்கிவீச போராட வேண்டும். சுதந்திரம் யுத்தமிடும் சக்திகள் பொறிந்து வீழ்வதன் மூலமே வெற்றி பெறும். ஏகாதிபத்திய யுத்தத்துக்கு ஆதரவு வழங்காதே !"

இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தை ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அணிதிரட்டும் ஒரு பாகமாகவே அணிதிரட்டப்பட்டது. இந்தத் தொழிலாளர் வர்க்கத்தைச் சூழ ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் போராட்டம் தொடுக்கப்பட்டது. இந்த அனைத்துலகப் போராட்டத்தினை முழு இந்தியத் துணைக்கண்டத்தின் தொழிலாளர்களையும் அணிதிரட்டிக் கொண்ட ஒரு போராட்டமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டி இருந்தது. ஆதலால் சமசமாஜக் கட்சியையும் ஒன்றிணைத்து இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது. இதன் மூலம் இலங்கை சோசலிச வெகுஜன இயக்கம் இந்தியத் துணைக்கண்டத்தின் இயக்கமாக மேலும் மேலும் பலம் கண்டது.

இந்தப் போராட்டம் தோட்டத் துறையினுள் முதலாளித்துவ அமைப்பான இலங்கை இந்திய தேசிய காங்கிரசின் முதலாளித்துவ வேலைத்திட்டத்துக்கு எதிராக இடம்பெற்றது. இந்த முதலாளித்துவ அமைப்பானது பிரித்தானிய காலனித்துவவாதிகளதும் முதலாளித்துவ தோட்டச் சொந்தக்காரர்களதும் கால்களை நக்குவதன் மூலம் தொழிலாளர்களை சாதி அடிப்படையில் கீழ்ப்படுத்தி கொன்று கொன்று வேலைவாங்கும் கங்காணி முறையைப் பாதுகாத்து வந்தது. பிற்காலத்தில் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசாக பரிணாமம் கண்டது இந்த அமைப்பே.

1947 48ல் இந்தியாவிலும் இலங்கையிலும் இந்தியத் துணைக்கண்டத்தின் ஏனைய நாடுகளிலும் சுதந்திரம் என்ற பேரில் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்தின் கைக்கு அரசியல் அதிகாரம் மாற்றப்பட்டது. அது ஸ்டாலினிஸ்டுகளின் முண்டுகோலின் அடிப்படையில் திணிக்கப்பட்ட யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய உலக அமைப்பின் ஒரு அங்கமாகியது. தேசிய முதலாளிகளுக்கு ஆட்சியைக் கைமாற்றிவிட்டு மாறிச் செல்லும்படி ஏகாதிபத்தியவாதிகளை நெருக்கியது, உலகளாவிய ரீதியிலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் மூண்ட தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் போராட்டமாகும். தோட்டத்தொழிலாளர்கள் உட்பட்ட இலங்கையின் முழுத் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் போராட்டம், ஏகாதிபத்தியத்துக்கு நெருக்கடியை உருவாக்கிய உலக வெகுஜன இயக்கத்தின் ஒரு பாகமாகியது. 1946லும் 1947லும் இலங்கையில் தோன்றிய பொதுவேலைநிறுத்தப் போராட்டங்கள் ஏகாதிபத்திய ஆட்சிக்கும் அதன் கையாட்களான முதலாளி வர்க்கத்துக்கும் சகிக்க முடியாத ஒரு சவாலாகியது.

அரசியல் அதிகாரத்தைத் தமது கரங்களுக்கு மாற்றிக் கொண்டதுதான் தாமதம் இலங்கையின் சிங்கள, தமிழ் முதலாளிகள் இருசாராரும் ஒன்றிணைந்து தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் உரிமைகளை நசுக்கித் தள்ள இறங்கியதற்குக் காரணம், இலங்கையின் ட்ரொட்ஸ்கிச இயக்கத் தலைமையில் இருந்து கொண்டிருந்த வெகுஜன இயக்கத்தை உடைத்துத் தள்ளுவதற்கேயாகும். இந்தத் தாக்குதல் 1949ல் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் ஒழித்துக் கட்டுவதற்காகவே தொடுக்கப்பட்டது. அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட்டு நின்ற தமிழ் சிங்கள தொழிலாளர்களை இனவாதத்தினால் பிளவுபடுத்தி ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க ஆட்சியைக் காப்பது முதலாளிகளின் இலக்காகியது. அது இலங்கையில் ட்ரொட்ஸ்கிச, மார்க்சிச இயக்கத்தை பலவீனமாக்கி அழித்தொழிக்கும் முயற்சியாகியது.

1949ல் இந்த மசோதா மீதான விவாதத்தில் பேசிய பீ.எல்.பீ.ஐ.தலைவரான கொல்வின் ஆர்.டி.சில்வா இது சிங்களம் தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரான இனவாத பாசிச இலட்சணங்களைக் கொண்ட ஒரு மசோதா என அம்பலப்படுத்தினார்.. அவர் இதை அம்பலப்படுத்திய விதம் வருமாறு :

"இந்த மசோதா ஏதேனும் ஒரு ஊகத்தின் ஊடாக முன்னே செல்லுமாயின் இந்த அரசாங்கம் நடைமுறைக்கிடும் அடிப்படைச் சிந்தனையோ அல்லது அரசியலோ அல்லது சமூக விஞ்ஞான அடிப்படைக் கொள்கைகளோ அரசு தேசிய இனத்துக்கும் தேசிய இனம் இனத்துக்கும் சமமாக வேண்டும் என்பது தெளிவாகின்றது. குடியுரிமைக்கான அடிப்படைக் கொள்கையாக தலைமுறையை ஸ்தாபிதம் செய்வதில் இருந்து ஊற்றெடுக்கக் கூடிய வேறு கருத்தோ அல்லது சிந்தனையோ இருக்க முடியாது. இது காலாவதியானதும் வெடித்துச் சிதறியதுமான ஒரு முன்நோக்குமாகும். ...பிற்போக்குக்கு சேவை செய்யும் பொருட்டு இந்தப் பழையதும் காலாவதியானதுமான கோட்பாடு மீண்டும் உயிரூட்டப்பட்டிருப்பது சரியாக முதலாளித்துவ அமைப்பு கவிழ்ந்து கொட்டும் இன்றைய காலப்பகுதியிலாகும். தேசிய இனத்தை இனத்துடன் சமப்படுத்தவும் அரசின் அமைப்பினுள் ஆதிபத்தியம் செலுத்தும் காரணியாக இனத்தை மாற்றவும் திட்டவட்டமாக முயற்சிக்கப்பட்டது பாசிசத்தின் கீழேயேயாகும்."

அத்தோடு இந்த மசோதாவுக்கு ஆதரவு வழங்கிய தமிழ் முதலாளி வர்க்கத்தை எச்சரிக்கும் வகையில் அது எதிர்காலத்தில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத் தாக்குதலின் ஆரம்பமாகும் எனவும் (BLPI) போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டியது. அது கூறியதாவது : "இதற்குப் பதிலாக யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் இந்தக் கண்டனங்களுக்கு உள்ளாக்கப்படுவார் எனக் கூற முடியும். (சுதேசிகள் அல்ல என்ற கண்டனம்) ஆனால் ஒரு அரசாங்கம் ஒரு சிறப்புக் குழுவுக்கு எதிராக இன எதிர்ப்புக் கொள்கையைக் கையாள தொடங்கிய கணத்தில் இருந்து ஏனைய சிறப்பு இனக்குழுக்கள் தொடர்பாகவும் சாதகமான இனக் கொள்கையை கையாள்வதை நோக்கிச் செல்வது குறுகிய நடவடிக்கை மட்டுமல்ல இலகுவான நடவடிக்கையுமாகும்."

1950ல் பீ.எல்.பீ.ஐ.வர்க்க சமரச லங்கா சமசமாஜக் கட்சியுடன் இணைந்து கொண்டது. லங்கா சமசமாஜக் கட்சி ஒரு காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமைக்காக நின்று வந்த போதிலும் பாராளுமன்றவாதத்துக்கும் தொழிற்சங்க வாதத்தினுள்ளும் தலைமூழ்கி தோட்டத் தொழிலாளர்களை அரசியல் ரீதியில் கைவிட்டது. இந்த பாராளுமன்றவாதிகளுக்கு வாக்குரிமை இல்லாத தோட்டத் தொழிலாளர்கள் பயனற்றுப் போய்விட்டார்கள். அவர்களது தோட்டத் தொழிற்சங்கங்கள் ஏனைய இடங்களின் தொழிற்சங்களைப் போல தோட்டத் தொழிலாளர்களை தொழிற்சங்கவாத பேரம்பேசல் வேலைத் திட்டத்தினுள் அடைத்துப் போடவே செயற்பட்டன. சமசமாஜக் கட்சி முதலாளி வர்க்கத்தின் பிற்போக்கு ஒடுக்குவோரின் எதிரில் அடிபணிந்து சிங்கள இனவாதத்திற்கு இயைந்து பின்வாங்கியது.

1963ல் சி.ல.சு.க. முதலாளித்துவ அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களில் ஒரு பகுதியினரை இந்தியாவிற்கு நாடுகடத்தியதன் மூலம் இனவாத பிளவுகளை மேலும் உக்கிரமாக்கும் பொருட்டு இந்திய முதலாளித்துவ அரசாங்கத்துடன் சதி செய்தது. சிரிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை திணித்தது.லங்கா சமசமாஜக் கட்சி இந்த உடன்படிக்கைக்கு முழு ஆதரவை வழங்கியது. 1964ல் சமசமாஜக் கட்சி சி.ல.சு.க.வுடன் கூட்டரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டது. இதைத் தொடர்ந்து சமசமாஜக் கட்சி

18ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

**விஜே டயஸ்**

**பாகம்-11**

1981 ஆகஸ்டின் கடைப் பகுதியில் தோட்டப் பகுதி பூராவும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட குண்டர் தாக்குதல்களைத் தொடர்ந்து ஜனாதிபதி ஜயவர்தன வழக்கம் போல் தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் மோசடியும் மலட்டுத்தனமும் கொண்ட "பேச்சுவார்த்தைகளை" மீண்டும் ஆரம்பித்தார். எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் மருகரான ஜெயரத்னம் வில்சன் கனடாவில் இருந்து வரவழைக்கப்பட்டு தரகர் வேலையில் அமர்த்தப்பட்டார்.

யூ.என்.பி.தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் நடாத்திய ஒரு தொகை "பேச்சுவார்த்தைகளின்" பின்னர் ஆகஸ்ட் 31ம் திகதி அறிக்கை வெளியாகியது. அது இடம்பெற்று வந்த உயிர். சொத்து சேதங்களையிட்டு முதலைக் கண்ணீர் வடித்து இருந்தது. மூன்று விடயங்களில் உடன்பாட்டுக்கு வந்ததாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது. அவையாவன:

1. யூ.என்.பி.யினதும் தமிழர் விடுதலைக் கூட்டணியின்தும் உயர்மட்டத் தலைவர்களின் கமிட்டி ஒன்றை ஜனாதிபதி தலைமையில் கூட்டவும் சமாதானத் தீர்வை இலக்காகக் கொண்டு கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகியுள்ள சகல பிரச்சினைகளையிட்டும் அங்கு கலந்துரையாடுவது.

2.நாடு பூராவும் சகல வன்முறை நடவடிக்கைகளையும் நிறுத்தும் பொருட்டு சகல கட்சிகளது ஒத்துழைப்பையும் உடன்பாட்டையும் பெற்றுக் கொள்ளுவது

3.மற்றும் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக மாவட்ட அபிவிருத்தி சபைகளை உரிய விதத்திலும் திருப்தியான முறையிலும் செயல்படுத்த முயற்சிப்பது

இந்த வார்த்தைகள் அழகானவை. அவை குறிப்பிடும் நோக்கங்கள் விவாதத்துக்கு இடமற்றவை. ஆனால் இந்தச் சகாப்தத்தில் முதலாளித்துவக் கட்சிகளும் அவற்றின் ஆட்சியாளர்களும் வரலாற்று ரீதியில் ஜனநாயக உரிமைகளின் எதிரிகளாக இருந்து வந்துள்ளன.

நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் செப்டம்பர் 13ம் திகதி வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் பிரதிநிதிகள் மத்தியில் பேசிய அமிர்தலிங்கம். சமரசத்தின் பேரில் "தமிழர் விடுதலைக் கூட்டணி அரைவாசித் தூரம் செல்லத் தயாராக உள்ளது" எனக் குறிப்பிட்டார். உண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கு தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக் கொண்ட பொதுமக்களின் கீழ்த் தட்டினரின் அரைப் பங்கினரை முதலாளித்துவ ஆட்சியின் கீழ் அழிவுக்குள் கைகழுவி விட்டு விடுவதற்கான தமது தயார் நிலைமையைக் காட்டிக் கொண்டது.

யூ.என்.பி.தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாக உருவானதாக அமிர்தலிங்கம் அன்று கூறிக் கொண்ட தீர்மானங்கள் அந்த முடிவை அம்பலமாக்குகின்றது :

(அ).யாழ்ப்பாணச் சம்பவங்களுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.

(இந்தத் தீர்மானத்தின் குழப்பத்தின் மூலம் அது இடம்பெறப் போகும் ஒரு விடயம் அல்ல. அதை விட மிகவும் தீர்க்கமானது என்னவெனில் யாழ்ப்பாணத்தின் பெறுமதி வாய்ந்த பொதுஜன நூல்நிலையத்துக்கு தீமூட்டியது உட்பட்ட இரத்தக் களரிகளுக்கும் படுகொலைகளுக்கும் தலைமை வகித்த சிரில் மத்தியூ. காமினி திசாநாயக்க உட்பட்ட குண்டர்கள் சகலரும் தூண்டிலில் இருந்து விடுதலை செய்யப்பட்டதேயாகும்)

ஆ.பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது. (தீக்கிரையான நூலகத்தின் மதிப்பிடமுடியாத பெறுமதியை மட்டும் கணக்கில் கொள்ளும்போது இது ஒரு பெரும் கண்துடைப்பு என்பதை புதிதாகக் கூற வேண்டியதில்லை.)

இ. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பொலிசாரின் எண்ணிக்கையை அதிகரிப்பது. (கிளர்ந்து வந்த தமிழ் மக்களை நசுக்கும் பொலிஸ் வேலையை தமிழர் விடுதலைக் கூட்டணி பொறுப்பேற்பது இதன் அர்த்தம். நவசமசமாஜக் கட்சி சிங்கள இனவாத அரச படைகளது மேலதிக தமிழ் படை அணியை "சங்கிலியன் படை" என்ற பெயரில் அழைத்து . இரத்தக் களரி அடக்குமுறைக்காக இடம்பெற்ற படுபிற்போக்கு நடவடிக்கைகளுடன் ஒப்பிடும்போது மட்டுமே இது "முற்போக்கானதாக" இருக்க முடியும்.)

ஈ. வன்முறைகள் மீண்டும் தலையெடுப்பதை தவிர்க்கும் பொருட்டு ஊர்க்காவல் படைகளை அமைப்பது.( இது முதலாளித்துவ அரசின் வன்முறை நிழலாட்டத்தை பலப்படுத்தும் பொருட்டு குண்டர் படைகளை நிரந்தரமாக்கும் ஒரு தீர்மானமாகும்.)

இந்தத் தீர்மானங்கள் அனைத்தும் பொது மக்களின் கிளர்ச்சிகளையிட்டு கிலிபிடித்த ஆளும் வர்க்கத்தின் இரு சாராரினதும் உடன்பாட்டுடன் எடுக்கப்பட்டவை.இந்தத் தீர்மானங்களில் முதலாளி வர்க்கம் ஜனநாயக உரிமைகள் சம்பந்தமாகக் காட்டும் முன்நோக்கு சம்பந்தமான பிற்போக்கு மட்டும் அல்ல பொதுமக்களின் ஆதரவை திரட்டிக் கொள்வது தொடர்பான அதனது முழு வங்குரோத்தும் அடங்கி இருந்தது.

முதலாளி வர்க்கத்தின் இந்தப் பிற்போக்கையும் வங்குரோத்தையும் தற்காலிகமாகவேனும் பூசிமெழுகுவது என்பது ஜனநாயக உரிமைகளை வெற்றி கொள்ளவும், பேணிக் காக்கவும் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர வல்லமையை நிராகரிக்கும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளது சாத்வீகத்தினதும் அவ்வாறே பயங்கரவாத நடவடிக்கைகளதும் ஆதரவினை மாறி மாறிக் கையாள்வதன் மூலமே சாத்தியமாகும்.

ஒரு புறத்தில் வடக்கில் தமிழ் குட்டி முதலாளித்துவ குழுக்கள் தனியார் பயங்கரவாத நடவடிக்கைகளை உக்கிரமாக்கின. மறுபுறத்தில் வெளிநாடுகளில் இருந்துவந்த அவர்களின் சகாக்கள் விநோதமான சுதந்திரப் பிரகடனங்களை வெளியிட்டு வந்தனர்.1982 ஜனவரி 14ம் திகதி தைப்பொங்கல் தினத்தில் லண்டனில் அமைக்கப்பட்டு இருந்த தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் பிரமுகரான கிருஷ்ணா வைகுந்தவாசனால் பிரகடனம் செய்யப்பட்ட "சுதந்திர தமிழ் ஈழம் "பிறந்த மனையிலேயே மரணத்தை தழுவிக் கொண்டது. இவர் ஏகாதிபத்திய கள்வர் குகையான ஐக்கிய நாடுகள் சபையின் ஆசீர்வாதங்களையும் சுதந்திர தமிழ் ஈழத்துக்கு வேண்டிக் கொண்டிருந்தார். இதில் இருந்து முரண்பட்டதாகத் தோன்றினாலும் தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாதத்தினை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிச வேலைத்திட்டத்தினை நிராகரித்து. துப்பாக்கிகளில் நம்பிக்கை வைத்த குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் விடுதலைப் புலிகள் அமைப்பும் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் ஏகாதிபத்திய. ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கங்களின் எதிரில் அடிபணிவதைத் தவிர வேறு தலைவிதியே இருக்கவில்லை. அது அவர்களினால் வெளியிடப்பட்ட "எமது மக்களின் விடுதலை" என்ற பெயரில் பிற்போக்கின் ஒடுக்குமுறை நிழலில் துப்பாக்கி தோட்டாக்களாக தம்மை மாற்றினர். இதன் மூலம் தாம் பிரதிநிதித்துவம் செய்த மக்களை தாச்சிக்குள் இருந்து அடுப்புக்குள் தள்ளும் திட்டமாகியது. இது முன்னரை விட இன்று தெளிவாகியுள்ளது.

இந்த இரு சாராரினது நடவடிக்கைகளும் யூ.என்.பி.யின் ஒடுக்கு முறைகளுக்கும் அவ்வாறே தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிபணிவுகளுக்கும் எதிராகப் போராடுவதாகக் காட்டிக்கொண்டாலும் தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாதத்தை புறக்கணித்து. தேசியவாதத்தின் அடிப்படையில் முன்னெடுத்த அந்த எதிர்ப்புக்களின் மலட்டுத் தன்மையானது அதில் இருந்து தலைநீட்டும் பிற்போக்கின் பக்கம் இழுபட்டுப் போவது தவிர்க்க முடியாதது. வடக்கு கிழக்கில் இராணுவத்தை குவிக்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்த யூ.என்.பி.அரசாங்கம். குட்டி முதலாளித்துவ தமிழ்க் குழுக்களின் நடவடிக்கைகளை சாட்டாகக் கொண்டு பொதுமக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை உக்கிரமாக்கியது.

1982ல் ஜனாதிபதி தேர்தல் நெருங்கியதும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சிங்கள இனவாத பிரச்சாரத்திற்கு முகம் கொடுக்கும் பொருட்டு யூ.என்.டீ. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் முகஸ்துதிக்கு நடாத்தி வந்த பேச்சுவார்த்தைகளையும் நிறுத்திக் கொண்டது. பேச்சுவார்த்தைகளை நிறுத்திக் கொள்ள யூ.என்.பி.எடுத்த தீர்மானத்துக்கும் அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆரம்பம் தொட்டே எதிர்ப்புக் காட்டி வந்த குட்டி முதலாளித்துவ தமிழ் குழுக்களின் எதிர்ப்புக்களுக்கும் இடையே மாட்டிக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஒரு தர்மசங்கடமான நிலைமை ஏற்பட்டது.

அரசியல் வாழ்க்கையின் உயிரைப் பிடித்து வைக்கும் பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்கக் கோரும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டது. தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் பொருட்டு அது உள்ளார்ந்த ரீதியில் முரண்பாடான குதர்க்க வாதங்களில் இறங்கியது. 1978 அரசியலமைப்பை ஏற்காததினால் பகிஷ்கரிப்பு தீர்மானம் சரியானது என்பது அவர்களின் வாதமாக இருந்தது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக நடாத்தி வந்த பாராளுமன்ற பகிஷ்கரிப்பைக் கைவிட்டு அதனுள் பதுங்கிக் கொள்ளத் தொடங்கி நீண்ட காலமாகியது மட்டுமன்றி, 1978 அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தலிலும் போட்டியிட்டனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்கள் இனவாத நிலைப்பாட்டைக் கொண்டிருக்கையில் வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் ஜயவர்தன ஆட்சியில் இருந்து விடுபடும் எதிர்பார்ப்புக்களுடன் கொப்பகடுவைக்கு வாக்களித்து இருந்தனர். எனினும் ஜயவர்தன ஆட்சிக் காலத்துக்கு இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## சமசமாஜக் கட்சியின் ஜனாதிபதி பிரச்சாரம்

இங்கு குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு முக்கியமான அரசியல் விடயம் இருந்து கொண்டுள்ளது. அது சமசமாஜக் கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட கலாநிதி.கொல்வின் ஆர்.டி.சில்வா முகம் கொடுத்த மிகவும் தர்மசங்கடமான நிலைமையாகும்.

யூ.என்.பி. சி.ல.சு.க. தமிழ் காங்கிரஸ் என்ற முதலாளித்துவக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு எதிராக தொழிலாளர் வர்க்க கட்சி வேட்பாளர் என்ற முறையில் சமசமாஜக் கட்சித் தலைவர் போட்டிக்கு நின்றமை. தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தை ஊர்ஜிதம் செய்யக் கிடைத்த ஒரு வாய்ப்பாகக் கருதி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் சமசமாஜ வேட்பாளருக்கு ஆதரவு வழங்கியது.ஆனால் அது நிபந்தனைக்கு உட்பட்டு இருந்தது. முதலாளித்துவக் கட்சிகளின் வேட்பாளர்களிற்கு எதிரான நிலைப்பாட்டின் அடிப்படையில் பொதுமக்களிடையே செல்வது என்பதன் அர்த்தம். முதலாளி வர்க்கத்துக்கு எதிராக உறுதியாகப் போராடக் கூடிய வர்க்கமான தொழிலாளர் வர்க்கத்தின் வரலாற்றுப் பணிக்குப் பொருத்தமான மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பொதுமக்களை அணிதிரட்டப் போராடுவதாகும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விடுத்த அந்த யோசனையை நிராகரித்த சமசமாஜத் தலைவர். தமது பொதுஜன முன்னணி பிற்போக்கிற்குப் பொருத்தமான விதத்தில் இன. மத . சாதி. முதலாளித்துவச் சார்பு மேடையிலேயே நின்று கொண்டிருந்தார்.

தாம் நின்று கொண்டிருந்த முதலாளித்துவச் சார்பு மக்கள் முன்னணி வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சமசமாஜக் கட்சி ஜனாதிபதித் தேர்தலுக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்ததன் பின்னரும் கூட எச்சில் இலைகளைக் கிளறி சி.ல.சு.க.விடம் இருந்து தமக்கு ஏதும் நிவாரணம் கிடைக்குமா என மோப்பம் பிடித்து அலைந்தது. இது எந்தளவுக்கு அசிங்கமானதாக விளங்கியது தெரியுமா? 1970பதுகளின் ஆரம்ப காலத்தில் பேராதனைப் பல்கலைக் கழக உதவி விரிவுரையாளராகப் பணியாற்றும் காலத்தில் கூட்டரசாங்கத்தின் உதவியோடு ஐக்கிய நாடுகள் அமைப்பினுள் நுழைந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்து பெரும் இராஜதந்திரி வேஷம் பூண்ட பேர்டி கங்காதர என்பவர் அரை உயிருடன் கொணர்ந்த உசிதமற்ற பிரேரணையைக் கூட சமசமாஜக் கட்சியின் அரசியல் குழு கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொண்டது. இத்தகைய பிரேரணைகளில் சி.ல.சு.க.வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவை சமசமாஜ தலைவரை ஜனாதிபதியாக்கும் பொருட்டு தேர்தலில் இருந்து விலகிக் கொள்ள தீர்மானம் செய்துள்ளார் என்பதும் ஒன்றாகும்.

இது நான் சிருஷ்டித்துக் கூறும் கதை அல்ல. இது இடத்துக்கு இடம் பல தருணங்களில் சமசமாஜக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் கோட்பாட்டாளருமான ஒஸ்மண்ட் ஜயரத்ன உண்மையை ஊர்ஜிதம் செய்யும் வகையில் தமது சகாக்களுக்கு கூறியுள்ள கதையாகும். அவரின்படி கங்காதரவின் குற்றுயிர் பற்றி சமசமாஜ

படிப்பகம்

www.padippakam.com



தலைவர்கள் புரிந்து கொண்டு இருப்பது மணித்தியாலக் கணக்கான கலந்துரையாடலின் பின்னரேயாகும். இந்த நிலைமையின் கீழ் கொல்வின் ஆர்.டி.சில்வாவுக்கு சுமார் 50000 வாக்குக்கள் மட்டும் கிடைப்பது தற்செயலானதா?

குண்டர் பலத்தைப் பாவித்தும் கள்ள வாக்களிப்பின் ஊடாகவும் (எதிர் ஜனாதிபதி வேட்பாளரான கொப்பேகடுவெவின் வாக்கும் சுருட்டிக் கொள்ளப்பட்டது.) ஜனாதிபதி பதவியில் ஜயவர்தன மீண்டும் வேரூன்றிக் கொண்டதன் பின்னர் 1983 கறுப்பு ஜூலை வரையிலான மாதங்கள் தமிழர் எதிர்ப்பு வெறி பன்மடங்குகளாக பெருகிச் சென்ற காலப்பகுதியாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாளித்துவத் தன்மையில் இருந்து தோன்றிய அரசியல் வங்குரோத்தினுள் அது தலைமூழ்கிப் போய்க் கிடந்தது. தமிழ்மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைப் பற்றிக் காட்டிய அக்கறையின் அளவுக்கு அவர்களின் எதிரில் கடந்த காலத்தில் சிருஷ்டித்துக் காட்டப்படக் கூடியதாக இருந்த முதலாளித்துவ ஜனநாயக மோசடிகளின் அளவும் சிதறிப் போயிற்று.

தமக்கு என்னதான் அச்சுறுத்தல் இருந்து கொண்டிருந்த போதிலும் தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்களின் துணை இல்லாமல் வாழ முடியாத அளவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தள்ளப்பட்டது. அந்தத் "தீர்வு" தமிழ் மக்களின் உரிமைகளைக் காக்கும் அவசியத்தையோ அல்லது வல்லமையையோ அடிப்படையாகக் கொண்டு இருக்கவில்லை. இது தமது மரணத்தை இன்னும் சொற்ப காலத்துக்கேனும் தள்ளிப் போடும் எதிர்பார்ப்புக்களுடன் செய்யப்பட்ட ஒரு ஒத்திகையாகும்.

இந்தச் சமரசத்தின் பேரில் பயன்படுத்தப்பட்டவர் குட்டிமணி. ரெலோ அமைப்பின் ஆரம்பத் தலைவரான யோகச்சந்திரன் செல்வராஜ் அல்லது குட்டிமணி 1979ல் வல்வெட்டித்துறையில் பொலிஸ்காரர் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர். 1982ஆகஸ்ட் 13ம் திகதி நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டு சிறையில் தள்ளப்பட்டவர். அந்தத் தீர்ப்புக்கு எதிரான அவரின் மேன்முறையீடு உயர் நீதிமன்றத்தில் இன்னமும் விசாரிக்கப்பட்டு வந்தது.

வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினரின் மரணத்தினால் வெற்றிடமாக இருந்த தொகுதிக்கு 1978 யூ.என்.பி..அரசியலமைப்பின்படி தமிழர் விடுதலைக் கூட்டணி ஒருவரை நியமனம் செய்ய முடிந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி குட்டிமணியின் பெயரை அதற்குப் பிரேரித்து தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்தது. இதைத் தேர்தல் ஆணையாளர் அங்கீகரிக்க நேரிட்டது. இதைத் தொடர்ந்து குட்டிமணி பாராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள பாராளுமன்றத்துக்குக் கூட்டிச் செல்லுமாறு சிறை அதிகாரிக்கு உத்தரவிடுமாறு மேன்முறையிட்டு நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார். ஆனால் சிறை ஆணையாளரின் பேரில் ஆஜராகி இருந்த சொலிசிட்டர் ஜெனரால் அந்தக் கோரிக்கையை எதிர்த்தார். அத்தகைய ஒரு கோரிக்கையை பற்றித் தீர்ப்பு வழங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது என அவர் கூறினார். நீதிமன்றம் சொலிசிட்டர் ஜெனராலின் வாதத்தை ஏற்றுக் கொண்டது.

இது முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் சட்டமும் நீதிமன்றமும் செயற்படும் விதத்தைக் காட்டும் மறறொரு உதாரணமாகும். அந்த முதலாளித்துவ ஜனநாயகத்தினுள் சிறைப்பட்டுக் கொண்டு, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை பாதுகாக்க முடியும் எனக் கதையளப்போர் அந்த நாடகத்தில் நடிப்பது ஆடையுடுத்திக் கொண்டா!

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரித்தானியப் பாராளுமன்றத்துக்கு தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட வில்லியம் வில்பர் போஸ்கேயின் நியமனத்தை பல தடவைகள் நிராகரித்த பாராளுமன்றம் பின்னர் அக்கருத்தை மாற்றிக் கொண்டு அவரின் பா.உ.பதவியை அங்கீகரித்தது. அன்று முதலாளித்துவ ஆளும் வர்க்கம் வில்பர் போஸ்கே தொர்பாக அந்தளவுக்கு குரோதம் கொண்டிருந்ததற்குக் காரணம், அவர் அடிமை வர்த்தகத்தை தடை செய்யும்படி பிரச்சாரம் செய்த ஒரு சமூக சீர்திருத்தவாதியாக விளங்கியதேயாகும். அவரது சீர்திருத்த ஜனநாயக கோரிக்கைகளை முதலாளித்துவ அமைப்பின் கீழ் அடிமை முறையின் மூலம் இடம்பெறும் உழைப்பு சுரண்டலுக்கு ஒரு சவாலாக இல்லாது இருக்கும் வரை காலங்கடந்து சென்றாலும் சரி அதனுடன் சமரசத்துக்கு செல்வதற்கு ஆளும் வர்க்கம் தனது தயார் நிலையை அன்று காட்டிக் கொண்டது.ஆனால் இன்று கந்தையாகிப் போய்விட்ட முதலாளித்துவ ஜனநாயகத்தின் வரையறைகளுக்குள் ஜனநாயக உரிமைகளை வழங்கக் கூட முதலாளித்துவ ஆளும் வர்க்கம் காட்டும் எதிர்ப்பு குட்டிமணி சம்பவத்தின் மூலம் வெளிப்பட்டது. நிலமானித்துவ அமைப்புக்கு எதிராகப் போராடி தாமே ஸ்தாபிதம் செய்த ஜனநாயகம் தொடர்பாக முதலாளி வர்க்கம் அன்று காட்டியதும் இன்று காட்டிக் கொண்டுள்ளதுமான மனோபாவத்தின் வேறுபாட்டை இனங்கண்டு கொள்ள முடியாதவர்கள், முதலாளி வர்க்கத்துடன் இணைந்து கொண்டு ஜனநாயக உரிமைகளை காட்டிக் கொடுப்பவர்கள்.இதற்கு எதிரான விதிமுறையை லியொன் ட்ரொட்ஸ்கியினால் விளக்கப்பட்ட நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டுக்கு இணங்கவே தயார் செய்ய முடியும். அதாவது, முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் அரச அதிகாரத்தை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் ஜனநாயக உரிமைகளை வெற்றி கொண்டு பாதுகாக்கும் விதிமுறையாகும். அன்று புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் இன்று சோசலிச சமத்துவக் கட்சியினதும் விதிமுறை இதுவே.

தமிழ் குட்டி முதலாளித்துவப் போராளிகளுடன் உடன்பாட்டுக்கு செல்லும் அடையாளமாக ஒத்திகை பார்க்கச் சென்ற குட்டிமணியை பாராளுமன்ற உறுப்பினாராக்குவது பிழைத்துப் போனதும் தமிழர் விடுதலைக் கூட்டணி தமது கட்சியின் நீலன் திருச்செல்வத்தை அப்பதவிக்கு நியமனம் செய்தது.

## 1983 உள்ளூராட்சி சபைத் தேர்தல்

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் குட்டி முதலாளித்துவ போராளிகள் குழுக்களுக்கும் இடையேயான முரண்பாடுகள் 1983 மே மாதத்தில் இடம்பெற இருந்த மாநகர சபை, நகர சபை தேர்தல்களில் போட்டியிட அக்கட்சி தீர்மானம் செய்ததோடு உக்கிரம் கண்டது. மே மாத ஆரம்பத்தில் பொதுமக்களிடையே துண்டுப் பிரசுரம் விநியோகித்த தமிழீழ விடுதலைப் புலிகள் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி கேட்டுக் கொண்டனர். "ஈழம் விடுதலை"யை வாக்குக்களைக் கறப்பதற்கான சுலோகங்களாக பயன்படுத்துவோரை அது கடைகெட்டவர்கள் எனக் குறிப்பிட்டது. அது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான ஒரு குற்றச்சாட்டு என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த அச்சுறுத்தலைப் பற்றி ஆராய்வதற்கென நல்லூரில் கட்சி அலுவலகத்தில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணி செயற்குழு என்ன நிலைமைக்கு முகம் கொடுத்தாலும் தேர்தலில் போட்டியிடுவது எனத் தீர்மானம் செய்தது.

சிங்கள இனவாத யூ.என்.பி. ஆட்சியாளர்களுடன் சமரசம் செய்து கொண்டு தாம் நடாத்தி வந்த பாராளுமன்ற விளையாட்டுக்களினால் தமக்கு குழிபறிக்கப்பட்டு உள்ளதையிட்டு த.வி.கூ.க்கு சரியான மதிப்பீடு இருக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட்ட குட்டி முதலாளித்துவக் குழுக்களுக்கு தமிழ் பொதுமக்களின் நடைமுறை ஆதரவு இல்லாது இருந்து வந்த நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அங்கீகாரம் கிடைக்கும் என்ற நப்பாசையின் எதிர்பார்ப்பின் அடிப்படையில் நின்று கொள்வதை தவிர ஒரு முதலாளித்துவக் கட்சி என்ற முறையில் அது வேறெதையும் செய்வதில் வெற்றி பெறவில்லை. அது யூ.என்.பி.வைத்திருந்த குழியில் வீழ்ந்து போவது நிச்சயமாகியது.

தேர்தல் தினம் நெருங்கியதும் விடுதலைப் புலிகள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அவ்வாறே யூ.என்.பி. தேர்தல் இயக்கத்துக்கும் எதிரான தாக்குதல்களை தீவிரமாக்கியது. யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி கூட்டத்தில் அத்தகைய ஒரு சம்பவம் நடைபெற்றது. கூட்டத்தில் உரை நிகழ்த்த வந்த அமிர்தலிங்கம் வாகனத்தில் இருந்து இறங்கி மேடையில் ஏறியதும் அவரின் வாகனத்தை கூட்டம் இடம்பெறும் இடத்தில் இருந்து தள்ளிச் சென்ற விடுதலைப் புலிகள் அதில் ஏறி ஓட்டம் எடுத்தனர். கூட்டத்தில் இருந்தவர்களுக்கு நடுக்கம் பிடித்தது.

விடுதலைப் புலிகள் தேர்தலில் போட்டியிட்ட யூ.என்.பி.வேட்பாளர்களுக்கும் கலைத்துக் கலைத்து அடித்தனர்.ஒரே நாளில் பருத்தித்துறையில் யூ.என்.பி.வேட்பாளர் இரத்தினசிங்கமும் சாவகச்சேரி வேட்பாளர் முத்தையாவும் அவரது அந்தரங்கப் பாதுகாப்பாளரும் கொலை செய்யப்பட்டனர். இதனால் கிலியடைந்த யூ.என்.பி., தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்கள் சகலரும் உடனடியாக போட்டியில் இருந்து வாபஸ் பெற்றுக் கொண்டனர். அவர்களின் பெயர்கள் தேர்தல் சீட்டில் இருந்து அகற்றப்படாமல் போனதற்குக் காரணம், அவ்வாறு செய்ய தேர்தல் சட்டம் இடம் கொடாது போனதேயாகும். தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களுக்கும் அத்தகைய கொலை பயமுறுத்தல்கள் தொடர்ந்து விடுக்கப்பட்டு வந்ததன் பெறுபேறாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு போட்டியிட்ட அக்கட்சியின் 35 வேட்பாளர்கள் பகிரங்கமாக வாபஸ் பெற்றுக் கொண்டனர்.

தேர்தலுக்கு இன்னும் ஒரு சில தினங்கள் மட்டும் இருக்கையில் வடக்கில் இராணுவமும் பொலிசும் வீதிகளில் குவிக்கப்பட்டு இருந்த போதிலும் தேர்தல் தினத்தன்று பல இடங்களில் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றன. அன்று யாழ்ப்பாணத்தில் தேர்தல் சாவடியாக விளங்கிய சைவப்பிரகாச வித்தியாசாலையில் புகுந்த விடுதலைப் புலிகள் அங்கு காவலில் ஈடுபட்டிருந்த கோர்ப்பரல் ஜயவர்தன மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரண்டு பொலிசார் காயமடைந்தனர். ஜயவர்தனவின் ரீ56 துப்பாக்கியையும் தூக்கிச் சென்றனர்.

'ரஜரட்ட ரைபிள்' படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் வழக்கமாகச் செய்வது போல் பின்னர் வந்திறங்கி அக்கம் பக்கத்தில் இருந்த கடைகளுக்கும் வீடுகளுக்கும் தீமூட்டினர்.

இந்தத் தேர்தலில் வாக்களிக்கச் செல்லாத மக்களின் வீதம்: யாழ்ப்பாணம் 86 வீதம் சாவகச்சேரி 85 வீதம் பருத்தித்துறை 99 வீதம் வல்வெட்டித்துறை 98 வீதம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தேய்ந்து போன தேர்தலில் பின்னர் சகல மாநகர சபைகளதும் நகர சபைகளதும் ஆரம்பக் கூட்டங்களை 1983 ஜூன் 16ம் திகதி நடாத்தும்படி அரசாங்கம் கட்டளையிட்டது. ஆனால் 11 மாநகர சபைகளிலும் 36 நகர சபைகளிலும் பேருக்குத் தன்னும் கூடியது ஒன்றே ஒன்றுதான். அது பருத்தித்துறை நகர சபை.

## கறுப்பு ஜூலை

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களை இராணுவத் துப்பாக்கி முனையில் பயமுறுத்திப் பணியவைக்க முடியாது போனதால் கதிகலங்கிப் போன யூ.என்.பி.தலைவர்கள் தென்மாகாணங்களில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களிடம் பழிவாங்கும் காட்டு மிராண்டி தயாரிப்புக்களில் இறங்கினர். ஜாதிக சேவக சங்கத்தில் சேர்ந்து கொண்டிருந்த காடையர்கள் உட்பட்ட குண்டர் கும்பல்கள் சிரில் மத்தியூவின் தலைமையில் இனவாதத்துக்குத் தூபம் போட்டுக்கொண்டு, தென்மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு சொந்தமான கடைகள் வீடுகளின் முகவரிகளை திரட்டிக் கொண்டு படு பயங்கரமான படுகொலைகளுக்கும் வன்முறைகளுக்கும் ஆயத்தமாகி வந்தார்கள்.

மனித இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கப் பழக்கப்பட்ட இந்த இராட்சத படை அணிகளுக்கு சட்ட ரீதியான முகமூடியை வழங்கும் பொருட்டு அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. அது மட்டுமன்றி கொலை செய்யப்பட்டவர்களை மரண விசாரணையோ அல்லது நீதி விசாரணையோ இல்லாமல் சுட்டெரிக்கப் பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் அதிகாரத்தை வழங்கும் சட்டங்கள் அமுல் செய்யப்பட்டது.

இந்த இரத்தவெறி இனவாத தயாரிப்புக்களுக்காக வீதியில் இறங்குவதற்கான தருணத்தை இராணுவப் படை அணிகள் வரும் வரை யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நிறுத்தப்பட்டிருந்த படைகள் மீது விடுதலைப் புலிகள் போராளிகள் நடாத்திய தாக்குதல் வழங்கியது.இதில் 13 படையினரும் ஒரு இராணுவ அதிகாரியும் ஜூலை 23ம் திகதி கொல்லப்பட்டனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான படுகொலை இரத்தக் களரி இயக்கத்தை தலைநகரில் ஆரம்பிப்பதற்கென முன்கூட்டியே தயார் செய்யப்பட்டது இதற்கான குண்டர், ஆயுதம் தாங்கிய இராணுவ இயக்கத்துக்கு அங்கீகாரம் பெறும் பொருட்டு இறந்த இராணுவப் படையாட்களின் சகல சடலங்களும் கொழும்பு கனத்தையில் இடம்பெறும் தகனக் கிரியைகளுக்கு கொணரப்படுவதாக அரசாங்கம் அறிவித்தது. அது இனவாதப் படுகொலையாளர்கள் அணிதிரள விடுக்கப்பட்ட ஒரு உத்தியோகபூர்வமான அழைப்பாக விளங்கியது.

1970 77 கூட்டரசாங்க காலத்தில் சட்டரீதியானதாக்கப்பட்ட சிங்கள இனவாதத்தின் கையாட்களான சமசமாஜ ஸ்டாலினிச கட்சிகளும் இக்கட்சிகளின் எடுபிடிகளான நவசமசமாஜக் கட்சியினரும் யூ.என்.பி.யின் "சட்டத்தையும் ஒழுங்கையும்" பேணும் இயக்கத்துக்கு தோள் கொடுத்த ஜே.வீ.பி.யும் இனவாதத்தை வெளிவெளியாக அரவணைத்துக் கொண்டனர். பொதுமக்களை குழப்பியடிக்கவும் இனவாத யூ.என்.பி.குண்டர் இயக்கத்தின் செல்வாக்குக்கு அதன் ஒரு பகுதியை பலியிட்டும் நடாத்திய அரசியல் இயக்கத்தின். இந்த இனவாத பேரழிவு அரசியல் விதிமுறையை தோற்கடித்து , சிங்கள தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராக அனைத்துலகவாத அடிப்படையில் ஐக்கியப்படுத்தி வழிநடாத்த அன்று போராடியது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே. அதனால் அதன் அச்சகம், அலுவலகத்தின் முகவரிகளும் அவ்வாறே அதன் முன்னணி அங்கத்தவர்களின் முகவரிகளும் இரத்தக் களரிக்காராகளின் தாக்குதலுக்கு உள்ளாக இருந்த தனியார் இடங்களின் பட்டியலில் அடங்கி இருந்தது. இது பின்னர் வெளியான சாட்சியங்களின் மூலம் அம்பலமாகியது.

ஜூலை 24ம் திகதி கொழும்பு கனத்தையில் கூடிய இரத்த வெறிக் குண்டர்களை நன்கு தூண்டிவிடும் விதத்தில் யூ.என்.பி..அரசாங்கம் ஆத்திரமூட்டல்களில் இறங்கியது. இறுதிக் கட்டத்தில் இறந்த இராணுவ படையாட்களின் சடலங்கள் கனத்தையில் தகனம் செய்யப்படாமல் அவரவர்களின் ஊர்களில் தகனம் செய்யப்படும் என ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது. கூடியிருந்த குண்டர்கள் கும்பல் கும்பலாக பிரிந்து இராணுவ பொலிஸ் பாதுகாப்பின் கீழ் பொரளை முற்சந்தியில் அன்று மாலையே இரத்தக் களரிகளிலும் காட்டுமிராண்டி படுகொலைகளிலும் ஈடுபட்டனர். தமிழர் எதிர்ப்பு இனவாத யுத்தத்தின் திருப்பு முனையான 1983 ஜூலை முதலாளித்துவ அரச ஆதரவுடன் அந்த விதத்தில் ஆரம்பமாகியது.

—தொடரும். -

www.padippakam.com



# 1998 மே தினம் -

சோசலிச சமத்து வக் கட்சியினதும் அதன் இளைஞர் இயக்கமான இளம் சோசலிஸ்டுகளதும் 1998 மேதின ஊர்வலமும் பொது க் கூட்டமும் மிகவும் வெற்றிகரமான முறையிலும் பலம் வாய்ந்த விதத்திலு ம் அமைந்திருந்தது . கொழும்பு கொச்சிக்கடை நியூஹாம் சது க்கத்தில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்து லகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்து வக் கட்சியின் அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் உட்பட தமிழ்-சிங்கள தொழிலாளர்கள். இளைஞர்கள் ஒடுக்கப்படும் மக்கள் சுமார் 250 பேர் கலந்து கொண்டனர். இம்முறை மேதின ஊர்வலத்திலு ம் கூட்டத்திலு ம் அட்டன். மஸ்கேலிய. பண்டாரவளை போன்ற தோட்டப் பகுதிகளில் இருந்து வந்த தோட்டத் தொழிலாளர்களும் பொது ஜன முன்னணி அரசாங்கத்தின் நீண்ட கால பொலிஸ்-இராணு வ சிறைவாசத்தில் இருந்து விடுதலை செய்யப்பட்ட சோ.ச.க.அங்கத்தவர் தோழர்.செல்லையா இராஜ்குமார் தலைமையில் உடப்புவில் இருந்து வந்த மீனவர்கள். மாணவர்கள். இளைஞர்களைக் கொண்ட தமிழ் பேசும் மக்களும் கலந்து கொண்டமை ஒரு சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக விளங்கியது .

"உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள். நான்காம் அகிலத்தின் அனைத்து லகக் குழுவைக் கட்டியெழுப்பு . சோசலிச சமத்து வக் கட்சியை கட்டியெழுப்பு. அனைத்துலக சோசலிசத்துக்காகப் போராடு. பொது ஜன முன்னணி அரசாங்கத்தை வெளியேற்று . சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்துக்காகப் போராடு. வடக்கு- கிழக்கில் இருந்து இராணு வத்தை வெளியேற்று . இனவாத யுத்தத்தை நிறு த்து . சமசமாஜ- கம்யூனிஸ்ட்-நவசமசமாஜ - இ.தொ.கா.-தொழிற்சங்கவாத துரோகிகளை வெளியேற்று , புரட்சித் தலைமையைக் கட்டியெழுப்பு இந்தியத் து ணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தை நோக்கி முன்னேறு . ஜே.வீ.பி.பாசிச இயக்கத்து க்கு இடமளியாதே "போன்ற சுலோகங்களை ஊர்வலத்தினர் கோஷித்தனர். அத்தகைய சுலோகங்களைக் கொண்ட பதாகைகளையும் அவர்கள் எடுத்து ச் சென்றனர். ஊர்வலத்தின் இறு தியில் கொட்டாஞ்சேனை இரத்தினம் மைதானத்தில் சோ.ச.க. மத்திய குழு உறு ப்பினர் டபிள்யூ.ஏ.சுனில் தலைமையில் நடைபெற்ற பொது க் கூட்டத்தில் மத்திய குழு உறு ப்பினர்களான விலானி பீரிஸ். அரவிந்தன் இளம் சோசலிஸ்ட் இயக்க தேசியச் செயலாளர் மதவத்தவும் உரைநிகழ்த்தினர். கூட்டத்தின் இறு தியில் சோ.ச.க. மத்திய குழு உறு ப்பினரும் கம்கறு மாவத்த. தொழிலாளர் பாதை பத்திரிகைகளின் பிரதம ஆசிரியருமான கே.ரத்னாயக்க பிரதம உரை நிகழ்த்தினார்.


இம்முறை மே தினத்தில் கூட்டங்கள். ஊர்வலங்கள் நடாத்திய அரசியல் கட்சிகள் தமது பிற்போக்குத் தன்மையையும் பொது மக்களிடையே அவை அன்நியப்பட்டுக் கொண்டுள்ள விதத்தையும் காட்டிக் கொண்டன.பொது ஜன முன்னணியின் மே தின கூத்து க்களால் இத்தடவை கடந்த முறையை விடக் குறைந்த எண்ணிக்கையானோரையே ஈர்த்து க்கொள்ள முடிந்தது . கொட்டா ரோட்டில் இருந்து பிரதான வீதி மட்டும் தனியான மே தின ஊர்வலம் நடாத்தி மாநகரசபை மைதான பொது ஜன முன்னணி கூட்டத்திற்கு வருகை தந்திருந்த சமசமாஜக் கட்சித் தலைவர் பற்றி வீரக்கோன் மீது பாய்ந்து விழுந்த ஜனாதிபதி குமாரது ங்க . தனி ஊர்வலம் சென்றவர்களுக்கு பேச இடம்கொடுப்பது ஏன்? எனக் கேட்டதாக முதலாளித்து வப் பத்திரிகைகள் அறிக்கை செய்திருந்தன. இந்தக் குட்டை வெளிப்படுத்த வெட்கப்பட்ட வீரக்கோன் "கூட்டத்தில் பேசாதது ஏன்"? எனக் கேட்ட பத்திரிகையாளரிடம் " ஊர்வலத்தில் சென்ற களையினால் பேசவில்லை" எனக் கூறியுள்ளார்.

சிறிதுங்க ஜயசூரியவின் ஐக்கிய சோசலிஸ்ட் கட்சி. புதிய ஜனநாயகக் கட்சி போன்ற மாஓவாத கும்பல். தியச கல்வி வட்டம் போன்ற பல அமைப்புக்களுடன் சேர்ந்து " புதிய இடது சாரி முன்னணி"என்ற பெயரில் நவ சமசமாஜக் கட்சி டிமெல் பார்க்கில் நடாத்திய மேதினக் கூட்டத்திற்கு மொத்தத்தில் வருகை தந்திருந்தவர்களின் எண்ணிக்கை 130 மட்டுமே. சிங்கள முதலாளித்துவ பத்திரிகைகள் மட்டுமன்றி தமிழ் வீரகேசரி. தினக்குரல் போன்ற முதலாளித்துவப் பத்திரிகைகளாலு ம் முன்கூட்டியே தூக்கிப் பிடித்து பரந்த பிரச்சாரம் வழங்கப்பட்ட பாசிச ஜே.வீ.பி.ஊர்வலத்தில் பரந்த அலங்கார ஊர்திகள் வருகை தந்த போதிலு ம் பங்கு கொண்ட மக்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட பெரிதும் வீழ்ச்சிகண்டு போய் இருந்ததாகத் தெரிய வருகின்றது .

## எமது மே தினத்தின் நோக்கம் தொழிலாளர் வர்க்கத்தை எதிர்காலத்துக்கு தயார் செய்வதே

--சோ.ச.க.மத்திய குழு உறு ப்பினர் டபிள்யூ.ஏ.சுனில்

சோசலிச சமத்துவக் கட்சியினது ஊர்வலத்திலு ம் கூட்டத்திலு ம் கலந்து கொண்ட சோ.ச.க. அங்கத்தவர்கள். ஆதரவாளர்கள். தொழிலாளர்கள். இளைஞர்கள் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்து தமது பேச்சை ஆரம்பித்த கூட்டத் தலைவர் டபிள்யூ.ஏ.சுனில் . சோ.ச.க. கூட்டமும் ஊர்வலமும் சமசமாஜ. கம்யூனிஸ்ட். நவசமசமாஜக் கட்சிகளும் தொழிற்சங்க அதிகாரத்து வங்களும் இன்று நடாத்து ஏனைய கூட்டங்கள் ஊர்வலங்களில் இருந்து முழுமனே வேறு பட்டது எனக் கூறிப்பிட்டார். இந்தக் கூட்டத்தினது ம் ஊர்வலத்தினது ம் நோக்கம் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் அவசியமான முன்நோக்கினையும் வேலைத் திட்டத்தினையும் கலந்து ரையாடி. அவர்களை எதிர்காலத்து க்காகத் தயார் செய்வதே" எனவும் தோழர்.சுனில் குறிப்பிட்டார்.



இன்று முடிவை நோக்கி வந்து கொண்டுள்ள இருபதாம் நூற்றாண்டு. ஏகாதிபத்திய சுரண்டலில் இருந்து விடுதலை செய்யும் பொருட்டு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் முன்னெடுத்த போராட்டங்களால் நிறைந்து போய் இருந்ததோடு ஸ்டாலினிசம் உட்பட்ட துரோக அதிகாரத்து வங்கள் அந்தப் போராட்டங்களை காட்டியும் கொடுத்தன. அவ்வாறே அந்தக் காட்டிக்கொடுப்புக்களுக்கு எதிராக மார்க்ஸ். எங்கேல்ஸ் . லெனின். ட்ரொட்ஸ்கி தலைமையில் முன்னெடுக்கப்பட்ட மார்க்சிச இயக்கம் நீண்ட போராட்டத்தை முன்னெடுத்தது எனவும் அவர் சுட்டிக் காட்டினார். அந்த நூற்றாண்டின் படிப்பினைகளை ஆய்வு செய்து எதிர்காலத்து க்கு தயார் ஆகுவது அவசியம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இற்றைக்கு 109 வருடங்களுக்கு முன்னர் இரண்டாம் அகிலத்தினால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட மே தினத்தின் அடிப்படை சுலோகங்களாக எட்டு மணித்தியால வேலை நாள். தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்து லக ஐக்கியம். இராணு வவாதத்து க்கு எதிரான போராட்டம் என்பன விளங்கின. வரலாற்றில் சமூக ஜனநாயகமும். ஸ்டாலினிஸ்டுகளும் பின்னர் பப்லோவாத திரிபுவாதிகளும் கடைகெட்ட முறையில் காட்டிக் கொடுத்த விதத்தினை விபரித்த சுனில் அந்தக் காட்டிக் கொடுப்புக்களுக்கு எதிராக அடிப்படைக் கொள்கைகளைப் பேணிக் காத்தது நான்காம் அகிலத்தின் அனைத்து லகக் குழு என்பதைச் சுட்டிக் காட்டினார்.

உலக நிலைமை பற்றிய அனைத்து லகக் குழுவின் ஆய்வுகளையும் தீர்க்கதரிசனங்களையும் நிரூபிக்கும் விதத்தில் இன்று உலக முதலாளித்து வம் உலக பொருளாதார வீழ்ச்சிக்குக்கு உள்ளாகியுள்ளதாகக் குறிப்பிட்ட சுனில். தென்கிழக்கு ஆசியாவில் நிதி நிலைமை வீழ்ச்சி கண்டிருப்பது மட்டுமன்றி ஐரோப்பா. யப்பான். அமெரிக்காவைத் தழுவிய வகையில் வளர்ச்சி கண்டுவரும் உலகப் பொருளாதார நெருக்கடியையும் விளக்கினார்.இலங்கையினு ள் பொது ஜன முன்னணி அரசாங்கம் சமசமாஜ. கம்யூனிஸ்ட். நவசமசமாஜ தலைவர்களது ம் தொழிற்சங்க அதிகாரத்து வங்களின் து ணையோடும் சர்வதேச நாணய நிதியத்தினது ம் உலக வங்கியினது ம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களினது ம் வேலைத்திட்டங்களை நடைமுறைக்கு இடுவதில் ஈடுபட்டது . யூ.என்.பி. பொது ஜன முன்னணி அரசாங்கத்தின் அந்த வேலைத்திட்டத்து க்கு முண்டு கொடுக்கும் அதே வேளையில் . அரசாங்கம் வீழ்ச்சி காணு மானால் அரசாங்க சுக்கானை தமது கைக்குள் போட்டுக் கொள்ளவும் அந்த வேலைத்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கவும் ஆயத்தமாகி வருகின்றது . ஜே.வீ.பி.யானது குட்டி முதலாளித்து வத்தினரையும் மத்தியதர வர்க்கத்தின் பின்தங்கிய பகுதியினரையும் தொழிலாளர் வர்க்கத்தினு ள் இருந்து கொண்டுள்ள பின்னடைவான பகுதியினரையும் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக பாசிச இயக்கமாக அணிதிரட்டும் இலக்குடன் செயற்படுகின்றது .

தொழிலாளர் வர்க்கத்துக்கு புதிய தலைமையும் புதிய முன்நோக்கும் அவசியமாகியுள்ளது . இதை இட்டுநிரப்பக்கூடிய ஒரே இயக்கம் நான்காம் அகிலத்தின் அனைத்து லகக் குழுவும் அதன் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்து வக் கட்சியுமேயாகும்.

## அனைத்துலக இயக்கம் மட்டுமே அனைத்துலக முன்நோக்கைக் கொண்டிருக்க முடியும்

--சோ.ச.க.மத்திய குழு உறு ப்பினர் விலானி பீரிஸ்

சோசலிச சமத்து வக் கட்சி இன்று மே தினத்தைக் கொண்டாடுகையில் நான்காம் அகிலத்தின் அனைத்து லகக் குழுவின் ஏனைய பகுதிகளுடன் இணைந்து கொள்கின்றது . இன்று கொழும்பிலு ம் ஏனைய இடங்களிலு ம் 25 மேதினக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெறு கின்றன. ...அவற்றில் ஒன்று க்கு தன்னு ம் இந்த மேதினத்தைக் கொண்டாட எது விதமான அருகதையும் கிடையாது என விலானி பீரிஸ் குறிப்பிட்டார்.

மேதினத்தையும் அதனு டன் இணைந்து கொண்டுள்ள அனைத்து லகவாதத்தினது ம் விஞ்ஞானரீதியான உள்ளடக்கத்தை பற்றி விபரிக்கையில் விலானி பீரிஸ் 1848ல் மார்க்ஸ் எழுதிய கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு கூட்டத்தினரின் கவனத்தை ஈர்த்தார்:

உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியுடன் உலகத் தொழிலாளர் வர்க்கமும் வளர்ச்சி காண்பதாக மார்க்ஸ் சுட்டிக் காட்டினார்.... வளர்ச்சி கண்டுவரும் உற்பத்தி சக்திகளுக்கும் காலவதியான உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயான மோது தல் மூலம் புதிய சமுதாயத்தின் அவசியம் தோன்று கின்றது .... வர்க்கப் போராட்டம் உருவத்தில் மட்டுமே தேசியமாக உள்ளது எனவும் அது உள்ளடக்கத்தில் அனைத்து லகரீதியானதாக உள்ளதாகவும் மார்க்ஸ் அன்று சுட்டிக் காட்டினார். இன்று வர்க்கப் போராட்டம் உருவத்தில் அனைத்து லக ரீதியானதாகும் நிலைமைகள் இருந்து கொண்டுள்ளது ....". என விலானி பீரிஸ் சுட்டிக் காட்டினார்.

உற்பத்தி பூகோளமயமாக்கப்பட்டுள்ள ஒரு நிலைமையில் தொழிலாளர் வர்க்கத்திற்கு அனைத்து லக முன்னோக்கின் அவசியம் முன்னொருபோது ம் இல்லாத விதத்தில் தீர்க்கமானதாகியுள்ளதாகக் குறிப்பிட்ட விலானி பீரிஸ். பூகோளமயமாக்கத்தின் அர்த்தத்தை நிராகரித்து தொழிலாளர் வர்க்கம் தொடர்ந்து ம் தமது உரிமைகளை தேசியவாத அடிப்படையில் காத்து க் கொள்ள முடியும் எனப் போதிக்கும் அமெரிக்கன் ஸ்பார்ட்டசிஸ்ட் போன்ற மாஜி.குட்டி முதலாளித்து வ தீவிரவாத விதிமுறைகளுக்கு எதிராக தொழிலாளர்களை தொழிற்சங்க கால்விலங்குகளில் இருந்து விடுவித்து . அனைத்து லகவாத விதிமுறைகளின் அடிப்படையில் நிறு த்தி அவர்களின் போராட்டங்களுக்கு போராட வைக்க வேண்டும் எனவும் விலானி பீரிஸ் குறிப்பிட்டார்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு புதி தலைமையும் புதிய முன்நோக்கும் அவசிய

--சோ.ச.க.மத்திய குழு உறு ப்பினர் எம். அரவிந்த

சோசலிச சமத்து வக் கட்சியின் மத்திய குழு உறு ப்பினரும் சோ.ச.க.இணை அமைப்பான பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான எம்.அரவிந்தன் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"எனக்கு முன்னர் பேசிய தோழர்கள் குறிப்பிட்டது போல் இன்று கொழும்பிலு ம் இன்னு ம் பல பகுதிகளிலு ம் மேதின ஊர்வலங்களும் கூட்டங்களும் சுமார் 25 நடைபெறு கின்றன. ஆனால் ஏனைய சகல கூட்டங்களையும் ஊர்வலங்களையும் விட சோசலிச சமத்து வக் கட்சியின் மே தினக் கூட்டமும் ஊர்வலமும் முற்றிலு ம் வேறு பட்டது எமது கூட்டமும் ஊர்வலமும் மட்டுமே தொழிலாளர் வர்க்கம் முகம் கொடுத்து ள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான அனைத்து லக சோசலிச முன்நோக்கையும் வேலைத்திட்டத்தையும் முன்வைக்கின்றது .

சமசமாஜ. கம்யூனிஸ்ட் கட்சிகள் பொது ஜன முன்னணி அரசாங்கத்தினு ள் இருந்து கொண் சிங்கள-தமிழ் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக ஏகாதிபத்தி முதலீட்டாளர்களின் வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிடுவதில் ஒன்றிணைந்து கொண்டுள்ள விதத்தை சுட்டிக்காட்டிய அரவிந்தன். நவசமசமாஜக் கட்சி பொது ஜன முன்னணிக்கு வெளியில் இருந்து கொண்டு அதன் வெகுஜன விரோத விதிமுறைகளுக்கு ஆதரவு வழங்குவதாகவும் கூறிப்பிட்டார்.

தொண்டமானின் இ.தொ.கா.வும் சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியும் மற்று ம் தொழிற்சங்க அமைப்புக்களின் அதிகாரிகளும் பொது ஜன முன்னணி அரசாங்கத்து க்கு ஆதரவு வழங்கும் வகையை விளக்கிய அரவிந்தன். அந்தச் சகல து ரோகிகளுக்கும் எதிராக சோசலிச சமத்து வ கட்சி சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படை தொழிலாளர் வர்க்கத்தையும் மற்று ம் ஒடுக்கப்பட் மக்களையும் அணிதிரட்ட முன்னெடுக்கும் போராட்டங்கள் பற்றி விளக்கினார்.

## தொழிலாளர் வர்க்கத்தின் பணி, வரலாற்றை மீள நிர்மாணிப்பதே

---இளம் சோசலிஸ்டுகள் தேசிய செயலாளர் மதவ

அனைத்து லக தொழிலாளர் தினமான மே தி மார்க்சிசத்து டன் இணைந்து கொண்டுள்ளது . மார்க்சிச இயக்கத்தில் இருந்து பிரிக்க முடியாது தொழிலாளர் வர்க்கத்தின் பணி வெறு மனே தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலையை ஊர்ஜித செய்வது மட்டும் அல்ல.அது வரலாற்றினை மீள் நிர்ணயிப்பதுடன் இணைந்து கொண்டுள்ளது . தொழிலாளர் வர்க்கம் அத்தகைய வரலாற்று ப் பணியை இட்டுநிரப்பக் கூடிய ஒரே வர்க்கமாகும்.தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர பாத்திரம் முழு மனித இனத்தினது ம் தலைவிதி நிர்ணயம் செய்வது டன் இணைந்து கொண்டுள்

படிப்பகம்

www.padippakam.com



# சோசலிச சமத்துவக் கட்சி

## "சோசலிச சமத்துவக் கட்சியை அனைத்துலக ரீதியில் கட்டியெழுப்புவோம் "

### சோ.ச.க.மத்திய குழு உறுப்பினர் கே.ரத்னாயக்க

"சோசலிச சமத்துவக் கட்சியினரான நாம் இந்தக் கூட்டத்தினை வெற்றிகரமான முறையில் நடாத்திய ஒரு பலம்வாய்ந்த ஊர்வலத்தின் பின்னர் நடாத்துகின்றோம்.எமது மே தினக் கூட்டத்திலும் ஊர்வலத்திலும் சிங்கள, தமிழ் தொழிலாளர்களும் இளைஞர்களும் ஒடுக்கப்படும் மக்களும் ஒன்றிணைந்து கலந்து கொள்வதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம். அது சோசலிச சமத்துவக் கட்சி அனைத்துலக சோசலிச முன்நோக்குக்காகவும் வேலைத் திட்டத்துக்காகவும் முன்னெடுக்கும் போராட்டம் பலனளித்து வருவதை காட்டிக் கொண்டுள்ளது.

தீவின் பல்வேறு பகுதிகளின் தொழிலாளர்கள். ஒடுக்கப்படும் மக்கள்,இளைஞர்கள் மத்தியில் உள்ள நனவான பகுதியினர் இந்த மேதினத்தில் கலந்து கொண்டாலும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கும் விடுதலைப் புலிகளின் பயங்கரங்களுக்கும் மத்தியில் சோசலிச அனைத்துலகவாத வேலைத்திட்டத்துக்காக அஞ்சாது போராடும் எமது வடமாகாண தோழர்கள் இன்று இந்த மேதின ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்து கொள்ள முடியாது போயுள்ளது. நாம் அவர்களுக்கு எமது மாபெரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனக்கு முன்னர் பேசிய தோழர்கள் குறிப்பிட்டது போல் இன்று கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் மே தினக் கூட்டங்களும் ஊர்வலங்களும் பல நடைபெறுகின்றன. கொம்பனித் தெருவில் டிமெல் பார்க்கில் நவ சமசமாஜக் கட்சியும் ஐக்கிய சோசலிசக் கட்சியும் தியச கல்வி வட்டமும் இன்னும் பல மாஜி.தீவிரவாதிகளும் சேர்ந்து "புதிய இடதுசாரி முன்னணி ".அமைக்கும் பெயரில் கூட்டம் நடாத்துகின்றார்கள். சமீபகால அரசியலை எடுத்துக் கொண்டால் அவர்கள் இந்த புதிய இடதுசாரி முன்னணிகளை அமைத்துக் கொண்டிருப்பது இது நான்காவது தடவையாகும். இந்த புதிய முன்னணியின் வேலைத்திட்டங்கள் அந்தளவுக்கு அப்படி ஒன்றும் புதியது அல்ல. யுத்தத்தை நிறுத்தி அரசியல் பொதியை நடைமுறைப்படுத்தல், தனியார்மயத்தை நிறுத்துதல். இன்னும் பல கோரிக்கைகளின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொடுக்கும் ஒரு இயக்கத்தை முன்னெடுப்பதே திட்டம். என்னதான் கதை அளந்தாலும் இது பழைய முதலாளித்துவச் சார்பு கரடியே.

ஹைட்பார்க்கில் மற்றொரு கூட்டம் நடாத்துகின்றார்கள். கூட்டு தொழிற்சங்க அமைப்பு என்ற பெயரில் அதை சீ.எம்.யூ.வும் வங்கி ஊழியர் சங்கமும் அஞ்சல் தொலைத் தொடர்பு ஊழியர் சங்கமும் உட்பட்ட ஒரு தொகை சங்கங்கள் அதில் சேர்ந்து கொண்டுள்ளன. தபால் ஊழியர்களின் போராட்டத்துக்கு எதிராக அத்தியாவசிய சேவை விதிகளை விதித்தும் தொழிற்சங்கத் தலைவர்களை கைது செய்தும் பொதுஜன முன்னணி அரசாங்கம் கொடிய அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. அன்று நடைபெற்ற தபால் ஊழியர்களின் அரசியல் போராட்டத்தில் இலங்கை வங்கி ஊழியர் சங்கத் தலைவர் பண்டார, அஞ்சல் அத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் என்.டி.ஹெட்டியாராச்சியும் "உயிரைத் தியாகம் செய்து போராடுவதாகக்" கூறியிருந்தார்கள். அவர்கள் "உயிரைத் தியாகம் செய்து போராடுவது" எதற்காக? அது அவர்களின் மேதின சுவரொட்டிகளில் எழுதப்பட்டு இருந்தது. சமரசத்துக்கு வாருங்கள்! என்பதே அந்தச் சுலோகம். அரசாங்கம் தபால் ஊழியர்களின் போராட்டத்தை நசுக்கும் இத்தகைய கொடிய அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ள ஒரு நிலைமையில் தொழிற்சங்கத் தலைவர்கள் சமரசத்துக்கு வாருங்கள் என அரசாங்கத்தின் எதிரில் தலைகுனிந்து நிற்பதன்மூலம் "உயிரைத் தியாகம் செய்யும்" வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். தொழிற்சங்கத் தலைவர்களால் இதைவிட வேறு எந்த ஒரு வேலைத் திட்டத்தினையும் முன்வைக்க முடியாது. முதலாளித்துவ அரசாங்கத்துக்கும் முதலாளித்துவ எஜமானர்களுக்கும் நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம் ஏதேனும் ஒரு சீர்திருத்தத்தை வெற்றி கொள்ளும் தொழிற்சங்க வேலைத்திட்டமும் தொழிற்சங்க அமைப்பு வடிவமும் இன்று வங்குரோத்தடைந்து விட்டன.

ஜே.வீ.பி. பாசிஸ்டுகள் பீ.ஆர்.சி. மைதானத்தில் ஒரு கூட்டம் நடாத்துகின்றார்கள். அவர்கள் ஒட்டியுள்ள சுவரொட்டிகளாலும் கொடிகளாலும் மதில்கள் மறைந்து விட்டன. 1988 90 காலத்தில் யூ.என்.பி.ஜனாதிபதி பிரேமதாசவுடன் சேர்ந்து தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு ஏற்படுத்திய இரத்தக் களரிகளை மூடிமழுப்ப இங்ஙனம் பிரமாண்டமான முறையில் சிவப்பு கொடிகளைக் கட்டுவதும் ஒட்டுவதும் அவசியம் என அவர்கள் நினைக்கலாம். ஜே.வீ.பி.வெளியிட்டுள்ள ஒரு துண்டுப்பிரசுரத்தில் தாம் "இருபத்தொராம் நூற்றாண்டுக்கு தயார் செய்து "வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆம். முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கமும் யூ.என்.பி.யும் பொதுமக்களிடையே அன்னியப்பட்டுப் போயுள்ள ஒரு நிலையில் இருபத்தொராம் நூற்றாண்டில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக முதலாளி வர்க்கத்தின் பாசிச ஆயுதமாக தொழிற்படுவதே அவர்களின் திட்டம் என நாம் எச்சரிக்கின்றோம்.

பொதுஜன முன்னணி மே தினத்தின் மற்றொரு திருகுதாளமாக பொதுஜன முன்னணி அரசாங்கத்தினுள் இருந்து கொண்டுள்ள சமசமாஜ, கம்யூனிஸ்ட், சிறீலங்கா மக்கள் கட்சி ஆகியன கொட்டா றோட்டில் இருந்து தனியாக ஊர்வலம் சென்று பொரளைச் சந்தியில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்கின்றார்கள். சமசமாஜக் கட்சித் தலைவர் பற்றி வீரக்கோன் வெளியிட்ட அறிக்கையில் அப்படி வேறாக ஊர்வலம் செல்வது அவர்களின் அடையாளத்தை கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகவாகும் என்றுள்ளார். அவர்களின் அடையாளம் இருப்பது பொரளைச் சந்திக்கு போகும் வரை மட்டுமே. அங்கு அவர்கள் சிறீலங்கா முதலாளித்துவ மாட்டுக் கூட்டத்துடன் சேர்ந்து கொள்கின்றார்கள்.

இந்த மே தினத்தில் தேசியவாத சந்தர்ப்பவாதக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் எந்தளவுக்கு நாற்றம் கண்டுள்ளன என்பதை நாம் இங்கு காட்டினோம். எமது மேதின ஊர்வலமும் கூட்டமும் இவை அனைத்தில் இருந்தும் முழுமனே வேறுபட்டவை. வெற்றிகரமான 1917 அக்டோபர் ரூஷ்யப் புரட்சியின் ஆறு மாதங்களுக்கு பின்னர் வந்த மே தினத்தில் புரட்சிக்கு லெனினுடன் இணைத்தலைவராக விளங்கிய லியொன் ட்றொட்ஸ்கி இஸ்வெஸ்தியா பத்திரிகைக்கு 1918 மே 1 ம் திகதி வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"மே தினத்தை ஒரேயடியாக அனைத்து நாடுகளதும் தொழிலாளர்களுக்கும் பிரத்தியட்சமாகும் விதத்தில் திட்டமிட்டதன் நோக்கம் என்ன? ஒரு உலக மத்திய நிலையமாகவும் ஒரு உலகளாவிய ரீதியிலான ஈர்ப்புடனும் புரட்சிகர செயற்பாட்டின் தனி அனைத்துலக பாட்டாளி வர்க்க அமைப்பினுள் தொழிலாளர்களை ஈர்த்துக் கொள்வதற்கான அடிப்படையை தயார் செய்வதாகும்."

சோசலிச சமத்துவக் கட்சி அடிப்படையாகக் கொள்வது. ட்றொட்ஸ்கியினால் தோற்றுவிக்கப்பட்ட இந்த அனைத்துலக



சோ.ச.க.மத்திய குழு உறுப்பினரும் கம்கறுமாவத்த பிரதம ஆசிரியருமான கே.ரத்னாயக்க உரைநிகழ்த்துகின்றார்(இடது)

முன்நோக்கினையேயாகும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் எமது சக சிந்தனையாளர்கள் ஏனைய நாடுகளின் சோசலிச சமத்துவக் கட்சிகள் அடிப்படையாகக் கொள்வது அந்த முன்நோக்கினையேயாகும்.

தொழிலாளர் வர்க்கத்துக்கு நாடு கிடையாது. தொழிலாளர் வர்க்கம் ஒரு அனைத்துலக வர்க்கம். இன்று தொழிலாளர் வர்க்கம் ஒரு அனைத்துலகக் கட்சியின் தலைமையின் கீழ் ஒரு அனைத்துலக வர்க்கமாக அணிதிரள வேண்டும். அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துக்காக அத்தகைய ஒரு அனைத்துலக வேலைத்திட்டத்தை முன்வைப்பதில் வெற்றி கண்டிருப்பது நான்காம் அகிலம் மட்டுமேயாகும். இன்று எமது ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்து கொண்ட சோ.ச.க.ஆதரவாளர்களையும் தொழிலாளர்களையும் இளைஞர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் இந்தக் கட்சியில் சேர்ந்து அதைக் கட்டியெழுப்பும் போராட்டத்திற்குத் தோள் கொடுக்குமாறு நாம் வேண்டுகின்றோம்.

## ஆழமான நெருக்கடி

இந்த மே தினம் உலக முதலாளித்துவம் ஆழமான நெருக்கடியில் தலைமூழ்கிப் போயுள்ள ஒரு சமயத்தில் இடம் பெறுகிறது. உலகம் பூராவும் மோசமான சமூக குமுறல்களுக்கான நிலைமைகள் வளர்ச்சி கண்டுள்ளன. இந்த ஆசியப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நிதி. பங்குமுதல் சந்தை வீழ்ச்சி நெருக்கடியை வெறும் தென்கிழக்கு ஆசிய நெருக்கடியாக காட்டுவதற்கு முதலாளித்துவ பொருளியல் விமர்சகர்கள் முயற்சிக்கின்றார்கள். இப்போது இது உலகளாவிய ரீதியில் பயமுறுத்திக் கொண்டுள்ளது. இது இந்த நெருக்கடி உலக நெருக்கடியின் ஒரு பாகம் என அனைத்துலகக் குழு முன்வைத்த ஆய்வினை நிரூபித்துக் கொண்டுள்ளது.

இந்த நெருக்கடியை வெறும் தென்கிழக்கு ஆசிய நெருக்கடியாகக் காட்டுவது தவறு. அது அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் உட்பட்ட முழு உலகினையும் தழுவிய உலக நெருக்கடியின் ஒரு பாகமாகும். இந்த உலகளாவிய ரீதியிலான அபிவிருத்திகளை அந்த விதத்தில் விளக்காது தொழிலாளர் வர்க்கம் முன்நோக்கினை அபிவிருத்தி செய்து கொள்ள முடியாது."

உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட ஜப்பான் ஏழு ஆண்டுகளாக ஒரே இடத்தில் ஸ்தம்பித்துப் போய்க் கிடக்கின்றது எனக் குறிப்பிட்ட ரத்னாயக்க அந்நாட்டின் பெரும் வங்கிகளும் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளும் வீழ்ச்சி கண்டுள்ள விதத்தைக் காட்டும் தரவுகளை கூட்டத்தினருக்கு முன்வைத்தார். தென்கொரியாவிலும் இந்தோனேசியாவிலும் முதலீட்டு வீழ்ச்சி. பண மதிப் பிறக்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தின் அதிகரிப்பு தொடர்பான புள்ளிவிபரங்களை சுட்டிக்காட்டிய அவர் ஏகாதிபத்தியவாதிகளால் பொருளாதார புலிகளாக வருணிக்கப்பட்ட இந்தப் பிராந்தியத்தின் பொருளாதாரங்களின் வீழ்ச்சியின் தாக்கம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கங்களை கூட்டத்தினருக்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

இன்று ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதார நிபுணர்கள் அடுத்த நெருக்கடி எங்கு வெடிக்கும் என்பதைப் பற்றியே ஆய்ந்து கொண்டுள்ளார்கள். ஏப்பிரல் 2ம் திகதி நடைபெற்ற உலகின் முக்கிய வங்கிகளின் பெரும் அதிகாரிகளிடையேயான கூட்டத்தில் பேசிய ஜேர்மனி மத்திய வங்கி அதிகாரி : வோல் வீதியை இனி நோக்கியபடி இருக்க வேண்டும் என்றார். வோல் வீதியின் வீழ்ச்சி பற்றி லண்டனில் பினான்சியல் டைம்ஸ் பத்திரிகை எச்சரிக்கை செய்தது.

வோல் ஸ்ரீட் பங்கு முதல் சந்தை கடந்த சில வருடங்களாக பிரமாண்டமான அதிகரிப்பைக் காட்டின. ஆனால் புதிய பிஸ்னஸ் வீக் சஞ்சிகை வோல் ஸ்ரீட்டின் வீழ்ச்சி பற்றி எச்சரித்தது. பழைய வெடிப்புக்கள் பற்றியும் குறிப்பிட்டது. 1929 ஜூன் மாதத்தின் போர்ப்ஸ் சஞ்சிகை அமெரிக்காவின் புதிய வளர்ச்சிகள் பற்றிக் குறிப்பிட்டு நான்கு மாதங்கள் கூடச் சென்றிருக்காத நிலையில் நியூயோர்க் பங்குமுதல் சந்தையில் பிரமாண்டமான வீழ்ச்சி இடம்பெற்றது.

சமசமாஜக் கட்சியின் "கோட்பாட்டாளரான" ஹெக்டர் அபேவர்தன. சுமனசிரி லியனகே போன்றவர்கள் உற்பத்தியின் பூகோளமயமாக்கம் பற்றி குறிப்பிட்டு. மார்க்சிசம் பிழைத்த இடத்தைத் தேடுகின்றார்கள். ஹெக்டர் அபேவர்தன யுக்திய பத்திரிகைக்கு எழுதிய ஒரு கட்டுரையின் தலையங்கம் வருமாறு : "முதலாளித்துவம் புதிய பயணப் பாதைகளை எடுத்துக் கொண்டதால் மார்க்சிசம் பிழைத்துப் போக நேரிட்டது. ஏகாதிபத்தியம் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. தொழிலாளர் வர்க்கம் மறைந்து போய்விட்டது" என்கிறார்கள்.

மார்ர்ஸ் குறிப்பிட்டது போல் தொழிலாளர் வர்க்கம் என்பது தமது உழைப்புச் சக்தியை தவிர விற்பதற்கு எதுவும் இல்லாத வர்க்கமாகும். அன்று தொழிலாளர் வர்க்கம் ஊத்தையைப் பூசிக் கொண்டும் தூசியை சுவாசித்துக் கொண்டும் வேலை செய்ய நேரிட்டு இருக்கலாம். இன்று தொழிலாளர் கணனியைப் பாவித்துக் கொண்டு வேலை செய்கின்றார்கள். பூகோளமயமாக்கத்தின் கீழ் தொழிலாளர் வர்க்கம் மறைந்து போய்விடவில்லை. தொழிலாளர் வர்க்கத்தில் மேலும் மேலும் விரிவாக்கம் இடம்பெற்றுள்ளது. அவர்கள் தமது உழைப்பை பாவிக்கும் விதம் அவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களின் தன்மையை மாற்றிவிட்டது.

தொழிலாளர் வர்க்கத்தின் மறைவைப் பற்றிப் பேசும் இவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் வகையில் தொழிலாளர் வர்க்கம் உலகளாவிய ரீதியில் மீண்டும் அரசியல் கிளர்ச்சியில் இறங்கியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com





# பூகோளமயமாக்கமும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும்

## மார்க்சிசத்தின் குட்டி முதலாளித்துவ எதிரிகளுக்கு ஒரு பதில்

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

அமெரிக்க ஸ்பார்ட்டசிஸ்ட் லீக்கின் ஒரு தொடர் கட்டுரைகளுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் தயார் செய்யப்பட்ட பதில் கடந்த இதழில் இருந்து தொழிலாளர் பாதையில் பிரசுரமாகின்றது. அதன் முதல் பாகத்தின் இறுதி பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

(கடந்த இதழின் தொடர்ச்சி)

### பூகோளமயமான பொருளாதாரம் எதிர் தேசிய அரச அமைப்பு

கணனித் தொழில் நுட்பத்தின் அபிவிருத்தியுடன் சேர்ந்து கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக முதலாளித்துவ உற்பத்தியில் ஏற்பட்ட பரந்த மாற்றங்கள் உலக முதலாளித்துவ பொருளாதாரத்தை அடிப்படையான விதத்தில் பரிணாமம் செய்து விட்டன. ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் தோற்றமும் பூகோள ரீதியில் உற்பத்தியை ஒழுங்கமைப்பதும் இருபதாம் நூற்றாண்டில் முதலாளித்துவத்தின் மைய முரண்பாடுகளை மீண்டும் ஒரு முறை முட்டி மோதவைத்தன: இயற்கையான வளர்ச்சியையும் உற்பத்தி சக்திகளின் பரம்பலையும் வெளிக்காட்டும் உலகப் பொருளாதாரத்துக்கும் முதலாளித்துவ ஆட்சிக்கும் தனியார் சொத்துடமைக்கும் அடிப்படையான தேசிய அரச முறைக்கும் இடையேயான முரண்பாடு.

இந்தப் போக்கின் மிகவும் தெளிவான அரசியல் வெளிப்பாடு ஒரு தேசியவாத முன்நோக்கினை அடிப்படையாகக் கொண்ட அந்தச் சகல அமைப்புக்களும் கவிழ்ந்து கொட்டியதேயாகும். சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஸ்டாலினிச ஆட்சிகள் வீழ்ச்சிகண்டமை இறுதி ஆய்வுகளில் "தனிநாட்டில் சோசலிசம்" என்ற தேசியவாத வேலைத்திட்டத்தின் வங்குரோத்தின் ஒரு வெளிப்பாடாகும். அதே போல் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் சமூக நிலைமையை காக்க இலாயக்கற்ற அமைப்புக்களாகவும் முலதனத்தின் கட்டளைகளை திணிப்பதில் வெளிப்படையான சகவாழ்வுக்கு சென்றமையாலும் விரிந்து செல்லும் தேசிய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக சீர்திருத்தவாத வேலைத்திட்டத்தின் வீழ்ச்சியை குறித்து நிற்கின்றன.

உற்பத்தியின் பூகோளமயமான உற்பத்திக்கும் தேசிய அரசமுறைக்கும் இடையேயான் முரண்பாடுகளில் இருந்து தோன்றிய முதலாளித்துவ உற்பத்தி முறையின் வரலாற்று நெருக்கடி தொழிலாளர் இயக்கத்தில் முன்நோக்கிய நெருக்கடியின் வேராக இருந்து கொண்டுள்ளது. ஆனால் இதே நெருக்கடி மார்க்சினது மற்றொரு முக்கிய தீர்க்கதரிசனத்தை ஊர்ஜிதம் செய்கின்றது: "அதன் தீர்வுக்கான அவசியமான சட நிலைமைகள் தோன்றாமல் அல்லது தோன்றியிராமல் எந்த ஒரு பிரச்சினையும் என்றும் தோன்றுவது கிடையாது."

உற்பத்தியின் பூகோளமயமாக்கம் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தில் ஒரு பிரமாண்டமான பரம்பலை உருவாக்கியுள்ளது. இதுவரை காலமும் சிறிய விவசாயிகளை மட்டும் அடிப்படையாகக் கொண்ட விவசாயம் இருந்து வந்த உலகின் பல புதிய பிராந்தியங்களில் முதலாளித்துவ உற்பத்தியியின் ஊடுருவல் இலட்சோப லட்சம் மக்களை கூலித் தொழிலாளர்கள் ஆக்கிவிட்டது. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் உற்பத்திச் செலவை வெட்டிக் குறைக்கவும் இலாபத்தை அதிகரிக்கவும் பெரும் கூட்டுத்தாபனங்கள் நடாத்திய ஆட்குறைப்பு போராட்டங்கள் ஒரு காலத்தில் மத்தியதர வர்க்கத்தின் ஒரு பிரிவினரின் சார்பு ரீதியான வசதிவாய்ப்பு அந்தஸ்திற்கு முடிவு கட்டிவிட்டது. கடந்த இரண்டு தசாப்தங்களில் மட்டும் பாட்டாளி வர்க்கம் அனைத்துலக ரீதியில் எண்ணிக்கை ரீதியில் பெரும் ஆதிக்கம் படைத்த ஒரு சமூக வர்க்கமாக வந்துள்ளது.

வரவர அதிகரித்த எண்ணிக்கையினரை பாட்டாளி வர்க்க நிலைமைக்குள் தள்ளச் செயற்பட்ட சக்திகள் கரண்டலுக்கான பொது நிலைமைகளையும் உருவாக்கியுள்ளன. இதன் மூலம் உற்பத்தியின் பூகோளமயமாக்கம் தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்துக்கு முன்னர் ஒரு போதும் இருந்திராத விதத்தில் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கும் அனைத்துலக மூலதனத்துக்கும் எதிரான ஒரு பொதுப் போராட்டத்தில் ஐக்கியப்படுவதற்கான நிலைமைகளை வழங்கியுள்ளது.

அதே சமயத்தில் பூகோளமயமாக்கப்பட்ட உற்பத்தியானது பொருளாதார வாழ்க்கை அமைப்பின் தேசிய அடிப்படையை பாதிப்பதோடு ஒரு திட்டமிட்ட உலக சோசலிச பொருளாதார அபிவிருத்திக்கான புறநிலை அத்திவாரத்தினையும் இட்டுள்ளது.

முதலாளித்துவ சொத்து வடிவத்தினைப் போலவே அதைக் கட்டிக்காக்கும் தேசிய அரசும் வரலாற்றுப் போக்கின் ஒரு உற்பத்தி எனவும் சமூக அமைப்பின் ஏனைய காலவதியான வடிவங்களான அடிமைமுறை, நிலமானித்துவ முறையைப் போலவே காலவதியாகிப் போகும் தலைவிதிக்கு உள்ளாக உள்ளது என்ற விளக்கத்தையே மார்க்சிசம் என்றும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால் ஸ்பார்ட்டசிஸ்டுகளின் வலியுறுத்தல் உண்மையாக இருப்பின் தேசிய அரசு விஞ்ஞான சோசலிசத்தின் ஸ்தாபகர்களால் ஒரு நிலையான திடீர் நிகழ்வாகக் கொள்ளப்பட்டு இருக்கும். மாறாக தேசிய அரச முறையினதும் முதலாளித்துவ சொத்தின் முழுக் கட்டுமானத்தினதும் ஒழிப்பும் கற்பனை முன்நோக்காக இருந்திருக்கும் ஏனெனில் உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தி எவ்வளவுதான் பரந்துபட்டதாக விளங்கினாலும் தேசிய அரசு ஒரு தலைசிறந்த பொருளாதார ஸ்தூலமாக நின்றுபிடிக்கின்றதனால் ஆகும்.

மார்க்ஸ் விடயத்தை மிகவும் தெளிவான முறையில் குறிப்பிடுகின்றார். "... நாம் இருந்து கொண்டுள்ள சமுதாயத்தினுள் வர்க்கமற்ற சமுதாயத்துக்கான முன்நிபந்தனையான உற்பத்திக்கான புறநிலை நிலைமைகளையும் அதனுடன் தொடர்புபட்ட பரிமாற்ற உறவுகள் மறைந்து கொண்டுள்ள முறைமையையும் தேடிக் கண்டிராவிட்டால் அதனை வெடித்துச் சிதற வைக்கும் சகல முயற்சிகளும் வீணாகிப் போயிருக்கும்."

ஸ்பார்ட்டசிஸ்டுகள் வாதிப்பது போல் உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தி தேசிய அரச அமைப்புக்கு குழிபறிக்காது போயிருந்தால் நாம் முழு மார்க்சிச முன்நோக்கும் ஒரு வெறும் தார்மீக அல்லது ஒழுக்க நடவடிக்கையை விட வேறொன்றும் அல்ல என்ற முடிவுக்கே வரவேண்டி இருந்திருக்கும். உண்மையில் "இணைந்த உற்பத்தியாளர்களால்" உற்பத்தி ஒழுங்கு செய்யப்படும் திட்டமிட்ட சோசலிச பொருளாதாரத்தில் முன்நோக்கு ஒரு வெறும் அகநிலை கற்பனை மட்டும் அல்ல. ஆனால் அது அடியோடு தீங்கான ஒரு வேலைத்திட்டமாகும். ஏனெனில் தேசிய அரசின் பொருளாதார தாக்குப்பிடிக்கும் தன்மை காலங்கடந்ததாக இருந்து கொண்டுள்ளதே.

மேலும் தொழிலாளர் வர்க்கத்தை அனைத்துலக ரீதியில் ஐக்கியப்படுத்துவதற்கான முன்நோக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் கம்யூனிஸ்ட் அறிக்கை பிரசுரிக்கப்பட்டதில் இருந்து சோசலிச இயக்கத்தின் அணிதிரள்வுக்கான அழைப்பு வெளிவந்ததில் இருந்து அதைக் கற்பனையாக்கவும் செய்கின்றது. முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படை பொருளாதார அலகு என்ற முறையில் தேசிய அரசு அதன் தாக்கிப்பிடிக்கும் தன்மையை பேணிக் காத்திருக்குமானால், முதலாளித்துவமும் தொழிலாளர் இயக்கத்தில் உள்ள அதன் ஏஜன்சிகளும் அவற்றின் தேசியவாத வேலைத்திட்டத்துக்கு ஒரு உறுதியான சட அடிப்படையை என்றும் கொண்டு இருந்திருப்பர்.

ஸ்பார்ட்டசிஸ்டுகளின் திட்டவட்டமான வாதங்களை நாம் எடுத்துக் கொள்வதற்கு முன்னர் முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படைப் பண்புகள் சிலவற்றை சுட்டிக்காட்டுவது அவசியம். பூகோளமயமாக்கம் குறித்துநிற்கும் உலகப் பொருளாதாரத்தின் அடிப்படையிலான பண்பு மாற்றத்தினை வெளிப்படுத்த இது அவசியம்.

### மூன்று வடிவம்

முலதனம், மார்க்ஸ் தெளிவுபடுத்தியது போல் மூன்று வடிவங்களில் இருந்து கொண்டுள்ளது. நிதி மூலதனம், உற்பத்தி மூலதனம், பண்ட மூலதனம். முதலாளித்துவ உற்பத்திப் போக்கும் அதன் உந்து சக்தியான உபரி பெறுமானத்தின் திரட்சியும் இந்த மூலதனத்தின் மூன்று வடிவங்களையும் ஒன்றை மற்றொன்றாக தொடர்ந்து பரிணாமம் செய்வதில் ஈடுபட்டுள்ளது.

இந்தப் போக்கின் முதல் கட்டத்தில் மூலதனம் சந்தையில் பண வடிவில் தோன்றுகின்றது. இந்த பண மூலதனம் உழைப்புச் சக்தியுடன் சேர்ந்து உற்பத்திச் சக்திகளை (மூலப் பொருட்கள், இயந்திரம்) கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தப் பரிமாற்றத்தில் பண மூலதனம் உற்பத்தி மூலதனமாக பரிணாமம் செய்யப்படுகின்றது.

இந்தப் போக்கின் இரண்டாவது கட்டத்தில் உற்பத்தி மூலதனம் ஒரு உயர்ந்த பெறுமானத்துடன் மீண்டும் பண்ட மூலதனமாக பரிணாமம் செய்யப்படுகின்றது. இந்த மேலதிக அல்லது உபரி பெறுமானத்தின் மூலம், முதலாளி சந்தையில் கொள்வனவு செய்த உழைப்புச் சக்தியின் பெறுமானத்துக்கும் வேலைநாளின் போது தொழிலாளர்கள் சேர்த்த பெறுமானத்துக்கும் இடையேயான வேறுபாடாகும்.

இந்தப் போக்கின் மூன்றாவது கட்டத்தில் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் திரும்பவும் சந்தைக்கு கொண்டு செல்லப்படுவதோடு அங்கு அவை மீண்டும் ஒரு தடவை பண மூலதனமாக(அவற்றில் உள்ளடங்கியுள்ள உபரி பெறுமானம் உணரப்படுகின்றது) இதைத் தொடர்ந்து திரட்சிப் போக்கு இடம் பெறுகின்றது.

இந்தத் தொடர்ச்சியான உரு மாற்றத்தில் பணமூலதனத்தில் இருந்து பண்ட மூலதனத்துக்கும் பின்னர் மீண்டும் பண மூலதனத்துக்கும் அந்த மூலதனத் திரட்சி அல்லது சுய விரிவு இடம்பெறுகின்றது. இந்த விரிவின் மூலமாக உற்பத்திப் போக்கில் தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து கறக்கப்பட்ட உபரிப் பெறுமானம் இருந்து கொண்டுள்ளது.

முதலாளித்துவத்தின் வரலாறு மூலதனத்தின் இந்த மூன்று வடிவினதும் பூகோளமயத்தினை அல்லது அனைத்துலகமயத்தினை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. 19ம் நூற்றாண்டில் முதலாளித்துவ உற்பத்தியின் பெருக்கம் மூலதனத்தின் பூகோளமயத்தினை பண்டத்தின் வடிவில் கண்டது. பக்டரி முறையினாலும் முதலாளித்துவ பண்ணை முறையினாலும் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் விரிந்துபட்டுவந்த உலகச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. 19ம்

படிப்பகம்

www.padippakam.com



நூற்றாண்டின் இறுதியில் கைத்தொழில் முதலாளித்துவத்தின் எழுச்சியுடன் வங்கித் தொழிலும் நிதி மூலதனமும் அரங்குக்கு வந்தன. அனைத்துலக முதலீடுகளின் அபிவிருத்தி மூலம் இவை அதிகரித்த விதத்தில் பூகோளமயமாகின.

எவ்வாறெனினும் பண்ட மூலதனமும் பண மூலதனமும் அதிகரித்த விதத்தில் பூகோளமயமாகி வந்த அதே வேளையில் உற்பத்தி மூலதனம் பெருமளவுக்கு தொடர்ந்தும் தேசிய அரச எல்லைகளுக்குள்ளேயே கட்டுப்பட்டுக் கிடந்தது. தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து கறந்து கொள்ளப்பட்டதும் பண்டத்தினுள் உள்ளடங்கி இருந்ததுமான உபரிப் பெறுமானம் அதிகரித்த அளவில் யதார்த்தமாகியது உலகச் சந்தையிலேயேயாகும். இந்தப் போக்கில் கறக்கப்பட்ட நிதி மூலதனம் மீண்டும் ஒரு தடவை வங்கிகள், நிதி கம்பனிகள் மூலம் அனைத்துலக ரீதியில் முதலீடு செய்யப்பட்ட போதிலும் உபரி பெறுமானக் கறப்பின் நிஜ போக்கானது திரட்சிப் போக்கின் இருதயம் இன்னமும் ஒரு தரப்பட்ட தேசிய அரசினுள்ளேயே இடம் பெற்றது. இது தொடர்ந்தும் இப்படி இருந்து வரவில்லை.

உற்பத்தியின் பூகோளமயமாக்கம் உற்பத்திப் போக்கின் உயர்ந்த உழைப்பு இணைப்பு மாற்றத்தை குறைந்த கூலி உழைப்பு கொண்ட நாடுகளுக்கு சாதாரணமாக மாற்றுவது அல்ல. இது போக்கின் இலட்சணத்தின் ஒரு அம்சம் மட்டுமே. உற்பத்தியின் பூகோளமயமாக்கம் என்பது உபரிப் பெறுமானத்தை கறப்பதில் ஈடுபட்டிருந்த உற்பத்தி மூலதனத்தினை அனைத்துலக பரிமாணத்தில் நகர வைப்பதாகும். இது வெறுமனே முதலாளித்துவ நிறுவனங்களின் அனைத்துலக நடவடிக்கைகளை தொகையளவில் அதிகரிப்பது அன்று. ஆனால் முதலாளித்துவ உற்பத்தி விதத்திலான ஒரு பண்புரீதியான பரிணாமத்தினைக் குறித்து நிற்கின்றது. வரலாற்றில் முதற் தடவையாக உற்பத்தி மூலதனம் இதற்கு முன்னைய பண்ட மூலதனத்தையும் பண மூலதனத்தையும் போல் உலகைச் சுற்றி நகர முடிந்தது.

ஸ்பார்ட்டசிஸ்டுகள் அனைத்துலக குழு தொடர்பான தமது கண்டனத்தை அனைத்துலகக் குழு கூறியிருப்பதாக அவர்கள் குறிப்பிடும் கீழ்வரும் வசனத்தை கண்டிப்பதுடன் ஆரம்பிக்கின்றார்கள்: " சமீப வருடங்களில் வட அமெரிக்காவில் இருந்தும் மேற்கு ஐரோப்பாவில் இருந்தும் ஐ ஜப்பானில் இருந்தும்" பன்னாட்டுக் கம்பனிகளால் " "மூன்றாம் உலக நாடுகள்" எனப்படுபவற்றுக்கு உற்பத்தியை மாற்றுவது உலக முதலாளித்துவ அமைப்பில் ஒரு ஆழமான அமைப்பு மாற்றத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது."

அவர்கள் மேலும் வலியுறுத்துவதாவது " முதலாளித்துவ சந்தை "பூகோள ரீதியானது." வங்கிகளும் கூட்டுத்தாபனங்களும் இந்த (குறைந்த கூலி) நாடுகளை தமது முதலீட்டுக்கு உயர்ந்த இலாபம் பெறுவதற்காகத் தேடிச் செல்கிறார்கள். இது உண்மையில் நிதி மூலதனத்தின் அனைத்துலக மயமாக்கத்தின் சமகால இலாப அமைப்பின் ஒரு ஆளுமைமிக்க அம்சமாகும் என்ற கருத்து எதுவிதத்திலும் புதிய ஒன்றல்ல."9

அத்தியாவசியமான போக்கினை மூடிமறைக்கவும் குறைந்தபட்சம் 1914ல் இருந்து உலக முதலாளித்துவ அமைப்பில் அடிப்படையான எதுவும் மாற்றம் கண்டுவிடவில்லை என்ற கருத்தைத் திணிக்கும் பொருட்டும் இங்கு சகலதும் குழப்பியடிக்கப்பட்டு, தடுமாற வைக்கப்பட்டுள்ளது.

முதலாம் இடத்தில் உற்பத்தியின் பூகோளமயமாக்கம் வெறுமனே "மூன்றாம் உலகின் "நாடுகளுக்கு உற்பத்தியை மாற்றுவதோ அல்லது "பன்னாட்டு கம்பனி"களினால் மூன்றாம் உலக நாடுகளிற்கு உற்பத்தியை" பேரளவில் " மாற்றுவதோ அல்ல. இந்தப் போக்குக்கள் உலக முதலாளித்துவ உற்பத்தியில் தீர்க்கமான மாற்றங்களின் ஒரு வெளிப்பாடாகுவதோடு பூகோளமயமாக்கல் போக்கின் ஒரு அம்சம் மட்டுமே.



முதலாம் உலக யுத்தம் உற்பத்தி சக்திகள் தேசிய அரச எல்லைகளைத் தாண்டி வளர்ந்து விட்டதை குறித்து நின்றது.

## உலக முதலாளித்துவ அமைப்பில் ஒரு பண்புரீதியான மாற்றம்

பூகோளமயமாக்கப் போக்கு வெறுமனே உற்பத்தியை வேறு இடங்களுக்கு மாற்றுவதை மட்டும் குறிப்பது அல்ல..அது அதைப் பார்க்கிலும் முன்னரே ஒன்றிணைந்துள்ள உற்பத்திப் போக்கின் செலவுகளை வெட்டி, இலாபத்தை உச்சமாக்கும் பொருட்டு கட்டவிழ்த்து, உலகின் பல்வேறு பாகங்களுக்கும் ஒன்றில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளுக்கு அல்லது பின்தங்கிய நாடுகளுக்கு கட்டவிழ்த்து விட்டு இங்ஙனம் கட்டவிழ்க்கப்பட்ட போக்குக்களை மீண்டும் தேச எல்லைகள் ஊடாக முழு கண்டங்களூடாக ஒன்றிணைப்பதாகும்.

அதாவது, முதலாளித்துவத் திரட்சியின் சாராம்சமான உபரிப் பெறுமானக் கறப்புப் போக்கானது வரலாற்றில் முதல் தடவையாக அனைத்துலகமயமாக்கப்பட்டுள்ளது. பூகோளமயமாக்கம் குறித்து நிற்கும் உலக முதலாளித்துவ அமைப்பிலான பண்புரீதியான மாற்றம் இதுவே. பூகோளமயமாக்கப்பட்ட உற்பத்தியின் தனிச்சிறப்பு அம்சம் என்னவெனில் ஒரு தரப்பட்ட உற்பத்திப் போக்கானது ஏககாலத்தில் ஒரு கோள்களளாவிய விதத்தில் இடம்பெறுவதேயாகும். இது புதிய தொடர்புச் சாதன தொழில்நுட்பங்களாலும் மிகவும் திறமையின் வடிவிலான போக்குவரத்துக்களாலும் சாத்தியமாக்கப்பட்ட ஒரு புதிய அமைப்பின் அடிப்படையில் மட்டுமே தோன்ற முடியும்.

நிதி மூலதனம் எப்போதும் அனைத்துலக ரீதியில் முதலீடு செய்யப்பட்டு வந்துள்ளதால் இன்றைய நிலைமையில் புதுமை எதுவும் கிடையாது என ஸ்பார்ட்டசிஸ்டுகள் வாதிடுகின்றார்கள். இது பரந்த தொகையளவிலான அனைத்துலக மூலதனத்தின் அதிகரிப்பினையும் அது எடுத்துக் கொண்டுள்ள எண்ணிலடங்கா வடிவங்களையும் புறக்கணிப்பதாகும். உடனடி நிதி மாற்றங்களும் செலாவணி கட்டுப்பாடுகள் ஒழிப்பும் பூகோளரீதியான பங்கு, கடன்பத்திர சந்தைகளின் அபிவிருத்திகளும் அனைத்துலக பங்கு சந்தைகளின் எதிர்காலத்தின் வளர்ச்சியும் இந்தப் போக்குக்களில் சிலவாகும். மொத்தத்தில் இவை ஒரு பண்புரீதியான மாற்றத்தை குறித்து நிற்கின்றன.

உலகம் பூராவும் மூலதனத்தை மாற்றும் நிலைமையினுள் ஜீ.7 குழுவின் முக்கிய முதலாளித்துவ நாடுகளின் எல்லைகளூடாக நிதிப் பெருக்கம் 1980 92 காலப்பகுதியில் 10 மடங்கினால் அதிகரித்தமை இந்தப் பரிமாணத்தின் ஒரு அளவீடாகும். தேசிய ரீதியில் தனிமைப்படுத்தப்பட்ட பங்கு முதற்சந்தைகள் முழுமனே மறைந்து போய்விட்டன. 1980 90 தசாப்த காலத்தில் எல்லைகளுக்கு பங்கு முதல் வியாபாரங்கள் பரவுவது ஆண்டுக்கு 28 சதவீதம் வளர்ச்சி கண்டு அமெரிக்க டாலர் 120 பில்லியனில் இருந்து 1.4 ட்ரில்லியன் டாலர்களாக(1400 பில்லியன்) அதிகரித்தது. இதே காலப்பகுதியில் அனைத்துலக வங்கிக் கடன் கொடுப்பனவுகள் 324 பில்லியன் டாலர்களில் இருந்து 7.5 ட்ரில்லியன் டாலர்களாக அதிகரித்தது. அனைத்துலக கடன் பத்திரச் சந்தை( ) 295 பில்லியன் டாலர்களில் இருந்து 1.6 ட்ரில்லியன் டாலர்களாக அதிகரித்தது.

மொத்த தேசிய உற்பத்தியின் மட்டத்தின் விகிதாசாரமாக அளவிடப்பட்ட வர்த்தக மட்டம் அதனது 1913 மட்டத்தை மீண்டும் 1970ல் மட்டுமே எட்டியதால் அனைத்துலகப் பொருளாதாரம் 80 ஆண்டுகளுக்கு முன்னர் பெரிதும் பூகோளமயமாக்கப்பட்டு இருந்தது என ஸ்பார்ட்டசிஸ்டுகள் வாதிடுகின்றார்கள். அவர்கள் அங்ஙனம் செய்கையில் பளிச்சிடும் ஒரு விடயத்தை அணைத்துலக வர்த்தகத்தின் கணிசமான அளவு விகிதாசாரம் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் அனைத்துலக உற்பத்தி நடவடிக்கைகளினால் பதிலீடு செய்யப்பட்டது மறந்து போய்விடு கின்றார்கள்.

ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தினால் திரட்டப்பட்ட புள்ளிவிபரங்கள் இந்தப் போக்கினை எடுத்துக்காட்டுகின்றன. 1993ல் தமது பிறந்த நாட்டுக்கு வெளியே தொழிற்படும் 170,000 துணைக் கம்பனிகளின் உற்பத்தி, உலக வர்த்தகத்தின் இன்றைய முழு அளவினை 37 வீதத்தினால் அதிகரித்தமையாக உள்ளது. அந்த ஆண்டில் மொத்த உலக வர்த்தகம் 4 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்களாக இருக்கையில் இந்த ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் உள்ளூர் மொத்த விற்பனை 5.5ட்ரில்லியன் டாலர்களாக விளங்கிற்று.

ஸ்பார்ட்டசிஸ்ட் வாதங்களின் கேவலம் பெரிதும் தெளிவாகுவது. அனைத்துலக வர்த்தகத்தின் தன்மையின் மாற்றத்தை கணக்கெடுக்கும் போதேயாகும். முன்னைய காலப்பகுதியில் வர்த்தகம் மூலப்பொருட்களது அல்லது முடிவுப் பொருட்களது கொள்வனவையும் விற்பனையையுமே உள்ளடக்கி இருந்தது. இன்று அதிகரித்த அளவிலான உலக வர்த்தகம் தனியொரு ட்ரான்ஸ்நஷனல் கம்பனிக்குள் பண்டங்களை அல்லது அரை முடிவுப் பண்டங்களை மாற்றுவதை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. குறைந்தபட்சம் உலக வர்த்தகத்தின் மூன்றில் ஒரு பங்கு அத்தகைய மாற்றங்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. உலக வர்த்தகத்தின் அரைப் பங்கு ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளால் செய்யப்படுகின்றது. பண்டங்களதும் சேவைகளதும் பரிமாற்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு இத்தகைய கம்பனிகளின் இயக்கத்தில் தங்கியுள்ளது.

ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் ஆதரவில் உலகப் பொருளாதாரத்தின் அதிகரித்த அளவிலான இணைப்பை ஒவ்வொரு புள்ளிவிபரமும் சுட்டிக்காட்டுகின்றன. 1975 1989க்கும் இடையே ஏற்றுமதிகளின் நடைமுறை பெறுமானம் 3.5மடங்குகளால் அதிகரித்த அதே வேளையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் (FD) பாய்ச்சல் அதே காலப்பகுதியில் 7 மடங்குகளால் அதிகரித்தது. 10

1970 1988க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் வருடாந்த எப்.டி.ஐ. உட்பாய்ச்சலும் வெளிப்பாய்ச்சலும் கிட்டத்தட்ட இரட்டிப்பாகியது.

1970பதுகளில் எப்.டீ.ஐ. உள்நாட்டு உற்பத்தியும் உள்நாட்டு முதலீடும் அதே விதத்தில் அதிகரித்தமை 1980பதுகளின் ஆரம்ப காலத்தில் இருந்து எப்.டீ.ஐ. வளர்ச்சியின் பெருக்கம் ஏனைய இரண்டையும் கணிசமான அளவு தாண்டிச செல்லத் தொடங்கியது. 1985 90 காலப்பகுதியில் பூகோளரீதியான எப்.டீ.ஐ.உள்நாட்டு வெளியீட்டைக் காட்டிலும் கிட்டத்தட்ட நான்கு மடங்கு வேகமாக அதிகரித்தது. உள்நாட்டு முதலீட்டைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக அதிகரித்தது.

வெளிநாட்டு நேரடி முதலீட்டின் துரித அதிகரிப்பு, ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் உற்பத்தியை ஒழுங்கமைப்பதிலான ஒரு பண்பு ரீதியான மாற்றத்தின் புள்ளி விபர அடிப்படையிலான வெளிப்பாடாகும். இந்த ட்ரான்ஸ்நஷனல் கம்பனி முறையின் கீழ் பூகோளரீதியான கூட்டுத்தாபனத்தின் திட்டமிடல் போக்குக்கள் சந்தையின் திட்டமிடப்படாத நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் ஒரு முயற்சியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. ஒரு ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின் வார்த்தைகளில் "விஸ்தரிக்கப்பட்ட அனைத்துலக உற்பத்தி முறையின் போக்குக்கள் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் விரகியின் பெறுபேறாக படிப்படியாகத் தோன்றுகின்றன..அந்த அர்த்தத்தில் அனைத்துலக உற்பத்தி வர்த்தகத்தைக் காட்டிலும் ஒரு பரந்த பாத்திரத்தினை வகிப்பதாகக் கொள்ள முடியும். அதாவது, எல்லைகளுக்கு ஊடாக பொருட்களையும் சேவைகளையும் நகர்த்துவனவாக மட்டுமல்லாது கூடவே உற்பத்திக் காரணிகளையும் அமைப்பு விதிமுறைகளையும் திறமையையும் தொழில் நுட்பத்தையும் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட முகாமை அமைப்பின் கீழ் நகர்த்துவது ... அந்த அமைப்பு ரீதியான முயற்சியின் பெறுபேறாக உலகப் பொருளாதாரம் பண்புரீதியாக பரிணாமம் செய்யப்பட்டு வருகின்றது. உற்பத்தி மட்டத்திலான இணைப்புக்களால் வர்த்தகமும் மற்றும் தொடர்புகளும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது அல்லது பதிலீடு செய்யப்பட்டு வருகின்றது. பொருட்களுக்கும் சேவைகளுக்குமான ஒரு அனைத்துலக உற்பத்தி முறையில் இது அதிகரித்த முறையில் உறுதியாக ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் உள்ளது.அது இந்த ஒருங்கிணைப்பு பாத்திரத்தை வகிக்கின்றது. கொடுக்கல் வாங்கல்களை பலப்படுத்துவதை விட அனைத்துலக உழைப்பு பகுப்பிலான பங்குபற்றுதலை நிர்ணயம் செய்கின்றது."

ஒரு உற்பத்தி போக்கிலான வேறுபட்ட அங்கங்களை இன்று உலகின் பல்வேறு பாகங்களிலும் வேறுபட்ட நாடுகளிலும் கண்டங்களிலும் இருத்த முடியும். அதனால் உற்பத்திச் செலவுகள் குறைந்தபட்சமாகின்றது. முன்னர் இது இரண்டு காரணங்கள் காரணமாக சாத்தியமாக இருக்கவில்லை. முதலாவது,கடல், ஆகாய போக்குவரத்து இரண்டினதும் குறைந்த செலவு காரணமாக அந்தத் தடை பெருமளவு குறைக்கப்பட்டு உள்ளது. இரண்டாவது, மேற்பார்வை தேவைகளும் தர நிர்ணயமும் ஒரு குறிப்பிடப்பட்ட உற்பத்திப் போக்கானது தனியொரு பக்டரியின் உள்ளோ அல்லது ஒன்றுக்கு ஒன்று மிகவும் அருகாமையிலுள்ள இயந்திரங்களுக்கிடையேயோ ஒழுங்கமைக்கப்பட வேண்டியதாயிற்று. இன்று ஒரு உற்பத்தி போக்கிலான வேறுபட்ட பாகங்களை பூகோளம் பூராவுமுள்ள நிறுவனங்களுக்கு உப கொந்தராத்துக்கு விட முடியும். துரிதமானதும் சார்பு ரீதியில் மலிவானதுமான போக்குவரத்து கணனி அடிப்படையிலான தகவல் முறையுடன் சேர்ந்து ஒரு காலத்தில் கட்டாயமாக ஒருங்கிணைக்கப்பட்ட போக்காக இருந்ததை தனிமைப்படுத்துவதை சாத்தியமாக்கி உள்ளது. கடந்த காலத்தில் திட்ட வரைவு உற்பத்திக்கு மிகவும் நெருக்கமானதாக இருக்க வேண்டி இருந்தது. தொடர்ந்தும் நிலைமை அப்படி இல்லை: ஒரு அறையில் இருந்து மற்றொரு அறைக்கு எப்படி இலகுவாக அவற்றை நகர்த்த முடியுமோ அப்படித் திட்ட வரைவுகள் உலகம் பூராவும் இடமாற்றம் செய்யப்பட முடியும்.

தொடரும்.

படிப்பகம்

www.padippakam.com



## இலங்கை ஆசிரியர் சங்க ஆண்டு பொதுக்கூட்டம்:

# சோசலிச சமத்துவக் கட்சி சோசலிசக் கொள்கைகளுக்கு போராட்டம்!

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 1998ம் ஆண்டுக்கான உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் ஆண்டுப் பொதுக் கூட்டம் ஜூன் கடைப்பகுதியில் நடைபெற உள்ளது. சோசலிச சமத்துவக் கட்சியின் ஆசிரியர் குழு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்கு, வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இம்மகாநாட்டில் போட்டியிடுகின்றது.

இன்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பீடத்தில் உள்ள காகல்ல, ஜெயதுங்க, விஜேரூப, ஜெயசிங்க, விக்கிரமசிங்க ஆகியோர் எச்.என்.பெர்னாந்துவை " அன்புக்குரிய தலைவராகக்" கொண்டு கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக தொழிலாளர் வர்க்கத்தை புரட்சிகரமான முறையில் அணிதிரட்டுவதற்கு எதிராக நின்று வந்தவர்கள் என்பது அப்படி ஒன்றும் புதுமை அல்ல. இவர்கள் தமது தொழிற்சங்கவாத வேலைத்திட்டத்தில் தொழிலாளர்களை மூழ்கடித்து பெரும் தோல்விகளுக்கு பலிகடாக்களாக்க நனவான முறையில் செயற்பட்டவர்கள் என்பதை இங்கு மீண்டும் குறிப்பிடுவது அவசியம் இல்லை. 1970பதுகளில் இலங்கை ஆசிரியர் சங்கத்தை ஜே.வி.பி.யின் கைப்பொம்மையாகச் செயற்பட வைத்ததற்கான முக்கிய பொறுப்பு இந்த எச்.என்.பெர்னாந்துவைச் சேர்ந்தது.

1980 ஜூலை வேலை நிறுத்தத்துக்கு எதிரான ஜே.வீ.பி.யின் கருங்காலிப் பாத்திரம் காரணமாக எச்.என்.பெர்னாந்து தலைமைக்கு கடும் எதிர்ப்புக் கிளர்ந்தது. இந்நிலையில் பெர்னாந்து ஜே.வீ.பி.யில் இருந்து பிரிய நேரிட்டாலும் இலங்கை ஆசிரியர் சங்கத்துள் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனமான அரசியல் வேலைத்திட்டத்துக்காக சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே போராடியது. அந்நிலையில் "தொழிற்சங்கங்களுக்கு அரசியல் வேண்டாம் "என்ற கூச்சலில் இறங்கியவர் எச்.என்.பெர்னாந்துவே. உண்மையில் அவர் எதிர்த்தது தொழிலாளர் வர்க்க அரசியலையே தவிர முதலாளித்துவ அரசியலை அல்ல.

கடந்த ஒரு தசாப்த காலமாக இலங்கை ஆசிரியர் சங்கத்தினுள் மீண்டும் தலைநீட்டியுள்ள ஜே.வீ.பி.பாசிச புள்ளிகளையிட்டு சோசலிச சமத்துவக் கட்சி எச்சரிக்கை செய்தது. ஆனால் காகல்ல விஜேரூப போன்ற சங்கத் தலைவர்கள் அத்தகைய ஆபத்து சங்கத்தினுள் கிடையாது எனக் கூறினர். சங்கத் தலைவர்களில் ஒருவரான ஸ்டாலின் உட்பட்ட பேர்வழிகள் பாசிஸ்டுகள் அல்ல எனவும் இவர்கள் கூறி வந்தனர். கடந்த பல வருடங்களாக இ.ஆ.ச.ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சோ.ச.க.அங்கத்தவர்களை தாக்க முன்வந்த ஜே.வீ.பி.பாசிசக் கும்பலின் தலைமையில் இந்த சந்திமாலும். ஸ்டாலினும் இருந்தனர்.1997 இலங்கை ஆசிரியர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கம்கறு மாவத்த நிருபராக கலந்து கொண்ட விலானி பீரிசை தாக்கப் போவதாக மிரட்டுவதில் முன்நின்றவரும் இந்த ஸ்டாலினே.

அத்தோடு ஜனநாயக ரீதியாக ஆசிரியர் சங்க மாவட்டக் கிளைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட சோ.ச.க..அங்கத்தவர்களுக்கு அறிவிக்காமல் மிகவும் கோழைத்தனமான முறையில் இ.ஆ.ச.நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்கள் இந்த சந்திமாலும் ஸ்டாலினுமே.

அன்று பதுளை மாவட்ட செயலாளராக விளங்கிய பானினி விஜேசிரிவர்தனவை மத்திய குழுவில் இருந்து விலக்குவதற்கு இந்த இ.ஆ.ச.பாசிசக் கும்பலுக்குத் துணைபோனவர்களையே இன்று சங்க தலைமையில் இருந்து கழுத்தில் பிடித்து வெளியே தள்ளும் நடவடிக்கையில் இன்றைய ஆளும் குழு ஈடுபட்டுள்ளது.

### கல்வியை ஒழித்து க்கட்டும் தாக்குதல்

இ.ஆ.ச.மத்திய குழுவினுள் பதவிகளுக்கான நாய்ச்சண்டை இடம்பெற்று வரும் அதே வேளையில் முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கம் முழுக் கல்வியையும் ஒழித்துக் கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. ஏகாதிபத்திய நிறுவனங்களின் அவசியங்களின் பேரில் விஞ்ஞானக் கல்விக்கு குழிபறிக்கவும் தொழில் கல்விக்கு முதன்மையளிக்கும் புதிய கல்வி சீர்திருத்தத்தை புகுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.இதன் மூலம் இராட்சத கம்பனிகளுக்கு அவசியமான உழைப்பாளிகளை பாடசாலைகளுக்கு ஊடாகப் பயிற்சியளிக்க பொதுஜன முன்னணி அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. ஏகாதிபத்திய தேவைகளின் அடிப்படையில் செயற்படும் மாணவர் கேந்திரிய கல்வியின் கீழ் கல்வியில் சமத்துவமின்மை மேலும் உக்கிரம் அடைகின்றது. உத்தேச மதிப்பீட்டு கலையின் மூலம் ஆசிரியர்களின் மூச்சுத் திணறடிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் பீ.பீ.பீ.3 ஆர் சுற்றறிக்கையின் கீழ் சிறிய பாடசாலைகளில் சில பாடங்கள் வெட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் பாடசாலைகளை இழுத்து மூடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த பாடசாலை மறுசீரமைப்பு என்ற பிற்போக்கு திட்டத்தின் மூலம் கிராமப்புற, நகர்ப்புற தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் பெருவாரியான பாடசாலைகள் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக கலகலத்துப் போயுள்ளது. தோட்டப்புற பாடசாலைகள் இவற்றில் முதலிடம் வகிக்கின்றன.

இலங்கை ஆசிரியர் சங்கத் தலைமைப் பீடத்தின் உதவியோடு ஆசிரியர்கள் மீது திணிக்கப்படும் ஆசிரியர் சேவை அமைப்பு விதிகள் எனப்படுவதை ஆசிரியர்களுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகக் காட்டியவர்களிடையே சந்திமால்-காகல்ல ஸ்டாலின் ஓரணியில் நின்று வந்தவர்கள். உண்மையில் சோ.ச.க. ஆசிரியர் குழு மட்டுமே இது இலவசக் கல்வியை நாசமாக்கும் வேலைத் திட்டத்தின் ஒரு பாகமாகக் காட்டி வந்தது.

இந்த ஆசிரியர் சேவை அமைப்பு விதிகளின் கீழ் பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆசிரியர்களுக்கு ஒரு தொகை தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்த அமைப்பு விதிகளின்படி பதவி உயர்வுகளுக்கு பாடசாலையின் பாடவிதான கடமைகளுக்கு மேலதிகமாக உழைக்க வேண்டிய நேரம் 300 மணித்தியாலங்கள் ஆகும். 100 மணித்தியாலங்கள் சேவை ரீதியான கருத்தரங்குகள் மூலம் உழைக்க வேண்டும். ஆனால் இந்தக் கருத்தரங்குகளின் பேரில் இதுவரை காலமும் வழங்கப்பட்டுவந்த கொடுப்பனவுகள் வெட்டப்பட்டு உள்ளது. அத்தோடு இந்தக் கருத்தரங்குகளும் ஆசிரியர்களின் விடுமுறை காலத்திலேயே நடாத்தப்படும். இதன் மூலம் விடுமுறை உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு விதிகளின் கீழ் ஆசிரியர்களின் சம்பளம் பெருமளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொதுஜன முன்னணி அரசாங்கமும், தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் பெரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. இவை எல்லாவற்றுக்கும் குழிபறிக்கும் வகையில் சமீபத்தில் வெளியான மத்திய வங்கி அறிக்கை அமைந்துள்ளது. இதன்படி ஆசிரியர்களின் சம்பளத்தின் நிலையான பெறுமானம் வீழ்ச்சி கண்டுவிட்டது. மேலும் இந்தப் புதிய அமைப்பு விதிகளின் கீழ் ஒரு தரத்தில் இருந்து மற்றொரு தரத்துக்கு பதவி உயர்வு பெறுகையில் எத்தனை பேர் உயர்தரத்துக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்? இதில் ஒரு உறுதியான நிலைப்பாடு கிடையாது. இதை அரசாங்கமே தீர்மானம் செய்யும்.அந்தத் தரத்துக்கு புதிதாக ஒருவரும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என அரசாங்கம் தீர்மானிக்குமானால் எவருக்கும் பதவி உயர்வு கிட்டாது. அத்தோடு இந்தப் பதவி உயர்வைப் பெற்றுக் கொள்ள சேவை சம்பந்தமான கருத்தரங்குகளுக்கு மேலதிகமாக உழைக்க வேண்டிய மற்ற 200 மணித்தியாலங்களும் என்ன செய்ய வேண்டும்? பாடசாலை அதிபரின் ஆளுமைக்கு கீழ்ப்பட்ட அடிமைகளாக செயற்பட்டாக வேண்டும். இல்லாது போனால் அவரின் சிபார்சு கிடைக்கும் என நினைத்தும் கூடப் பார்க்க முடியாது. பெரும் எண்ணிக்கையிலான பயிற்சி ஆசிரியர்களும் தொண்டர் ஆசிரியர்களும் இன்னமும் நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை..அவர்கள் இந்த அமைப்பு விதிகளுக்கு வெளியில் மிகவும் சொற்ப சம்பளத்துக்கு உரிமைகள் வெட்டிக் கொத்தப்பட்ட நிலையில் "தொழில் பயிலும் ஆசிரியர்கள்" என்ற பெயரில் ஒரு ஆசிரியர் குழு திரட்டப்பட்டு உள்ளது.

வாரம் தோறும் வெளியிடப்பட்டு வரும் சுற்றறிக்கைகள் மூலம் ஆசிரியர்கள் மீது பெருமளவிலான வேலைகள் மேலும் மேலும் திணிக்கப்பட்டு வருகின்றது. வேலை துரிதப்படுத்தப்படுகின்றது.வழங்கப்படும் அற்ப சொற்ப சம்பளத்துக்கு வாழ்க்கையைக் கொண்டு நடாத்த முடியாத நிலையில் "ரியூசன்" வகுப்புக்களை நடாத்தத் தள்ளப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு எதிராக மாணவர்களையும் பெற்றோர்களையும் தூண்டிவிடும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. இதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொடக்கம் அரச இயந்திரத்தின் நனவான சகல தரப்பினரும் ஈடுபட்டுள்ளனர். வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இதில் சேர்ந்து கொண்டுள்ளன.

### சர்வதேச நாணய நிதியம்

சமீபத்தில் வெளியிடப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளை, தற்போது இருந்துவரும் மாணவர் , ஆசிரியர் விகிதாசாரத்தை 22 : 1ல் இருந்து 27 : 1 ஆக மாற்றும்படி நெருக்கியுள்ளது. இதன்படி சுமார் 40000 ஆசிரியர்களுக்கு வேலை இல்லாது போகும்.

வடக்கு கிழக்கிலும் எல்லைக் கிராமங்களிலும் தொழில் புரியும் ஆசிரியர்களின் சேவை நிலைமை ஆபத்தானதாக உள்ளது. யுத்தத்தின் திட்டவட்டமான கெடுபிடிகளோடு உணவு, தண்ணீர் தட்டுப்பாடுகளுக்கும் தொற்று நோய்களுக்கும் அவர்கள் பலியாகி உள்ளார்கள்.

### தாக்குதலின் அடிப்படை

இந்தச் சகல தாக்குதல்களதும் அடிப்படையை விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்தாக வேண்டும். 1980 தசாப்தத்தில் ஆரம்பமான தொழில் நுட்பத்தின் புரட்சிகர அபிவிருத்தியின் காரணமாக உற்பத்தி பூகோளமயமாக்கப்பட்டு உள்ளது. இலாப வீதம் வீழ்ச்சி காணும் நெருக்கடிக்கு இலக்காகி உள்ளது. இந்த அபிவிருத்திகள் காரணமாக முதலாளித்துவ அமைப்பு வீழ்ச்சி கண்டு நெருக்கடி உக்கிரம் கண்டுள்ளது. இந்த நெருக்கடி 1989ல் யப்பான் பங்குமுதல் சந்தையின் வீழ்ச்சியோடு வெளிப்பட்டது. ஆசியாவில் ஆரம்பமாகி யப்பான் ஊடாக முழு முதலாளித்துவ உலகையும் இது பிடித்துக் கொண்டுள்ளது. இலாபவீதத்தைக் காத்துக் கொள்ளும் வெறியில் ஈடுபட்டுள்ள முதலாளிகள் சமூக நலன்புரி சேவைகளை வெட்டித்தள்ள முயற்சிக்கின்றனர். அதனால் அனைத்து நாடுகளிலும் இலவச கல்வி, சுகாதாரம் நாசமாக்கப்பட்டுள்ளது.

முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியோடு ஆசிரியர் , மாணவர் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களும் உக்கிரம் கண்டுள்ளது. முதலாளித்துவ அமைப்பின் கீழான தனிப்பட்ட சொத்து முறையின் கீழான இந்தத் தாக்குதல்களுக்கு முடிவு கட்ட உற்பத்தியில் சோசலிச முறையை ஸ்தாபிதம் செய்ய வேண்டும் சோ.ச.க. ஆசிரியர் குழு இந்த வேலைத்திட்டத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

# சோசலிச சமத்துவக் கட்சியை அனைத்துலக ரீதியில் கட்டியெழுப்புவோம்...

11ம் பக்கத் தொடர்ச்சி

வளர்ச்சி கண்டுள்ள உலக பொருளாதார நெருக்கடி நிலைமையினுள் உலகச் சந்தைக்காக ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள குத்துவெட்டுக்களைச் சுட்டிக்காட்டிய ரத்னாயக்க அந்நிலைமையினுள் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் சகல நாடுகளிலும் தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து உயர்ந்த உபரி உழைப்பைக் கறந்து கொள்வதன் மூலம் இலாப வீதம் வீழ்ச்சி காண்பதைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

உலக முதலாளித்துவ அமைப்பின் ஆழமான நெருக்கடியின் மத்தியில் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் உலகத் தொழிலாளர் வர்க்கத்தை மீண்டும் ஒரு தடவை உலக யுத்தத்தினுள் மூழ்கடிக்கச் செய்யும் ஆபத்து தோன்றியுள்ள விதத்தினைச் சுட்டிக்காட்டிய ரத்னாயக்க, உலகளாவிய விதத்தில் வளர்ச்சி பெறும் சமூக துருவப்படுத்தல் பற்றிய புள்ளிவிபரங்களை முன்வைத்து இதை விளக்கினார்.

### பதிலீடு

இந்தப் பேரழிவுக்கு எதிரான ஒரு பதிலீடு இல்லையா? பதிலீடு உள்ளது. எமது இயக்கம் கம்யூனிஸ்ட் அறிக்கை முன்வைக்கப்பட்ட காலத்தில் இருந்து கடந்த 150 ஆண்டுகளாக போராடியது அந்தப் பதிலீட்டுக்காகவே.இருந்து கொண்டுள்ள இலாபம் கறக்கும் அமைப்பு பொதுமக்களுக்கு வழங்குவது பேரழிவே. தேசிய அரச அமைப்பும் தனியார் சொத்து முறையும் பொதுமக்களுக்கு எதிரானது. அது உலக பொருளாதாரத்துக்கு கைவிலங்காக உள்ளது. தொழிலாளர் வர்க்கம் மனித இனத்துக்கு வரலாற்று முன்நோக்கினை வழங்குவதற்கு தயாராக வேண்டும். அதாவது. இந்தக் காலவதியான உலக முதலாளித்துவ அமைப்பை தூக்கி வீசவும் உலக சோசலிசத்தை ஸ்தாபிதம் செய்யவும் தயாராக வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி வைக்கும் மனித இனம் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அக்டோபர் புரட்சியின் மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்ட உலக சோசலிச புரட்சிக்கான போராட்டத்தின் அவசியங்களுக்கே முகம் கொடுத்துள்ளதாக சுட்டிக்காட்டிய ரத்னாயக்க, உலகத் தொழிலாளர் வர்க்கத்தை அத்தகைய போராட்டத்துக்கு தயார் செய்யப் போராடுவது அனைத்துலகக் குழு மட்டுமே எனவும் சுட்டிக்காட்டினார். அத்தகைய ஒரு நிலைமையினுள் தொழிலாளர் வர்க்கம் இருபதாம் நூற்றாண்டில் தனது வரலாற்றுப் போராட்டங்களின் படிப்பினைகளை ஆழமாக ஆய்வு செய்யவேண்டியதன்

படிப்பகம்

# சிலாபம் நகரசபை தொழிலாளர் மீது கொடிய சுரண்டல்

சிலாபம் நகர சபையிலும் ஆராச்சிகட்டுவை, மாதம்பை, நாத்தாண்டிய பிராதேசிய சபைகளிலும் வருடக் கணக்காக தற்காலிக தொழிலாளர்களாக பலர் வேலை செய்து வருகின்றனர். தம்மை சேவையில் நிரந்தரமாக்கும்படி இந்தத் தொழிலாளர்கள் நீண்டகாலமாக கோரி வந்துள்ள போதிலும் இந்த உள்ளூராட்சி சபைகளின் அதிகாரிகள் தொடர்ந்தும் இவர்களை தற்காலிகத் தொழிலாளர்களாகவே வைத்துக் கொண்டுள்ளனர். 1994ல் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட ஒரு தொகை தொழிலாளர்களுக்கு 1994 96 காலப் பகுதிக்கு கிடைக்க வேண்டிய சம்பளப் பாக்கிப் பணம் இன்னமும் கிடைக்கவில்லை. இந்தத் தொழிலாளர்களின் பேரில் ஊழியர் சேமலாப நிதிக்கு செலுத்த வேண்டிய பணமும் செலுத்தப்படவில்லை எனத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இவை சம்பந்தமாக தொழிலாளர் பாதையுடன் பேசிய ஒரு தொழிலாளி கூறியதாவது : எமக்கு வீடு , தண்ணீர், மலசலகூடங்கள், மற்றும் சுகாதார வசதிகள் கிடையாது. நகரசபை தலைவர் இவைபற்றி பார்ப்பது கிடையாது. இரண்டு வருடகால சம்பளப் பாக்கி செலுத்தப்படவில்லை. தருவோம் எனத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றார்கள். எமக்கு மாதாந்தம் வழங்கும் சவர்க்காரக் கட்டிகளை கூட சில அதிகாரிகள் விற்றுவிடுகின்றார்கள். நாம் வேலை செய்வதற்கு அவசியமான சப்பாத்து, வண்டிகள், குடைகள் போன்றவை போதிய அளவு இல்லை." என்றார்

பெண் தொழிலாளி ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

" எமது வண்டி உடைந்து பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளது. எப்படியோ தொழிலை செய்ய வேண்டிய நிலையில் நாம் உள்ளதால் எமது கையால் பணம் போட்டு அதைத் திருத்தினோம்" என்றார்.

அவ்வாறே இந்தத் தொழிலாளர் சேர்ந்து கொண்டுள்ள யூ.என்.பி.தொழிற்சங்கமான ஐக்கிய உள்ளூராட்சி சங்கமும் தமது எந்த ஒரு கோரிக்கையையிட்டும் போராடுவது கிடையாது என அவர்கள் தெரிவித்தனர். ஆனால் தொழிலாளர்களிடமிருந்து சங்க அங்கத்துவப் பணமாக மாதாந்தம் ரூபா.15ம் மரண உதவி சங்கத்தின் பேரில் ரூபா.10ம் கழித்துக் கொள்கின்றார்கள். இந்தப் பணம் போதாது எனக் கூறி மாதாந்தம் ரூபா. 50கழிக்க தொழிற்சங்கத் தலைவர்கள் திட்டமிட்டுள்ளதாகத் தொழிலாளர்கள் தெரிவித்தனர். தமது எந்த ஒரு பிரச்சினையையும் தீர்க்க நடவடிக்கை எடுக்காமல் தொழிற்சங்கத் தலைவர்கள் நடாத்தும் சுரண்டலை தொழிலாளர்கள் அடியோடு எதிர்ப்பதாக 'தொழிலாளர் பாதை'யிடம் தெரிவித்தனர்.

இந்த நகரசபையினதும் பிராதேசிய சபைகளதும் அதிகாரிகள் தொழிலாளர்களின் பிரச்சினையை தட்டிக் கழித்துவரும் நிலையில் தொழிற்சங்கத் தலைவர்களின் காட்டிக் கொடுப்புக்கு எதிராக சோசலிச சமத்துவக் கட்சியின் தலைமையின் கீழ் நடவடிக்கை குழுக்களினுள் அணிதிரண்டு போராட சிலாபம் நகரசபை தொழிலாளர் சிலர் முன்வந்துள்ளனர்.

சிலாபம் பிராந்தியத்தில் உள்ள உள்ளூராட்சி சபைத் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் பொதுவில் அனைத்து உள்ளூராட்சி சபைகளதும் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளாகும். அவ்வாறே பொதுஜன முன்னணி அரசாங்கம் நகரசபை, பிராதேசிய சபைகளின் கீழ் நடாத்திவரும் நகர சுத்திகரிப்பு வேலைகளை தனியார் துறையிடம் ஒப்படைக்கத் தீர்மானம் செய்துள்ளது. அத்தகைய ஒரு நிலைமையில் சுகாதார தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் மேலும் மேலும் உக்கிரம் அடைகின்றது. ஆதலால் அந்தத் தொழில், சம்பளம், மற்றும் உரிமைகளை கட்டிக் காக்க சோசலிச சமத்துவக் கட்சியின் கீழ் நடவடிக்கைக் குழுக்களை அமைத்துக் கொண்டு முன்வருமாறு நாம் நகரசபை தொழிலாளர்களை வேண்டுகின்றோம்.

### திருகோணமலை ஆஸ்பத்திரி

## ஊழியர்கள் மீது வேலைப் பழு திணிப்பு

எமது ஆஸ்பத்திரிக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள நிர்வாக அதிகாரி எமது வேலைகளை துரிதப் படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். ஊழியர்கள் வரும் போகும் நேரங்களை குறித்து வைக்கும் காட் முறையை அவர் வந்ததும் நடைமுறைக்கு கொணர்ந்தார். இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறுவதால் நாம் பெரிதும் சிரமத்துடனேயே கடமைக்கு வரவேண்டியுள்ளது. சிலவேளைகளில் திடீர் சுற்றி வளைப்புக்கள் இடம்பெறுவதும் உண்டு. இதன் காரணமாக இந்த காட் முறையை எதிர்த்து ஆஸ்பத்திரியின் சகல ஊழியர்களும் வேலைநிறுத்தம் செய்தோம். இதன் பின்னர் தான் அந்த முறை நிறுத்தப்பட்டது." என தொழிலாளர் பாதை அலுவலகத்துக்கு நேரில் வருகை தந்த திருகோணமலை ஆஸ்பத்திரி ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கெடுபிடிகளை விபரிக்கையில் அவர்கள் மேலும் கூறியதாவது : "அவர் தொழிலாளர்களின் சகல பிரச்சினைகளிலும் கைபோட்டுள்ளதோடு தொழிலாளர்களை வாயில் வந்தபடி திட்டித் தீர்க்கின்றார். கடிதங்களை டைப் செய்து ஊழியர்களின் அந்தரங்கக் கோவைகளில் போட்டுவைக்கின்றார். அவசரத்துக்கும் நாம் விடுமுறை எடுக்க முடியாது உள்ளது. இரண்டு நாட்களுக்கு குறைவாக லீவு எடுக்கவும் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் கேட்கின்றார்.

"வெளிவேலை செய்யும் போது ஏதேனும் உடைந்தால் அவற்றைத் தொழிலாளர்களின் செலவில் ஈடு செய்ய வேண்டும். ஊழியர் ஒருவர் மலசலகூடம் சென்ற வேளையில் பழுதடைந்து போயிருந்த கொமட் உடைந்து போயிற்று. இதைப் புதுப்பிக்க அவரிடம் பணம் அறவிடப்பட்டுள்ளது. சில கீழ்மட்ட உத்தியோகத்தர்களும் ஊழியர்களை ஒடுக்குவதற்கு ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு உதவி வருகின்றனர். இதில் கந்தன் என்ற கீழ்மட்ட உத்தியோகத்தர் முன்னணியில் உள்ளார்."

நாம் 'அட்டென்டுகள்' என்ற போதிலும் சௌக்கிய தொழிலாளர்களின் வேலைகளைக் கூட செய்ய வேண்டியுள்ளது. முழு ஆஸ்பத்திரிக்கும் 'அட்டென்டுகள்' 16 ஆண்களும் 30 பெண்களும் மட்டுமே உள்ளனர். ஆனால் இதைவிட இருமடங்கு எண்ணிக்கையிலானோர் அவசியப் படுகின்றனர். தாதிமார்களும் மற்றும் ஊழியர்களும் மோசமான வேலை விரைவுபடுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக இவர்கள் தெரிவித்தனர். சில வேளைகளில் தாதிகள் தொடர்ந்து 30 மணித்தியாலங்கள் வேலை செய்யவும் நேரிட்டுள்ளதாக தெரிய வருகின்றது. அத்தோடு ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகள் உரிய காலத்தில் கிடைப்பது இல்லை எனவும் கடன் பெறுவது பெரும் சங்கடமான காரியம் ஆகியுள்ளதாது இவர்கள் குறிப்பிட்டனர்.

நோயாளிகளின் உரிமைகளை தாக்கும் விதத்தில் நிர்வாக உத்தியோகத்தர்களும் சுகாதாரத் திணைக்கள நிர்வாகிகளும் செயல்படுகின்றனர்.

### பொகவந்தலாவை ஆஸ்பத்திரி

## ஆஸ்பத்திரிக்கு தண்ணீர் கிடையாது

கடந்த ஏப்பிரல் 17ம் திகதி ஆஸ்பத்திரியில் நோயாளர்களதும் ஊழியர்களதும் எந்த ஒரு தேவைக்கும் தண்ணீர் இல்லாது போனதால் பொகவந்தலாவை ஆஸ்பத்திரி இழுத்து முடப்பட்டது. நோயாளர்கள் டிக்கோயா ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். வரட்சிக் காலத்தில் ஆஸ்பத்திரி தேவைகளுக்கு அவசியமான தண்ணீர் விநியோகத்துக்கு எந்த ஒரு திட்டமும் இல்லாததே இதற்குக் காரணம் . இந்தத் தண்ணீர் பிரச்சினையாலும் ஆஸ்பத்திரி இழுத்து முடப்பட்டதாலும் இப்பிரதேச தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் பெரும் சங்கடங்களுக்கு முகம் கொடுத்தனர்.

இந்த நிலைமை தொடர்பாக தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த நிருபர்கள் பொகவந்தலாவை மாவட்ட ஆஸ்பத்திரியின் மாவட்ட வைத்திய அதிகாரியிடம் விசாரித்த போது அவர் கூறியதாவது: "தண்ணீர் இல்லாப் பிரச்சினையால் இந்த ஆஸ்பத்திரியை மூடுவதற்கு முடிவு செய்தோம். அவ்வாறு செய்வதைத் தவிர வேறு வழி எதுவும் இருக்கவில்லை. மறுநாளே ஆஸ்பத்திரிக்கு நீர் கிடைத்ததால் ஆஸ்பத்திரியைத் திறந்தோம். ஆனால் வரட்சிக் காலத்தில் போதுமான அளவு நீரைப் பெற்றுக் கொள்ள அவசியமான திட்டம் எதுவும் இல்லை. இதனால் நோயாளிகள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. இந்த ஆஸ்பத்திரியில் அதிகமாக சிகிச்சை பெறுவோர் அக்கம் பக்கத்தில் உள்ள மக்களும் தோட்டங்களில் உள்ள ஏழைத் தோட்டத் தொழிலாளர்களுமே.

தண்ணீர்ப் பிரச்சினைக்கு மட்டுமன்றி நாம் ஒரு தொகை பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றோம். இந்த ஆஸ்பத்திரி பராமரிப்பு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் செய்யப்படுகின்றது. கடந்த 9 மாதங்களாக இந்த ஆஸ்பத்திரியின் சகல திருத்த வேலைகளும் நிறுத்தப்பட்டுவிட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் ஒப்படைத்ததால் மத்திய அரசாங்கமோ அல்லது மாகாணசபை அரசாங்கமோ இந்தப் பராமரிப்பில் ஈடுபடுவது கிடையாது. சில கட்டிடங்கள் நன்றாகப் பழுதடைந்து போய்விட்டன. சிறுவர் வாட்டுக்கு அஸ்பெஸ்டஸ் கூரை போடப்பட்டுள்ளது. அதற்கு 'சீலிங்கு' கிடையாது. இதனால் வெயில் காலங்களில் சிறுவர்கள் அங்கு இருக்க முடியாது.

நான்கு வார்ட்டுகள் உள்ளன. ஆனால் நோயாளர்களுக்கு வேண்டிய அளவு கட்டிடங்களோ மற்றும் வசதிகளோ கிடையாது. அநேக தருணங்களில் ஒரு கட்டிலில் இருவர் இருக்க வேண்டியுள்ளது.

நாம் முகம் கொடுக்கும் முக்கிய பிரச்சினை மருந்துத் தட்டுப்பாடு. ஆனால் இந்த ஆஸ்பத்திரியை சுற்றிவர உள்ள தோட்டங்களில் இருந்து தொழிலாளர்களும் இப்பிராந்திய ஏழை மக்களும் மருந்து வாங்க வருகின்றார்கள். ஒரு நாளைக்கு வெளிவாரி நோயாளர் பிரிவுக்கு மட்டும் 200க்கும் அதிகமானவர்கள் வருகின்றார்கள். இதனால் எமது ஆஸ்பத்திரிக்கு மருந்துக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பணத்தின் அளவு பெரிதும் பற்றாக்குறையாக உள்ளது.

ஊழியர்களின் எண்ணிக்கையும் பெரிதும் குறைவு. பெண் தொழிலாளர்கள் நால்வர் மட்டுமே உள்ளனர். இதைவிட இருமடங்கினர் இருந்தாலும் கூட சமாளிக்க முடியாது.

---

அவசியத்தை தெளிவுபடுத்திய அவர் அனைத்துலகக் குழு அந்த படிப்பினைகளை உலகத் தொழிலாளர் வர்க்கத்திடம் எடுத்துச் செல்லும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஏகாதிபத்தியம் தயார் செய்யும் பேரழிவுகளுக்கு முகம் கொடுக்க தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் குறுகிய வழிகள் கிடையாது. உலக முதலாளித்துவத்தைத் தூக்கி வீசும் வரலாற்றுப் பணிக்கு அவர்கள் தோள் கொடுக்க வேண்டும். அனைத்துலக சோசலிச முன்நோக்கினாலும் வேலைத் திட்டத்தினாலும் புதிய தலைமுறையினரை பயிற்றி எடுக்க வேண்டும். சகல நாடுகளிலும் சோசலிச சமத்துவக் கட்சிகளைக் கட்டியெழுப்புவது அவசியம்.

அனைத்துலக மூலதனத்துக்கான சிறந்த சுரண்டல் நிலைமைகளை உருவாக்கிக் கொடுககும் பொருட்டு இடம் பெறும் தயாரிப்புக்களில் ஆளும் வர்க்கத்தின் நாற்றெமடுப்பானது இலஞ்சம், கமிஷன் என்ற முறையில் உக்கிரம் கண்டிருப்பதை உதாரணங்களுடன் விளக்கிய ரத்னாயக்க, யூ.என்.பி.முதலாளிகள் இப்போது தமக்கு அந்த விதத்தில் மடியில் போட்டுக் கொள்ள முடியாது போயுள்ளதையிட்டு வெறிபிடித்து பொதுஜன முன்னணியுடன் மோதிக் கொள்ளும் விதத்தையும் அவர் விளக்கினார்.

இந்த நிலைமையின் கீழ் பொதுமக்களின் தலைவிதி என்ன? சமீபத்தில் கொழும்பில் உலக வங்கியின் ஆதரவில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையின்படி இலங்கை வருமான மட்டத்தின் படி தேசிய வருமானத்தில் 40வீதத்தினைப் பெறுவோர் 1973ல் 19.39 வீதத்தில் இருந்து 1978 79ல் 16வீதத்துகரும் 1981 82ல் 15.29வீதத்துக்கும் 1996 97ல் இது 15.32வீதம் வரையும் வெட்டப்பட்டுள்ளது. உயர்ந்த வருமானத்தைப் பெறும் 20 வீதத்தினர் தேசிய வருமானத்தில் அனுபவிப்பது 1973ல் 42.95வீதத்தில் இருந்து 1996 97ல் 15.32 வீதம் வரை வெட்டப்பட்டுள்ளது. உயர்ந்த வருமானம் பெறும் 20 வீதத்தினர் தேசிய வருமானத்தில் அனுபவிக்கும் அளவு 1973ல் 42.95ல் இருந்து 1996 97ல் 49.95 வரை உயர்ந்துள்ளது. இது தேசிய வருமானத்தில் சரி அரைப்பங்கு முதலாளிகளாலும் உயர் மத்திய வர்க்கத்தினாலும் ஏப்பமிடப்படுவதைக் காட்டுகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத யுத்த தாக்குதலை உக்கிரமாக்கவும் அதைச் சாட்டாகக் கொண்டு நாட்டின் ஏனைய பாகங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக அடக்குமுறையை கொடுமையாக்க நடவடிக்கை எடுப்பதையும் தெளிவுபடுத்திய ரத்னாயக்க இந்த நிலைமையினுள் அரசாங்கத்தினதும் முதலாளித்துவ எஜமானர்களதும் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்களதும் இளைஞர்களதும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களதும் போராட்டங்கள் அபிவிருத்தி காணும் விதத்தையும் அவர் கூட்டத்தினருக்கு தெளிவுபடுத்தினார்.

www.padippakam.com

# இந்தியாவின் அணுகுண்டு சோதனையின் பின்னணியில்

## ஆசிரியர் குழு அறிக்கை

இந்தியா மே இரண்டாம் வாரத்தில் ஐந்து அணுக் குண்டுகளை வெடித்துப் பரீட்சித்தமை உலக ஜனத்தொகையில் சரி அரைவாசிக்கும் அதிகமானோர் வசிக்கும் தெற்கு, கிழக்கு ஆசியாவினுள் அணு ஆயுத போட்டியை உக்கிரமாக்கும் ஆபத்தை உருவாக்கியுள்ளது.

அந்த ஆபத்தை நியாயப்படுத்தும் வகையில் பாகிஸ்தான் மே 28ம் திகதி ஐந்து அணுக் குண்டுகளை வெடிக்க வைத்தது.

இந்த அணுக்குண்டு வெடிப்புக்கள், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை உட்பட்ட முழுப் பிராந்தியத்தினுள்ளும் வர்க்க மோதுதல்களுக்கான நிலைமைகள் அபிவிருத்தி கண்டு பாரதூரமான அரசியல் நெருக்கடி உருவாகியுள்ள ஒரு நிலைமையில் இடம்பெற்று வருகின்றது.

இந்தியாவிலும் முழுப் பிராந்தியத்திலும் தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் இந்த அணுக் குண்டு வெடிப்புக்களின் பின்னணியில் இருந்து கொண்டுள்ள அரசியல் எச்சரிக்கைகளையும் வளர்ச்சி கண்டுவரும் ஆபத்தான அரசியல் நிலைமையையும் பற்றி கவனம் செலுத்துவது அவசியமான பணியாகியுள்ளது.

சமீபத்தில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பேர்டினன்டிசில் இந்தியாவின் பாதுகாப்புக்கு இருந்துவரும் பாரதூரமான அச்சுறுத்தலாகக் குறிப்பிட்ட சீனாவும் இந்தியாவின் பரிசோதனைகளுக்கு ஆத்திரத்தைக் காட்டிக் கொண்டுள்ளது. அணு பலத்தை கைவிடும்படி இந்தியாவை நெருக்குமாறு சீன வெளிநாட்டு அமைச்சர் டாங் ஜியாங் சுவான் அனைத்து அரசாங்கங்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியாவின் அணுக்குண்டு சோதனையைப் பற்றி தாம் எதுவும் அறிந்திருக்கவில்லை என அமெரிக்க அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது. அமெரிக்க வெளிநாட்டு விவகார ஆய்வாளர்கள் இதனை தசாப்தத்தின் "கடைகெட்ட மொட்டை உளவுச் சேவை" என வருணித்துள்ளனர். 1994ல் இயற்றப்பட்ட அணு ஆயுத அபிவிருத்தி தடைச் சட்டம் காரணமாக வாஷிங்டன் ஆட்சியாளர்களினால் இந்தியாவுக்கு எதிராகப் பரந்த அளவில் தடை விதிக்காமல் இருக்க முடியாது போய்விட்டது. ஆனால் இந்தியாவுடன் புதிய "முலோபாய கூட்டினை" ஸ்தாபிதம் செய்யும் எதிர்பார்ப்புடன் இருந்து கொண்டுள்ள கிளின்டன் ஆட்சி, முதலில் இந்தியா அணு ஆயுத சோதனைகளை தடை செய்யும் அனைத்துலக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இந்தியா திட்டவட்டமான முறையில் இணங்குமானால் அது தடையைத் தவிர்த்துக் கொள்ள முடியும் எனக் கூறியது. புதுடில்லி அரசாங்கம் இதற்குக் காட்டிய பிரதிபலிப்பானது மேலும் இரண்டு அணுக் குண்டுகளைப் பரீட்சிப்பதாக அமைந்தது.

இதுவரை காலமும் யுத்தத்தில் அணு ஆயுதத்தை பாவித்துள்ள ஒரே உலக வல்லரசான அமெரிக்கா அணு ஆயுத அபிவிருத்தி தொடர்பாக முற்றிலும் மோசடியான நிலைப்பாடாகும். இந்திய அரசாங்கம் உடனடியாக சுட்டிக்காட்டியது போல் வாஷிங்டனின் இலக்கு, அணு ஆயுதங்களை ஒழிப்பது அல்ல; அதற்குப் பதிலாக இதுவரை காலமும் உலகின் பெரியதும் பேராபத்தானதுமான ஆயுதக் களஞ்சியமாக அமெரிக்கா தொடர்ந்தும் இருந்து வருவதை காப்பதேயாகும். அணு ஆயுதங்களின் மூலம் எந்த ஒரு நாடும் மகத்துவத்தை எட்டிவிட முடியாது என கிளின்டன் போஸ்டாமில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் இந்தியாவுக்கு போதித்த போது ஜேர்மன் சான்சலர் ஹெல்மட் கோலினால் கூட சிரிப்பைத் அசக்க முடியாது போய்விட்டது. கடந்த இரண்டு தசாப்தங்களாக அமெரிக்க வெளிநாட்டு கொள்கையின் ஒரு உறுதியான அங்கமாக உலக அரங்கில் அமெரிக்க அதிகாரத்தை பாவிப்பதும் அதன்மூலம் அமெரிக்கா இழந்து போயுள்ள அரசியல், பொருளாதார அதிகாரத்தின் பேரில் நஷ்டஈடு பெற்றுக் கொள்வதும் அமெரிக்க இராணுவ பலத்தை பயன்படுத்துவது விளங்கி வந்துள்ளது.

## பாரதீய ஜனதா கட்சியும் குண்டும்

மே மாதத்தின் இரண்டாம் வாரத்தில் அணு ஆயுதங்களை பரீட்சிப்பதன் தெளிவான இலக்கு , இந்து சோவினிச பாரதீய ஜனதா கட்சி புதுடில்லியில் ஆட்சியில் குந்திக் கொண்டுள்ளதைக் காட்டிக் கொள்வதாகும்.

கடந்த மார்ச்சில் நடைபெற்ற ஈடாட்டம் கண்ட தேர்தலின் பெறுபேறாக 18 ஆட்சிகளைக் கொண்ட ஒரு கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. இந்தக் கூட்டரசாங்கத்தின் பாராளுமன்ற ஆசனங்களில் மூன்றில் இரண்டுக்கு அதிகமானவற்றையும் அனைத்து முக்கிய அமைச்சர் பதவிகளுடனும் பாரதீய ஜனதா கட்சி புதிய அரசாங்கத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றது. ஆனால் மே இரண்டாம் வாரம் வரை குறைந்தபட்சம் பகிரங்கமாக அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலை தயார் செய்தவர்கள் பாரதீய ஜனதா கட்சியின் மாநில கூட்டாளிகளே. கூட்டரசாங்கத்துக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ளப்போவதாக மிரட்டுவதன் மூலம் இவர்கள் அடுத்தடுத்து பல தடவைகள் பாரதீய ஜனதா கட்சியிடம் இருந்து சலுகைகளை பிடுங்கிக் கொண்டனர்.

மேலும் பாரதீய ஜனதா கட்சி தமது வேலைத்திட்டத்தில் உள்ள பெரிதும் இனவாத குழறுபடிகளைக் கட்டவிழ்த்துவிட நேரிட்டுள்ளது. அயோத்தியில் புகழ்பெற்ற முஸ்லீம் பள்ளிவாசல் இருந்து வந்த இடத்தில் இந்து இராமபிரானின் ஆலயத்தை அமைக்கும் இத்தகைய அம்சங்கள் இந்தியர்களின் பெரும்பான்மையினரின் கவனத்தை ஈர்க்காது போனாலும் பா.ஜ.க. பாஷிச காரியாளர்களை அணிதிரட்டுகையில் அது ஒரு திட்டவட்டமான வேலைத்திட்டத்தை இட்டுநிரப்புகின்றது.

பாரதீய ஜனதா கட்சி அணு ஆயுத சோதனை மூலம் அமெரிக்காவுடன் அப்பட்டமான மோதலை உருவாக்கிக் கொண்டுள்ளதன் நோக்கம், பாராளுமன்றத்தில் முழுப் பெரும்பான்மையை பெற்றுக் கொள்வதற்கு தேசியவாத வெறியை சுரண்டிக் கொள்ளும் வகையில் திடீர் தேர்தலுக்கு களத்தை தயார் செய்வதற்கே என்ற ஊகமும் பரவியுள்ளது. குறைந்த பட்சம் பா.ஜ.க. அடுத்த மாதத்தில் சமர்ப்பிக்க உள்ள வரவு செலவுத் திட்டத்தில் இருந்து பொதுமக்களின் கவனத்தை திசை திருப்பும் பொருட்டு வாஷிங்டனுடனான மோதுதலை பயன்படுத்தும். அந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் உணவு, உரவகைகள், எரி பொருட்களின் பேரில் வழங்கப்பட்டுவரும் உதவி மானியங்களை வெட்டுவதன் மூலம் பொதுத் துறையில் அரச செலவினங்களை அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கின்றது. பாரதீய ஜனதா கட்சி பிரதமர் வாஜ்பாய் இந்திய கைத்தொழில் சம்மேளனத்தின் வருடாந்த மகாநாட்டில் பேசுகையில் "தேசபக்த"மந்திரத்தின் நிஜ இலக்கினைப் பின்வருமாறு குறிப்பிட்டார்: "அனைவரதும் பொது தேசபக்த மந்திரம் இதுவாக வேண்டும்: (பொருளாதார ) அபிவிருத்தி, மேலும் அபிவிருத்தி, மேலும் மேலும் அபிவிருத்தி. நூற்றுக்கு 7-8 வீதத்துக்கு இடையே அபிவிருத்தி இலக்கு ஒன்றும் பெரிதல்ல. அத்தகைய ஒரு இலக்கு இருக்கையிலும் கூட அபிவிருத்தி உலகத்துடன் தோளோடு தோள் நிற்க இந்தியாவுக்கு அரை நூற்றாண்டு காத்திருக்க நேரிடும். இதைக் காட்டிலும் மெதுவாக நாம் செல்ல முடியுமா? " வாஜ்பாய் இராட்சதக் கம்பனிகளுக்குப் பெரிதும் வாய்ப்பான நிலைமைகளை தயார் செய்யும் பொருளாதார நிகழ்ச்சி நிரலினை அம்பலப்படுத்தினார்.

பாரதீய ஜனதா கட்சியின் கணக்கீடுகள் அப்படி இருக்கையில் இந்தியாவின் அரசியல் அரங்கின் உயர் மட்டத்தினரும் மத்திய வகுப்பினரும் 1974க்கு பின்னர் இந்தியா நடாத்திய முதலாவது அணுக்குண்டு சோதனைக்கு ஹாய் போட்டுள்ளார்கள். அதற்குக் காரணம் அது இந்திய முதலாளி வர்க்கத்தின் நீண்டகால புவிசார் அரசியல் இலக்குகளுக்கு ஆதரவு வழங்குவதேயாகும். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டுள்ள நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியும் இந்த அணு ஆயுத பரிசோதனைகளுக்கு ஹாய் போட்டுள்ளார். இந்தக் குண்டுவெடிப்பினை பாரதீய ஜனதா கட்சிக்கு அரசியல் ஆதாயம் தேடிக் கொள்ளப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என அவர் கூறியுள்ளார். தென் ஆசியாவின் மேலாதிக்க சக்தியாகவும் ஆசிய நடவடிக்கைகளினுள் சீனாவுக்கு இணையான ஒரு அங்கீகாரத்தினைத் தேடிக்கொள்ள இந்தியா நீண்ட காலமாகவே முயற்சித்து வந்துள்ளது. இந்தியா சோவியத் யூனியனுடன் சிறப்பு பொருளாதார, அரசியல் கொடுக்கல் வாங்கல்களை அனுபவித்துவந்தமையானது குளிர்யுத்த காலப்பகுதியினுள் ஐக்கிய அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் இந்தியாவுக்கு இந்த அந்தஸ்தினை வழங்குவதற்கு தடையாக இருந்துவிடவில்லை. ஆனால் இன்றைய தசாப்தத்தினுள் முக்கிய முதலாளித்துவ வல்லரசுகள் இந்தியாவுக்கு இராஜதந்திர ரீதியில் இன்னமும் மாற்றாந்தாய் மனப்பான்மையையே காட்டிவருகின்றன. உதாரணமாக ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பாதுகாப்புப் சபையில் நிரந்தரப் பிரதிநிதித்துவத்துக்கான இந்தியாவின் கோரிக்கையை அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் எதிர்த்தன. இதைக்காட்டிலும் முக்கியமான காரணம் என்னவெனில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான பொருளாதார இடைவெளி தொடர்ந்தும் அதிகரித்து வருவதேயாகும். இது சம்பந்தமாக வெளிநாட்டு மூலதனத்தின் செயற்பாடு கொஞ்சநெஞ்சம் அல்ல. 1990களில் சீனா வெளிநாட்டு நேரடி முதலீடாக 140 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான தொகையை ஈர்த்துக்கொண்டதோடு அந்தக் காலப்பகுதியினுள் இந்தியாவுக்கு வந்தது 10 பில்லியன் டாலர்களுக்கும் குறைவான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மட்டுமேயாகும்.

இந்திய முதலாளி வர்க்கத்தின் ஊதுகுழலான 'இன்டியா ருடே' சஞ்சிகை, "சுதந்திர சந்தைப் பொருளாதார" வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிட இந்த அணுக்குண்டு பரிசோதனையுடன் தலைநீட்டியுள்ள உணர்வுகளை பயன்படுத்துமாறு அரசாங்கத்துக்கு பின்வருமாறு கூறியிருந்தது:

".அணு ஆயுதம் நீண்ட காலமாகவே பா.ஜ.க.நிகழ்ச்சி நிரலின் ஒரு பாகமாக இருந்துவந்தாலும் சுதந்திர அமைப்புக்களின் உயிர்நாடியை எடுத்துக் காட்டும் பொருளாதாரமும் அதன் நிகழ்ச்சி நிரலில் ஒரு பாகமாக விளங்கியது. இந்த இரண்டாவது வாக்குறுதியையும் யதார்த்தமாக்குவதற்கான காலம் வந்துவிட்டது. இதற்குச் சில கண்டிப்பான தீர்மானங்கள் அவசியம் என்பது உண்மை..அதற்கு இன்று பரவியுள்ள மனோநிலை போன்ற ஒரு நல்ல வாய்ப்பான நிலைமையை அரசாங்கத்தினால் தேடிக் கொள்ள முடியாது...

"இந்தியாவில் பலவீனம் நன்கு பிரசித்தமானது: அதிகரித்த அளவிலான அதிகாரத்துவ ஆட்சியாகும். வரிகளில் மிகவும் பெரும் பங்கினை விரல்விட்டு எண்ணக்கூடியோரே செலுத்துகின்றனர். வீணாகிப் போகும் உதவிமானியம், நிதியை ஏப்பமிடும் அரசாங்கத் துறை ஆகியனவாகும். இவற்றில் எதைப் பற்றியும் பொறுப்பேற்பது அவற்றில் ஈடுபட்டவர்களை கோபமூட்டவும் பொதுமக்களின் கோபத்தை தூண்டவும் காரணமாகின்றது. கடந்த அரசாங்க நெருக்கடியை பூசிமெழுக மட்டுமல்லாது அணுவாயுத பரிசோதனைகள் மூலம் கிடைத்த புகழுடன் வாஜ்பாய் இப்போது மிகவும் நன்றாக கைபோடுவதற்கான தருணம் கிடைத்துள்ளது. அவருக்கு மற்றொரு சந்தர்ப்பம் கிடைக்காது. துக்ககரமான முறையில் அத்தகைய ஒரு சந்தர்ப்பம் இந்தியாவுக்கும் கிடைக்க முடியாது. (இந்தியா ருடே 1998 மே 25 இதழின் ஆசிரியத் தலையங்கம்)

அணுவாயுத பரிசோதனையைச் சூழ பாரதீய ஜனதாக் கட்சியும் முதலாளித்துவக் காங்கிரசும் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் தூவிவரும் இந்து சோவினிசம், தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைத் தாக்கும் பொருட்டு பயன்படுத்துமாறு விடுக்கும் பகிரங்கமான ஒரு வேணடுகோளாக இது இருந்து கொண்டுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியின் தேசியவாத இராணுவவாதத்துக்கு இந்திய ஜனத் தொகையின் ஒரு பகுதியினர் இடையே ஏதேனும் ஆதரவு கிடைக்குமானால் அதற்குக் காரணம், இந்தியாவுக்கு ஏகாதிபத்திய ஒடுக்குமுறையின் மரபுகள் இருந்து கொண்டிருப்பதேயாகும். பல தசாப்தங்களாக அமெரிக்கா இந்தியா தொழில்நுட்பம் பக்கம் ஈர்க்கப்படும் வாய்ப்புக்களை இழுத்துமூடச் செயற்பட்டு வந்துள்ளது. முதலாவதாக பா.ஜ.க.வினால் சமர்ப்பிக்கப்பட்ட "தாராண்மையமாக்க" வேலைத்திட்டம் என்பதன் அர்த்தம் உதவிமானியங்களை பரந்த அளவில் வெட்டுவதும் அரசாங்கத் துறை கைத்தொழில்களை மூடுவதும், விவசாயிகளுக்கு பாதுகாப்பு வழங்கிய காணி உச்சவரம்புகளை ஒழிப்பது ஆகியனவாகும். அதுமட்டுமன்றி இந்தியத் துணைக் கண்டத்தை மதக் கோட்டின் அடிப்படையிலான துருவப்படுத்தப்பட்ட இரண்டு எதிரி அரசுகளாக பிரித்தமை, இந்திய முதலாளி வர்க்கத்தின் மௌன அங்கீகாரத்துடன் பிரித்தானிய, அமெரிக்க ஏகாதிபத்தியவாதத்தினால் இந்தியா மீது திணிக்கப்பட்ட யுத்தத்தின் பின்னைய தீர்வின் ஒரு பாகமாகும்.

## காங்கிரஸ் "தேசிய இயக்கம்" வீழ்ச்சி கண்டமை

அரசியல் ஸ்திரப்பாட்டை ஊர்ஜிதம் செய்வதற்கு பாரதீய ஜனதா கட்சி வெற்றிபெறுமானால் அது உலக முதலாளித்துவ பொருளாதாரத்துடன் இந்தியாவை இணைப்பதன் மூலம் சிருஷ்டிக்கப்படும் சமூக ஆதாளபாதாளத்தை பிற்போக்கு திசையில் திருப்பும்பொருட்டு இராணுவவாதத்தையும் இனவாதத்தையும் பயன்படுத்தும் படுபிற்போக்கு வலதுசாரி ஆட்சி திணிக்கப்படும்.

பாரதீய ஜனதா கட்சி 1947 48 பிரிவினையின் வன்முறையின் போது கலகங்களில் ஈடுபட்ட இந்து இனவாத இராணுவ அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.சைக் கொண்டே உருவாக்கப்பட்டது. இந்தியாவின் இன்றைய பிரதமர் அடால் பிஹாரி வாஜ்பாயும் உள்நாட்டு அமைச்சர் எல்.கே..அத்வானி உட்பட்ட பீ.ஜே.பி.யின் தலைவர்கள் சலரும் ஆர்.எஸ்.எஸ். "செயற்பாட்டு தொண்டர்கள்".

பல தசாப்தங்களாக ஆர்.எஸ்.எஸ்.ம் அதன் அரசியல் நிழலும் (1980ல் அமைக்கப்பட்ட பீ.ஜே.பி. ஜனசங்

படிப்பகம்

www.padippakam.com





கடந்த பொதுத் தேர்தலில் வாக்களிக்க கியூவில் நிற்கும் இந்தியப் பெண்கள்

அமைப்பின் கூட்டாகும்.) இந்திய அரசியலில் ஒரு கணிசமான சக்தியாக விளங்கவில்லை. மிகச் சமீபத்தில் 1984 தேர்தலில் கூட பா.ஜ.க. இந்திய பாராளுமன்றத்துக்கான தேர்தலில் இரண்டு ஆசனங்களை மட்டுமே வெற்றி கொண்டது.

பா.ஜ.க.வின் எழுச்சி, காங்கிரஸ் கட்சியினதும் காங்கிரஸ் மிகவும் ஆர்வத்துடன் நடைமுறைக்கிட்ட ஆளும் வர்க்கத்தின் "தேசிய திட்டங்களது" வீழ்ச்சியுடனும் பிணைந்து கொண்டுள்ளது.

பிரித்தானிய ஆட்சிக்கும் நிலச்சுவாந்தர்களுக்கு எதிரான போராட்டத்துடனுமான தமது உறவு காரணமாக காங்கிரஸ் கட்சி ஏகாதிபத்தியத்துக்கு எதிரான வேலைத்திட்டத்துடனுமான தமது உறவு காரணமாக காங்கிரஸ் கட்சி ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இந்தியாவின் தேசிய முதலாளி வர்க்கத்தின் நிலைமையை பலப்படுத்தும் இலக்குடன் இறக்குமதிப் பதிலீடு, உயர்ந்த இறக்குமதி வரி, சோவியத் யூனியனுடன் சிறப்பு பொருளாதார பிணைப்புக்கள் முதலியன ஊடாக நடைமுறைக்கிட்ட தேசிய பொருளாதார வேலைத்திட்டத்தைச் சூழ பொதுமக்களின் ஆதரவை திரட்டிக் கொள்ள முடிந்தது.

இந்த வேலைத்திட்டம் காரணமாக 1950பதுகளிலும் 1960பதுகளிலும் கனரக கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் சக்தி முதலாளி வர்க்கத்துக்குக் கிடைத்த போதிலும் 1970பதுகளில் ஆரம்பமான கணனி, தொலைத் தொடர்பு புரட்சியின் பெறுபேறாக அது சிதறுண்டு போயிற்று. காங்கிரஸ் அரசாங்கம் காங்கிரஸ் "சோசலிசத்தை" உத்தியோகபூர்வமாக நிராகரித்து இந்தியாவை உலகச் சந்தையின் திசையில் 1991ல் மீண்டும் திருப்பியபோது இந்திய தொழில்நுட்பத்துக்கும் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் அன்று நிலவிய தொழில்நுட்பத்துக்கும் இடையே நிலவிய இடைவெளி, இதற்கு 20ஆண்டுகளுக்கு முன்னர் நிலவியதைக் காட்டிலும் பரந்ததாக விளங்கியது. உலகச் சந்தையில் இந்தியாவின் பங்கு நூற்றுக்கு 0.5 வரை வீழ்ச்சி கண்டு இருந்தது. பொதுமக்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் பெரிதும் தரித்திரம் பிடித்த நிலைமையினுள் ஜீவியம் நடாத்தியதோடு அந்த நிலைமையினுள்ளேயே தொடர்ந்தும் வாழ்க்கையை நடாத்தி வருகின்றார்கள். 350 மில்லியன் இந்தியர்கள் "முழு வறுமை" யினுள் வாழ்வதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

காங்கிரஸ் தேசியத் திட்டங்கள் சிதறுண்டு போனதற்கு சமாந்தரமாக அது அடிப்படையாகக் கொண்டிருந்த பழைய அரசியல் அமைப்பும் வீழ்ச்சி கண்டது. 12வது லோக் சபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பொதுமக்களின் வாக்குக்களில் 25.6 வீதத்தையே பெற்றுக் கொண்டதோடு மிகவும் ஜனநெருக்கடி மிகுந்த நான்கு மாநிலங்களான உத்திரபிரதேஷ், பீஹார், மேற்கு வங்காளம், தமிழ்நாட்டில் இரண்டு மூன்று ஆசனங்களை மட்டுமே வெற்றி கொள்ளும் நிலைக்கு வீழ்ச்சி கண்டது.

சமூக நெருக்கடிக்கு எதுவிதமான முற்போக்குத் தீர்வையும் வழங்க முடியாது போன முதலாளி வர்க்கம் பொதுமக்களை சிறைப்படுத்தி, ஸ்தம்பிக்க வைக்கும் பொருட்டு மாநிலவாத, இனவாத, சாதிவாத கட்சிகள் பக்கம் திரும்பியுள்ளது.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே பா.ஜ.க. ஒரு முக்கிய சக்தியாகியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக பா.ஜ.க. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினதும்(CPI) இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியினதும் (CPIM) காட்டிக் கொடுப்புக்களின் துணையாலேயே கொழுத்துப் பருத்துள்ளது. கடந்த பல தசாப்தங்களாக இந்த ஸ்டாலினிசக் கட்சிகள் தொழிலாளர் வர்க்கத்தைக் காங்கிரசுக்கும் இந்திய முதலாளி வர்க்கத்துக்கும் கீழ்ப்படுத்தும் பொருட்டு இவை ஏகாதிபத்தியத்துக்கு எதிரான பாதுகாப்பு தடை மதில்கள் என்ற அடிப்படையில் செயற்பட்டன. இந்தியாவின் அரசியல் உயர்மட்ட புள்ளிகளுடன் சேர்ந்து, சீ.பீ.ஐ., சீ.பீ.எம். கட்சிகளும் 1990களின் தொடக்கத்தில் தாராண்மைமயமாக்கத்தை அணைத்துக் கொண்டனர். அவர்கள் 1996 தொடக்கம் கடந்த மார்ச் மாதம் வரை ஆட்சியில் இருந்து கொண்டு "தாராண்மையமாக்கத்தை" முன்னெடுத்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முக்கிய சிருஷ்டிகர்த்தாக்களாகினர்.

அவர்களின் தரப்பில் இருந்து பார்த்தால் கிளின்டன் அரசாங்கம் பா.ஜ.க. தலைமையிலான அரசாங்கத்துடன் செயற்பட பெரிதும் அக்கறை காட்டியுள்ளது. கிளின்டனின் சிறப்பு பிரதிநிதியான பில் றிச்சார்ட்சன் அங்கு "கட்டுப்பாடு" தொடர்பாக பாரதீய ஜனதா கட்சியை பாராட்டியது கடந்த மார்ச் மாதத்தில். செய்தி அறிக்கைகளின் படி றிச்சார்ட்சனுக்கும் இந்துமத சோவினிச கடும் போக்காளராகப் பெயர்போன அத்வானிக்கும் இடையே சிறப்பு உறவுகள் ஆரம்பமாகியது.

## ஸ்டாலினிஸ்டுகளின் முண்டு

ஆனால் பா.ஜ.க.க்கு கிளின்டன் அரசாங்கத்துடன் தோன்றியுள்ள முரண்பாட்டை ஏகாதிபத்திய எதிர்ப்பு பொதுமக்களின் உணர்வை சுரண்டிக் கொள்ளப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இரண்டு ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சிகளதும் முண்டும் அதற்குக் கிடைக்கத் தொடங்கியுள்ளது. ஸ்டாலினிச இந்திய கம்யூனிஸ்ட்(மார்க்சிஸ்ட்) கட்சியின் அரசியல் குழு அணுக்குண்டு பரிசோதனையையும் அமெரிக்காவின் தடையையும் பற்றி வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: "இந்தியாவுக்கு எதிராக தொடுக்கப்படும் எந்த ஒரு பயமுறுத்தலையும் உயிராபத்தையும் பொதுமக்களின் சகல பகுதியினரும் ஒன்றிணைந்து நிராகரிப்பார்கள்."

இது உண்மையில் பா.ஜ.க. அரசாங்கத்துடன் ஐக்கியத்துக்கு விடுக்கும் ஒரு அழைப்பாகும். முதலில் நீண்ட காலமாக காங்கிரஸ் கட்சி முதலாளிகளதும் பின்னர் அதில் இருந்து விலகிய பல்வேறு முதலாளித்துவக் குழுக்களின் "முற்போக்கு" பற்றியும் போதித்ததன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தை முதலாளி வர்க்கத்துக்கு கீழ்ப்படுத்தும் விதிமுறையில் இரண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஈடுபட்டு வந்தன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(CPI) 1975 1977ல் இந்திரா காந்தி அரசாங்கம் கொணர்ந்த கொடிய அவசரகாலச் சட்ட ஆட்சிக்கு ஆதரவு வழங்க முன்வந்தது. 1991 காங்கிரஸ் கட்சி "தேசிய வேலைத் திட்டத்தை" கைவிட்டதன் பின்னர் உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளைகளுக்கு போலி எதிர்ப்பைக் காட்டிக் கொண்ட போதிலும் இந்த இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் உண்மையில் அனைத்துலக மூலதனத்தின் நலன்களுக்கு சேவை செய்தன. கடந்த முதலாளித்துவ ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்ட சீ.பீ.ஐ. அதில் இணைந்து கொண்டதோடு சீ.பீ.ஐ.(எம்) வெளியில் இருந்து கொண்டு அதற்கு முண்டு கொடுத்தது. மேற்கு வங்காளத்திலும் கேரளத்திலும் சீ.பீ.ஐ(எம்) மாநில அரசாங்கம் வெளிநாட்டு மூலதனத்தின் நேரடி ஏஜன்டாகச் செயற்படுகின்றது. இம்முறை தேர்தலின் பின்னர் சீ.பீ.ஐ.(எம்) செயலாளர் சுர்ஜித் சிங் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டரசாங்கத்துக்கு செல்லக் கூட தமது தயார் நிலையைக் காட்டிக் கொண்டார். இப்போது பா.ஜ.க.வுடன் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோசம் எழுப்பவும் இக்கட்சி முன்வந்துள்ளது. தொழிலாளர் வர்க்கத்தை அரசியல் ரீதியில் முடமாக்கியும் அதன் அரசியல் சுயாதீனத்தின் குரல்வளையை நசுக்கியும் ஏகாதிபத்திய சார்பு முதலாளி வர்க்கத்தின் வேலைத் திட்டத்துக்கு கொண்டு செல்ல இரண்டு ஸ்டாலினிசக் கட்சிகளும் அவற்றின் தொழிற் சங்கங்களும் அரச அதிகாரிகள் சகலரையும் இறக்கியுள்ளது.

## தீர்க்கமான பணி

சோவினிசத்தையும் இராணுவ வாதத்தையும் கிளறிவிட்டுக் கொண்டு பா.ஜ.க. அரசாங்கத்தின் ஊடாக நடாத்தப் போகும் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர் வர்க்க முன்நோக்கின் மூலம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஒன்றிணைப்பது தீர்க்கமான பணியாகியுள்ளது. முதலாளி வர்க்கத்தின் சகல பகுதியினருக்கும் எதிராக அனைத்து தேசிய, மத, இன மக்கட் குழுக்களையும் அனைத்துலகவாத ஐக்கியத்தின் அடிப்படையில் அணிதிரட்ட வேண்டும். முதலாளித்துவ எதிர்ப்பு சமூக சமத்துவத்துடன் கூடிய வேலைத்திட்டமே இப்போராட்டத்தின் வேலைத்திட்டமாகும்.

ஏகாதிபத்தியத்திடமிருந்து நிஜ சுதந்திரத்தை பெற்றுக் கொள்வதும் ஜனநாயகத்தை ஸ்தாபிதம் செய்வதும் பல்வேறு இன, மதக் குழுக்களை ஜனநாயக அடிப்படையில் ஒன்றிணைப்பதும் நிலவுடமையாளர்களதும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளதும் அடக்குமுறையையும் அதன் ஆயுதமான சாதிவாதத்தை ஒழிப்பதும், தென் ஆசிய மக்களுடன் ஜனநாயக ஐக்கியத்துக்கு செல்வதும் சமூக சமத்துவத்தை ஸ்தாபிதம் செய்வதும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர்வதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும். இந்தியாவில் வாழும் கோடானு கோடி ஒடுக்கப்படும் விவசாயிகளுக்கும் தேசிய சிறுபான்மையினருக்கும் மதப்பிரிவினருக்கும் இப்போராட்டத்தின் தலைமையை தொழிலாளர் வர்க்கமே வழங்க முடியும். அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்தையும் சோசலிசத்துக்கான போராட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் தோழமையுடன் செயற்படும் இந்திய சோசலிச தொழிலாளர் கழகம், இந்த முன்நோக்கையும் வேலைத்திட்டத்தையும் இந்தியாவினுள் வழங்கும் ஒரே அமைப்பாகும்.

## இலங்கையினுள் தாக்கம்

இந்தியாவின் அணுக்குண்டு வெடிப்புக்கள் இலங்கை அரசியல் அரங்கினுள் பிரதிபலித்துள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமர் மே 15ம் திகதி வெளிநாட்டு பத்திரிகையாளருடனான கலந்துரையாடலில் "இந்தியா ஒரு அணுவாயுத சக்தியாகுவதை நாம் நிச்சயம் எதிர்க்கப் போவதில்லை" என்றுள்ளார். அது அமெரிக்க தூதரகத்தின் விசாரணைக்கு உள்ளாகும் எனவும் வெளிநாட்டு அமைச்சரின் அறிக்கை நிஜ நிலைமையில் இருத்தி அறிக்கை செய்யப்படவில்லை எனவும் அரசாங்கம் பதில் அளித்ததாக குறிப்பிடப்பட்டது. ஆனால் உண்மை நிலைமை இதுதான்: பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளி வர்க்கத்தின் சில பகுதியினரும் இனவாத யுத்தத்தை முன்னெடுக்கவும் மற்றும் பிற்போக்கு திட்டங்களுக்கு ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடனும் இந்திய முதலாளி வர்க்கத்தின் வாலில் தொங்க இதைச் சந்தர்ப்பமாக்கிக் கொண்டுள்ளனர். ஒரு தடவை இலங்கை முதலாளிகள் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை தருவித்ததன் பயங்கர பெறுபேறுகள் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் இருந்து கொண்டுள்ளது. தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கும் பிற்போக்கு நலன்களின் பேரில் முதலாளிகளின் இத்தகைய அணிதிரள்வு தமது நிஜ ஜனநாயக உரிமைகளையும் சமூக பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள பிராந்தியத்தின் தொழிலாளர் வர்க்கத்தின் ஒன்றுபட்ட போராட்டத்தின் அவசியத்தினை சுட்டிக்காட்டிக் கொண்டுள்ளது. இந்த ஒன்றுபட்ட போராட்டத்தினை இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தை இலக்காகக் கொண்ட ஈழம் சிறீலங்கா சோசலிச குடியரசு ஒன்றியத்துக்கு போராடுவதன் மூலமே முன்னெடுக்க முடியும். இலங்கையில் சோசலிச சமத்துவக் கட்சி, இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்துடன் இணைந்து அனைத்துலக சோசலிசத்துக்கான போராட்டத்தின் ஒரு பாகமாக இப்பிராந்தியத்தினுள் இந்த வேலைத் திட்டத்துக்கு போராடுகின்றது. அந்தப் போராட்டத்தில் இணைந்து கொள்ளும்படி நாம் அனைத்து வர்க்க நனவுள்ள பகுதியினரையும் வேண்டுகின்றோம்.

# தோட்டத் தொழிலாளர்...

7ம் பக்கத் தொடர்ச்சி

தோட்டத் தொழிலாளர்களைத் தாக்கும் முதலாளி வர்க்கத்தின் கைத்தேங்காய் ஆகியது.

சமசமாஜக் கட்சியின் இந்த மாபெரும் காட்டிக் கொடுப்பை பாவித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர் மீதான தனது பிடியை இறுக்கமாக்கியது. தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளின் பேரில் நின்றுவருவதாக முதலைக் கண்ணீர் வடித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைமையினை தொண்டமான் உட்பட்ட முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ குழுக்களே வகித்தன. இந்தச் சங்கம் வளர்ச்சி கண்ட அளவிற்கு இந்தத் தலைமையின் மடிகளும் சொத்துக்களும் பெருத்தன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களுக்குத் தொழிலாளர்கள் வெறுமனே முதலாளிகளுக்கு அடிபணிய வேண்டிய சுரண்டலுக்கு உள்ளாக வேண்டிய பண்டமாகியது. அது பொதுவில் தொழிற்சங்கங்களதும் அதிகாரத்துவங்களதும் நிலைப்பாடாகும். தொழிலாளர்களுக்கு எதிரான சிங்கள இனவாதிகளின் தூண்டுதல்கள் இ.தொ.கா.வுக்கு தொழிலாளர்களை ஏமாற்றுவதற்குக் கிடைத்த ஒரு அதிஸ்டமாகியது.

இந்தச் சகல அபிவிருத்திகளும் மொத்தத்தில் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தை பலவீனமாக்க வழிவகுத்ததற்குக் காரணம் அனைத்துலக ரீதியில் ஸ்டாலினிச அதிகாரத்துவம் உலகளாவிய ரீதியில் மார்க்சிச கலாச்சாரத்தை நாசமாக்க முன்னெடுத்த தாக்குதலின் ஒரு பாகமாகவாகும். இ.தொ.கா. உட்பட்ட தொழிற்சங்கங்கள் கடந்த காலத்தில் தோட்டத்துறையிலும் மற்றும் வேலைத்தலங்களிலும் செயற்பட்டது இத்தகைய ஒரு நிலைமையினுள்ளேயே.

தொழிலாளர் வர்க்கத்தினைக் காட்டிக் கொடுத்ததால் உருவான அனைத்து அழிவுகளையும் வெற்றி கொள்ளக் கூடிய ஒரு காலகட்டம் உருவாகி உள்ளது. முன்னர் குறிப்பிட்டது போல் உற்பத்தியின் பூகோளமயமாக்கமும் முதலாளித்துவத்தின் நெருக்கடியினால் தொழிற்சங்கங்களுக்கும் தேசியவாத சீர்திருத்தவாதக் கட்சிகளுக்கும் முதலாளிகளுடன் பேரம்பேசும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடிந்த காலப்பகுதி ஒரு முடிவுக்கு வந்துள்ளது. தொழிலாளர் வர்க்கம் அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தினை மறு நிர்மாணம் செய்வதற்கான நிலைமைகள் உருவாகியுள்ளது.

முன்னர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தைப் போலவே அதன் மரபுகளை முன்னெடுக்கும் சோசலிச சமத்துவக் கட்சியும் தொழிலாளர் வர்க்கத்தினுள் சோசலிச அனைத்துலகவாதத்திற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. அனைத்துலக சோசலிச போராட்டத்தின் ஒரு பாகமாக இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிசக் குடியரசின் முன்நோக்குடன் இந்தக் கட்சி சிறீலங்கா ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்துக்காகப் போராடுகின்றது.

முதலாளி வர்க்கமும் அதன் அரசாங்கத்துடன் நேரடியாகவும் சுற்றிவளைத்தும் கூட்டுச் சேரும் அனைத்து பழைய கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் காட்டுமிராண்டி நிலைமைகளை சிருஷ்டித்துள்ளன. அதை மேலும் மேலும் அபிவிருத்தி செய்வதில் இவர்கள் ஈடுபட்டிருக்கையில் சோசலிச சமத்துவக் கட்சி இந்தத் துரோகிகளுக்கு எதிராக தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் சோசலிச முன்நோக்கினை வழங்கும் ஒரே அமைப்பாகும்.1940களில் இருந்ததைக் காட்டிலும் தொழிலாளர்களை அனைத்துலக ரீதியில் ஐக்கியப்படுத்துகின்றதும் போராட்டத்தை அபிவிருத்தி செய்கின்றதுமான நிலைமைகள் வளர்ச்சி கண்டுள்ளன.நனவான தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் இளைஞர்களுக்கும் நாம் கூறுவது இதுதான்: தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் ஆழமான படிப்பினையை கற்பதன் மூலம் சோசலிசத்துக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ஒன்றிணைவோம்.

**படிப்பினை-1.**

உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தினுள் இலாபம் கறக்கும் முதலாளித்துவ அமைப்பின் கீழ் தொழிலாளர்களின் அனைத்து உரிமைகளும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

**படிப்பினை-2.**

யூ.என்.பி. அரசாங்கத்தினைப் போலவே பொதுஜன முன்னணி அரசாங்கமும் அனைத்துலக மூலதனத்தின் அபிலாசைகளை இட்டுநிரப்ப தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைத் தாக்கும் ஒரு அரசாங்கமாகும். சமசமாஜ, கம்யூனிஸ்ட், இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி அரசாங்கத்தின் நேரடி பங்காளிகளாக இந்தத் தாக்குதலில் பங்கு கொண்டுள்ளனர். நவசமசமாஜக் கட்சி அரசாங்கத்துக்கு முண்டு கொடுப்பதோடு, தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் பிடிக்குள் தொழிலாளர்களை சிறைப்பிடித்து வைக்க செயற்படும் அமைப்புக்களாகும். ஜே.வீ.பி. ஒரு தொழிலாளர் விரோத பாசிச அமைப்பாகும்.

**படிப்பினை-3.**

தொழிற்சங்கங்களும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் அரசாங்கத்துடனும் அரசுடனும் முதலாளித்துவ எஜமானர்களுடனும் சேர்ந்து செயற்படும் கோபரேட் வாத அமைப்புகளாக மாறிவிட்டன. தொழிலாளர்களின் உரிமைகளைப் பெறுவதற்கு அல்லாது அவற்றை முதலாளித்துவ எஜமானர்களுக்கு பறித்து கொடுக்கும் அமைப்புக்களாக மாறி உள்ளன. உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தினுள் தேசியவாத தொழிற்சங்கங்களின் பேரம்பேசல்கள் வீழ்ச்சி கண்டுள்ளன. தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு எதிரான கைவிலங்குகளாக மாறியுள்ளன.

**படிப்பினை-4.**

பிரபல்யமான போராளி தன்னியல்பான கிளர்ச்சி எழுச்சிகள் மூலமோ அல்லது தொழிலாளர் முதலாளித்துவ அமைப்புக்கு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலமோ அடிப்படை உரிமைகளை வெற்றி கொள்ளவோ அல்லது காக்கவோ முடியாது. போராட்டம் வரையறுக்கப்பட்ட நிலைமைக்குள் இழுத்து வைக்கப்படுமானால் பின்னடைவுகளுக்கும் தோல்விகளுக்கும் வழிவகுக்கும்.

**படிப்பினை-5.**

தொழிலாளர்களுக்கு புதிய முன்நோக்கும் தலைமையும் அவசியம். தொழிலாளர்களின் உரிமையை இலாபத்துக்கு அல்லாது பொதுமக்களின் அவசியங்களுக்காக உற்பத்தியை மறுசீரமைப்பு செய்யும் அமைப்பின் கீழேயே காக்க முடியும்.

அனைத்துலக சோசலிச அமைப்பை ஒழுங்கு செய்வதே அதற்கான வழி. அந்த முன்நோக்கின் கீழ் சோசலிச வேலைத்திட்டத்திற்காக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டம் தொடுக்கப்பட வேண்டும். அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிடுவதற்கு தொழிலாளர்கள் மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் பேரில் அவர்களை அணிதிரட்ட செயற்படும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வது அவசியம்.

**படிப்பினை-6.**

வேலைத்தலங்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் கட்டுப்பட்டு நின்றுவிடாமல் போராட்டத்தைத் தொடுக்க சகல வேலைத்தலங்களை அண்டிய நடவடிக்கை குழுக்களை அமைக்க வேண்டும். ஒடுக்கப்படும் மக்களதும் இளைஞர்களதும் பிரதிநிதிகளை அவற்றில் உள்ளடக்க வேண்டும். இது போராட்டங்களை அபிவிருத்தி செய்ய அவசியம்

**படிப்பினை-7.**

தொழிலாளர்கள் அனைத்துலக மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிராக தமது உரிமைகளை காக்கும் போராட்டத்தில் ஈடுபட அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றிணைய வேண்டும்.தொழிலாளர்கள் சகல முதலாளித்துவக் கட்சிகளில் இருந்தும் ஏஜன்சிகளில் இருந்தும் அரசியல் ரீதியில் சுயாதீனமாக அணிதிரள வேண்டும். தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளுக்காக அந்த விதத்திலேயே போராட முடியும்.

**படிப்பினை-8.**

இந்த முன்நோக்கு, வேலைத்திட்டத்தினை பெற்றுக் கொள்ள தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களுக்கு உள்ள ஒரே அமைப்பு சோசலிச சமத்துவக் கட்சியே. அதை அனைத்து இடங்களிலும் கட்டி எழுப்புவோம்.

# செய்தி தணிக்கை: இராணுவக் கடிவாளம்

1ம் பக்கத் தொடர்ச்சி

நாடுகளின் முதலாளித்துவ நிதி உதவியாளர்கள் அரசாங்கத்தின் பொருளாதார திட்டத்தை பாராட்டியதோடு இனக்குழு யுத்தத்தை முடிவுக்கு கொணர்ந்து, உறுதியான ஆட்சியை உருவாக்க வேண்டும் என பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு மீண்டும் ஒரு தடவை கூறினர். யாழ்ப்பாண மேயர் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட போது அமெரிக்க இராஜாங்க திணைக்களம் யுத்தத்தை நிறுத்தி சமரசத்துக்கு வரும்படி. விடுதலைப் புலிகளை நெருக்குவதற்கு அதனை ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொண்டது.

வடக்கு-கிழக்கு உட்பட்ட தீவின் முழுப்பிராந்தியத்தையும் இராணுவம் சுரண்டும் அவசியம் மட்டும் அல்லாது அனைத்துலக மூலதனத்துக்கு சந்தைகளைத் திறக்கும்-தென் ஆசியாவில் சிறப்பாக இந்தியத் துணைக்கண்ட சந்தைக்குள் எதையும் ஒரு மையமாக இலங்கையின் முக்கியத்துவத்தை ஏகாதிபத்தியவாதிகள் நோக்குகின்றார்கள். பொதுஜன முன்னணி அரசாங்கள் இலங்கையை பிராந்தியத்தின் அனைத்துலக மூலதனத்தை பரிமாற்றும் - தென்ஆசியாவுக்குள் நுழையும் "கதவு" ஆக - கிழக்கு ஆசியாவின் ஹொங்கொங்கைப் போன்று அபிவிருத்தி செய்வதாகத் திரும்பத் திரும்பக் கூறுவது சும்மா அல்ல. இலங்கையின் அரசியல், பொருளாதாரத்தில் கைபோட்டுக் கொண்டுள்ள அமெரிக்க ஆளும் வர்க்கம் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' நிலையத்தை இலங்கையில் நிறுவியதன் பின்னர் திருகோணமலையில் எண்ணெய்த் தாங்கிகளை வாடகைக்கு அமர்த்த முயற்சித்தமை தற்செயலானது அல்ல. ஏகாதிபத்தியவாதிகள் கடந்த காலத்தில் பீ.எல்.ஓ.வையும் இஸ்ரேலையும சம்பத்தில் பிரித்தானியா அரசாங்கத்தையும் ஐ.ஆர்.ஏ யையும் மாட்டி வைத்து உருவாக்கிய பாணியிலான சமரசத்தை இலங்கையினுள்ளும் திணிக்க முயற்சிக்கின்றார்கள்.இதன் பின்னணியில் ஒருவர் மற்றவரது சந்தைகளுக்குள் ஊடுருவுவது எப்படி எனக் கணக்குப் பார்க்கும் ஏகாதிபத்திய இலாப வெறி இருந்து கொண்டுள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் இந்த நிலைமையினுள் பிரமாண்டமான இரத்தப் பலிகள் மூலம் மாங்குளத்தையும் "வடக்கு விநியோக மார்க்கத்தையும்" கைப்பற்றிக் கொண்டு விடுதலைப் புலிகளின் முதுகெலும்பை உடைப்பதன் மூலம் பேச்சுவார்த்தை மேசைக்கு தள்ளும் திட்டத்துடன் செயற்படுகின்றது. விடுதலைப் புலிகளைத் துடைத்துக் கட்டி ஏனைய தமிழ் முதலாளித்துவக் குழுக்களுடன் சமரசம் செய்து கொள்வது பற்றியும் பொதுஜன முன்னணி அரசாங்கம் இடைக்கிடையே பேசிக் கொள்கின்றது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என யூ.என்.பி.தலைவர்கள் இந்நாட்களில் பிரச்சாரம் செய்வது ஏகாதிபத்திய எஜமானர்களின் அவசியத்தின் பேரிலாகும்.

அனைத்துலக மூலதனத்துக்கு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை துவம்சம் செய்வதும் யுத்த சுமை காரணமாக பொதுமக்களிடையே தலைதூக்கியுள்ள பதட்டம் ஆளும் வர்க்கத்தில் கலக்கத்தை உக்கிரம் அடையச் செய்துள்ளது. அரசாங்கத்துள் நுழைந்து கொண்டுள்ள சமசமாஜ, கம்யூனிஸ்ட், இ.தொ.கா.வும் வெளியில் இருந்து கொண்டுள்ள நவசமசமாஜக் கட்சியும் தொழிற்சங்கங்களும் பிற்போக்கின் சின்னமாகி உள்ளன. எப்பாவலை பொஸ்பேட் படிவத்தை அனைத்துலக கம்பனிகளுக்கு விற்றுத்தள்ளுவதற்கு எதிராகவும் விளைச்சலை உரிய விலைக்கு விற்கமுடியாமைக்கும் கடன்சுமைக்கு எதிராகவும் தோன்றியுள்ள எதிர்ப்பு விவசாயிகளின் பதட்ட நிலையை மேலும் எடுத்துக்காட்டுகின்றது. கல்வி வெட்டுக்கு எதிராக மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இடையே அபிவிருத்தி கண்டு வரும் எதிர்ப்பை நசுக்கிவிடும் பொருட்டு பகிஷ வதையை தடைசெய்யும் சாட்டில் பல்கலைக்கழக மாணவர்களை தண்டிக்கும் ஒரு மசோதாவை அரசாங்கம் சம்பத்தில் இயற்றிக் கொண்டுள்ளது.

யுத்தச் செலவு சுமை மட்டும் அல்லாது தொழில் இல்லாத இளைஞர்களை யுத்தத்தில் சேர்த்து கொண்டு உயிர்ப்பலியெடுப்பதும் பொதுமக்களிடையே கசப்பை வளரச் செய்துள்ளது. நூற்றுக்கு 20 வீதமானோர் இராணுவத்தில் இருந்து ஓட்டம் பிடித்தனர். திரும்பி வந்தால் மன்னிப்பு வழங்குவதாகவும் இல்லையேல் கைது செய்து கடும் தண்டனை வழங்குவதாகவும் மேற்கொண்ட பிரச்சாரத்தின் பின்னர் 12000 பேர் மீண்டும் திரும்பியுள்ளதாயும் அரசாங்கம் அறிவித்தது. மே 29ம் திகதி மாங்குளத்தை கைப்பற்ற இராணுவம் அனுப்பப்பட்டது இந்த அழைப்புடனேயேயாகும்.

இந்த பொதுஜனப் பதட்டத்துக்கு மத்தியில் அனைத்துலக மூலதனத்துக்கு கதவுகளைத் திறக்கும் பொருட்டு இன்னும் ஒரு தொகை தாக்குதல்களை நடாத்த இலங்கைக்கு உதவி வழங்கும் குழுவின் கூட்டத்தில் சிபார்சு செய்யப்பட்டது. இந்தச் சிபார்சுகளுள் காப்புறுதி. அரச வங்கிகள் உட்பட்ட நிதித் துறை. மின்சார சபை. பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தை தனியார் மயமாக்குவது நெல் சந்தைப்படுத்தும் சபையையும் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தையும் மூடிவிடுவது அரசாங்க துறை ஊழியர்களின் எண்ணிக்கையை 167000 ஆல் வெட்டுவது என்பனவும் அடங்கும். இந்தத் தாக்குதல்கள் மக்கள் போராட்டங்களை வெடித்துச் சிதறச் செய்வதாகும்.

பொதுஜன முன்னணி அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் ஏகாதிபத்தியவாதிகளின் தேவையின் அடிப்படையில் எதிர்ப்புரட்சி திட்டங்களை முன்வைக்கும் போது இடம்பெறக்கூடிய இந்த அபிவிருத்திகளைக் கணக்கிட்டுக் கொண்டுள்ளது. அரசியல் நிலைமையில் வெடித்துச் சிதறும் அபிவிருத்திகளை சம்பத்தில் இந்தோனேஷியாவில் காணமுடிந்தது. பொருளாதார வீழ்ச்சியும் சர்வதேச நாணய நிதியத்தின் சிபார்சுகளை நடைமுறைக்கிடுவதால் அந்நாட்டில் குமுறிய மக்கள் போராட்டங்களை 34 வருடகால இராணுவ சர்வாதிகாரி சுகார்ட்டோவை ஆட்சியில் இருந்து விலக்கியதன் மூலம் தற்காலிகமாகப் பிடித்து வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்த அரசியல் அபிவிருத்திகள், மறுபுறத்தில் அயல்நாடுகளான இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் முதலாளிகள் தென்ஆசியாவை யுத்தத்தின் விளிம்புக்கு கொணர்ந்துள்ள ஒரு நிலையில் இடம்பெறுகின்றது. பிராந்தியங்களுக்கு உரிமை கொண்டாடி மோதிக் கொள்ளும் இந்த முதலாளித்துவ அரசாங்கங்கள் பொதுமக்களின் கண்களை சமூக, பொருளாதார பிரச்சினையில் இருந்து திருப்பி, இனவாதத்தின் மூலம் அவர்களை நசுக்கி ஒடுக்குவதற்கு அனைத்துலக சுரண்டலை நடாத்தும் பிற்போக்கு தேவைகளினால் வழிநடாத்தப்படுகின்றது. இலங்கை முதலாளிகள் தமது பிற்போக்கு வேலைத்திட்டத்துக்கு இந்தியத் துணைக்கண்ட முதலாளித்துவ ஆட்சியாளர்களின் பிற்போக்கு இயக்கத்திடமிருந்து உதவியையும் உந்துதலையும் அத்தோடு மூடிமறைப்பையும் பெற்றுக் கொள்கின்றனர்.

இராணுவத் தணிக்கையை விதிதது மாங்குளம் யுத்தத்தை நடாத்துவது இராணுவம் மேலும் மேலும் அரசியல் தலையீடுகளில் இறங்குவதுடன் இடம்பெறுகின்றது. சம்பத்தில் இராணுவத் தளபதி யுத்தத்தில் வெற்றி கண்டதன் பின்னர் அரசியல் தீர்வு அவசியம் இல்லை என ஒரு பத்திரிகைக்கு கூறியதையிட்டு முதலாளி வர்க்கத்தின் ஒரு தரப்பினர் குழப்பம் அடைந்து போயினர். அது இராணுவம் அரசியலில் கைபோடுவதால் ஏற்பட்டது அல்ல.அது பிரசித்தமாகிவிட்டதையிட்டே அவர்கள் குழம்பிப் போயினர்.

இதற்கிடையே விடுதலைப் புலிகளதும் ஏனைய முதலாளித்துவ தமிழ் கட்சிகளினதும் வேலைத்திட்டம் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் தலையீட்டுடன் தீர்வைத் திணிப்பதாக உள்ளது. அவர்கள் இதனை மூன்றாம் தரப்பினரின் தலையீட்டுடன் செய்யும் தீர்வு எனக் கூறிக் கொள்கின்றனர். ஒன்றில் தனியான அரசுக்கு அல்லது சுரண்டலுக்கு மேலதிகமான வாய்ப்புக்கள் நிறைந்த தீர்வைக் கொணர விடுதலைப் புலிகள் முயற்சிக்கின்றனர். தமிழ் தேசிய இனத்தின் விடுதலையைப் பற்றி இந்த அமைப்புக்கள் இடைக்கிடையே நடாத்தும் பேச்சுக்கள் சர்வதேச மூலதனத்தின் அதிகாரத்தை நிறுவும் பிற்போக்கு திட்டத்தின் ஒரு பாகமாகும். இந்த விதத்தில் இந்த குட்டி முதலாளித்துவ அமைப்புக்களும் தேசிய முதலாளித்துவமும் தமது அரசியல் வங்குரோத்தினையும் பிற்போக்கினையும் காட்டிக் கொண்டுள்ளன. உற்பத்தி பூகோளமயமாகியுள்ள ஒரு நிலைமையின் கீழ் தேசியவாத வேலைத்திட்டங்கள் அடியோடு தகர்ந்து கொட்டியுள்ளதோடு தேசியவாத அமைப்புக்கள் ஏகாதிபத்தியவாதங்களின் ஏஜன்சிகளாகியுள்ளன.

பொதுஜன முன்னணி அரசாங்கம் உக்கிரமாக்கியுள்ள யுத்தம் வடக்கிலும் தெற்கிலும் இராணுவ—பொலிஸ் சர்வாதிகாரத்துக்கான பிற்போக்கு சக்திகளை அணிதிரட்டும் ஒரு திட்டம் என்பதை தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். இராணுவ தணிக்கை சகலரதும் கண்களைத் திறப்பதாக உள்ளது. இந்த தணிக்கை வெகு விரைவில் மார்ஷல் லோ ஆட்சியா என முதலாளித்துவ சண்டே டைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் கேள்வி எழுப்பியுள்ளார். உண்மையில் அப்படித்தான் வந்தாலும் இந்த முதலாளித்துவப் பத்திரிகைகளும் சரி அவற்றின் ஆசிரியர்களும் சரி பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் அல்லது யூ.என்.பி.யினால் அல்லது இருசாராரினாலும் கூட்டாக செய்யப்படும் மார்ஷல் லோ ஆட்சியுடனோ இணைந்து கொள்வர்.

சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் இ.தொ.கா.வும் தொழிற்சங்கங்களும் இராணுவத் தணிக்கையின் பேரிலான உந்துதலையிட்டு மௌனம் சாதித்துக் கொண்டுள்ளனர். இந்நாட்களில் பாசிச ஜே.வீ.பி.யினருடன் கூட்டுக்குச் செல்லும் பிற்போக்கு வேலைகளில் ஈடுபட்டுள்ள நவ சமசமாஜக் கட்சி இராணுவ தணிக்கையையிட்டு மௌன ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டுள்ளது.

www.padippakam.com



# தென் ஆசியாவில் யுத்த மேகங்கள் கவிகின்றன...

1ம் பக்கத் தொடர்ச்சி

இலக்கில் வெடித்துச் சிதறுவதாயும் ஸ்திரமற்றதாயும் மாறியுள்ளன. தொழில்நுட்பப் புரட்சியும் நிதியினதும் உற்பத்தியினதும் பூகோளமயமான ஒருங்கிணைப்பும் அரசுகளுக்கு இடையேயான பழைய உறவுகளை தகர்த்துக் கொண்டுள்ளதோடு போட்டி முதலாளித்துவ குழுக்களுக்கும் அவற்றின் ஒருங்கிணைக்கப்பட்ட அரச அடிப்படைக்கும் இடையே போராட்டத்தை உக்கிரமாக்கியுள்ளது. இவை இலாபத்துக்கும் புவிசார் அரசியல் செல்வாக்குக்காகவும் இடம் பெறுகின்றது.

வட அமெரிக்காவினதும் ஐரோப்பாவினதும் ஆசியாவினதும் பெரும் முதலாளித்துவ சக்திகளுக்கு இடையேயான பதட்டமும் மோதுதல்களும் மிகவும் உக்கிரமானதாயும் பகிரங்கமானதாயும் வளர்ச்சி கண்டுவிட்டது. பெரும் வல்லரசுகள் தாம் எந்த ஒரு மாபெரும் அனைத்துலகப் பிரச்சினை மீதும் ஒரு பொது மூலோபாயத்தை கொண்டுள்ளதாக கோரவும் அக்கறை காட்டுவதாக நடிக்கவும் தள்ளப்பட்டுள்ளன.

சமீப நாட்களாக உலக முதலாளித்துவ உறவுகளின் ஆட்டங்கண்ட நிலையானது வெடித்துச் சிதறும் வடிவத்தை கண்டது. இந்தக் கடந்த மாதத்தில் இந்தோனேஷிய சர்வாதிகாரி சுகார்ட்டோ ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டான். ரூஷ்ய பங்கு முதல் சந்தை சரிந்ததோடு ஜப்பானின் நிதி அமைப்பின் நின்றுபிடிக்கும் தன்மையையிட்டு பதட்டம் வளர்ச்சி கண்டது.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் பாகிஸ்தானுக்கு எதிரான தடைகளை திணிக்கும் அறிவிப்பை விடுத்ததன் மூலம் இருபதாம் நூற்றாண்டின் முதல் அரை இறுதி காலகட்டத்தில் மேலாதிக்கம் செய்த அரசியல் குழப்ப நிலையையும் இராணுவ தீச்சுவாலையையும் எடுத்துக் காட்டியுள்ளது.

"நாம் இருபத்தோராம் நூற்றாண்டை இருபதாம் நூற்றாண்டின் படுமோசமான தவறினை இந்தியத் துணைக்கண்டம் திரும்ப இழைப்பதுடன் ஆரம்பிக்க வேண்டி இருக்கும் என நம்பமுடியவில்லை" என கிளின்டன் கூறினார்.

கிளின்டனின் கவலை ஆழமானது. ஆனால் அவர் பிரமாண்டமான நப்பாசைகளின் கீழ் தொழிற்படுகின்றார். ஆனால் இந்த நூற்றாண்டின் பேரழிவுகளை தனிப்பட்ட தலைவர்களின் "தலவறுகள்" மூலம் விளக்கலாம் என அவர் நினைப்பின் அவர் பிரமாண்டமான நப்பாசைகளின் கீழ் தொழிற்படுகின்றார். அணுவாயுத யுத்தத்தின் புதிய ஆபத்துக்கள் இருபதாம் நூற்றாண்டின் பிரமாண்டமான இரத்தக் களரிகள் அகநிலை தவறுகளில் வேரூன்றி இருக்கவில்லை என்பதையும் இன்னமும் ஒரு முற்போக்குத் தீர்வினைக் காண வேண்டியதாக உள்ள சமூக முரண்பாடுகளில் வேரூன்றிக் கொண்டுள்ளதையும் காட்டிக் கொண்டுள்ளது.

உண்மையில் வாஷிங்டனும் ஏனைய ஏகாதிபத்திய தலைநகரங்களதும் அகிம்சை பிரச்சாரங்களில் ஒரு பிரமாண்டமான பாசாங்கு மூலகமும் இருந்து கொண்டுள்ளது. கிளின்டன் இந்தியாவையும் பாகிஸ்தானையும் யுத்த ஆபத்தின் மீது திட்டலாம் . ஆனால் அது அவரை திரும்பத் திரும்ப ஈராக்கை பேரழிவுக்கு உள்ளாக்கவும் வாஷிங்டனின் பொருளாதார, புவிசார் அரசியல் நோக்கங்களுக்கு குறுக்கே நின்று கொண்டுள்ள ஏனைய நாடுகளுக்கு எதிராக அமெரிக்காவின் பாரம்பரிய, அணுவாயுதங்களையும் கையாள்வதையும் தடுத்தவிடவில்லை.

கடந்த 15 ஆண்டுகளாக அமெரிக்கா தனது உலக பொருளாதார மேலாதிக்கத்திலான இழப்பை ஈடு செய்ய அதனது இராணுவ பலத்தில் அதிகரித்த விதத்தில் நம்பிக்கை கொண்டு இருந்தது. இந்திய, பாகிஸ்தானிய அரசாங்கங்கள் உடனடியாகச் சுட்டிக்காட்டியது போல் பாக்கச்சார்பான அணுகுண்டு பரிசோதனைக் கண்டனங்கள் முற்றிலும் வாஷிங்டனின் தன்னலமானவை. அவை ஆயுத பரிகரணத்துக்கான ஆதரவன்றி, இராணுவபலத்தில் ஒரு மேலாதிக்கத்தை தொடர்ந்து வைத்திருக்கச் செய்யும் முயற்சியால் உந்தப்பட்டவை.

இந்திய பாகிஸ்தானிய மோதுதல்கள் தென் ஆசியவிலான ஏகாதிபத்திய ஒடுக்குமுறையில் வேரூன்றிக் கொண்டுள்ளது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் தமது ஆட்சியை பாதுகாக்க மத, தேசிய, இனக்குழு பிளவுகளை வாந்தி எடுத்து வந்தனர். தேசிய முதலாளி வர்க்கத்திடம் அரசியல் கட்டுப்பாட்டை கையளிக்கத் தள்ளப்பட்ட போது அவர்கள் துணைக்கண்டத்தை கூறுபோட்டனர். ஒரு மதக் கோட்டின் ஊடாக முக்கியமாக ஒரு கூறு ஹிந்து இந்தியாவாகவும் முஸ்லீம் பாகிஸ்தானாகவும் பிளவுபடுத்தினர்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய பொலிஸ்காரன் என்ற வகையில் அமெரிக்கா 1947 48ல் தென்ஆசியாவில் ஸ்தாபிதம் செய்யப்பட்ட பிற்போக்கு அரசமுறையை ஆதரித்தது. அத்தோடு பாகிஸ்தானிய இந்திய மோதுதல்களுக்கு தீமூட்ட செயற்பட்டது. 1950பதுகளின் ஆரம்பத்தில் இருந்து பாகிஸ்தான் அமெரிக்காவுடன் மிகவும் நெருங்கிய உறவு கொண்டிருந்தது. இஸ்லாமாபாத்தில் ஒன்றுக்கு பின் மற்றொன்றாக ஆட்சிக்கு வந்த இராணுவ ஆட்சியை அது ஆதரித்தது. பாகிஸ்தானை தளமாகக் கொண்ட இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் ஊடாக அமெரிக்கா பணத்தையும் ஆயுதங்களையும் அள்ளி வழங்கியதும் 1980பதுகளில் பாகிஸ்தான் சீ.ஐ.ஏ.யின் ஆப்கானிஸ்தானிய சாகஜங்களில் சிக்கிக் கொண்டது. இந்தக் குழுக்கள் இன்று பாகிஸ்தானியர்களான அவர்களின் அயலவருக்கு எதிராக தூண்டிவரும் பிளவுகளிடையே மிகவும் உஜராக நின்று கொண்டுள்ளன. இந்தியா, சோவியத் யூனியனின் கூட்டாக இருந்ததால் அதனது வெளிநாட்டு கொள்கையை வாஷிங்டனின் சர்வாதிகாரத்துக்கு ஏற்ப நெய்து கொள்ளவில்லை. இதனால் முன்னேற்றமான தொழில்நுட்ப வசதிகளுக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன.

சமீப காலமாக அமெரிக்காவும் ஏனைய ஏகாதிபத்திய சக்திகளும் வெளிநாட்டு மூலதனத்தின் மீதான சகல தடைகளையும் ஒழித்துக் கட்டும்படியும் விலைக்கட்டுப்பாடு உதவிமானியங்களை அகற்றும்படியும் தனியார்மயத்தை ஏற்படுத்தி சமூக நலன்புரி கொள்கையை தவிடுபொடியாக்கும்படியும் பிரமாண்டமான நெருக்குவாரங்களை கொணர்ந்தன. அனைத்துலக வங்கிகளதும் ஏகாதிபத்திய அரசாங்கங்களதும் கட்டளைகள் வறுமை, வேலையின்மை, பஞ்ச நிலைமைகளை உக்கிரமாக்கியது. இவை இரண்டு நாடுகளையும் ஆட்டிப்படைத்து வந்தன. இந்த சமூக குழப்பங்களயும் பதட்ட நிலையையும் விரக்தியையும் எல்லைக்கு இருபுறத்தேயும் உள்ள தேசிய, மத சோவினிஸ்டுகள் சுரண்டிக் கொள்கின்றார்கள்.

## முதலாளித்துவ ஆட்சியின் அரசியல் வங்குரோத்து

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் அணுகுண்டு பரிசோதனையை அறிவிக்கும் மே 28ம் திகதிய தொலைக்காட்சி உரையில் தனது மட்டரகமான மொழியை கையாண்டார்: "இன்று நாம் இந்தியாவுடன் வெற்றிப் புள்ளிகளை சமப்படுத்திக் கொண்டோம்." எனப் பிரகடனம் செய்தார். இன்று எங்கும் அணுவாயுத தீயின் அணுவாயுதப் பிளம்புகள். இந்தத் தீப்பிளம்புக்குள் நாம் பாய்ந்து கொண்டுள்ளதையிட்டு நான் ஆண்டவனுக்கு நன்றி கூறுகின்றேன்." என்றார். இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் காரி ஏவுகணைகளை அணுவாயுதத் தளபாடங்களுடன் ஆயுதபாணிகளாக்கும் என அறிவித்தது.

பிரச்சினைக்கு இடமற்ற வகையில் அமெரிக்காவும் ஜப்பானும் இன்னும் பல நாடுகளும் விதிக்கப்போகும் தடைகள் பாகிஸ்தானிய பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் . வங்கிகள் இழைத்துக் கழைத்து போகும் என அஞ்சிய ஷெரிப் அரசாங்கம் மே 29ம் திகதி வெள்ளிக்கிழமையே வங்கிகளை முடிவிடும்படி உத்தரவிட்டது. பின்னர் வெளிநாட்டு பணக் கணக்குகளில் இருந்து எடுக்கும் நாணயங்களின் மீது ஒரு திட்டவட்டமற்ற உறைவினை அறிவித்தது. பாகிஸ்தான் வெளிநாட்டு செலாவணி கையிருப்பில் 1 பில்லியன் அமெரிக்க டாலர்களை மட்டுமே கொண்டிருந்தது. இது 6 வார கால இறக்குமதிப் பெறுமதிகளுக்கு மட்டுமே சமமானது. அடுத்த மாதம் பாகிஸ்தான் வட்டிக் கொடுப்பனவில் 800 மில்லியன் டாலர்களை செலுத்த முடியாது போய்விடலாம் என பீதி நிலவுகின்றது.

ஒரு பொருளாதார நிலைப்பாட்டில் இருந்து தடைகளும் இந்தியாவுடனான ஆயுதப் போட்டிகளும் பாகிஸ்தானிய முதலாளி வர்க்கத்துக்கு மட்டுமே தீங்கு விளைவிப்பதாக விளங்கும் ஆனால் அரசியல் நிபுணர்கள் ஷெரிப் அரசாங்கம் அணுகுண்டு பரிசோதனையைத் தொடர்வதைத் தவிர வேறு வழி கிடையாது என்கின்றனர். ஷெரிப்பின் அரசியல் எதிரிகள்

பெனாஷீர் பூட்டோவின் பாகிஸ்தானிய மக்கள் கட்சி உட்பட மற்றும் பல்வேறு இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்களும் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் அரசாங்கம் ஒரு அணுவாயுத பரிசோதனையை நடாத்தாது போனால் ஒரு பரந்த கிளர்ச்சியை நடாத்தப் போவதாக பயமுறுத்தின.

இன்னும் முக்கியம் என்னவென்றால் புதுடில்லியில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து இராணுவம் சமீப காலமாக பாகிஸ்தானிய அரசாங்கம் அமுல் செய்துவந்த இராணுவச் செலவு வெட்டு திட்டத்தை தலைகீழாக்க தருணமாக்கிக் கொண்டது. கடந்த 5 தசாப்த காலங்களாக பாகிஸ்தானிய ஆளும் வர்க்கம் பல்வேறுபட்ட பிராந்திய பிரமுகர்களுக்கு இடையேயான கசப்பான மோதுதல்களையும் வெகுஜன பதட்ட நிலைமையையும் அடக்கிவைக்கும் நம்பிக்கையில் இராணுவம் அரசியல் அதிகாரத்தை சுருட்டிக் கொள்ளத் தொடர்ந்து இடமளித்தது.

இஸ்லாமாபாத் ஆட்சியாளர்களின் முக்கிய சித்தாந்த அடிப்படையாக தேசிய, மத சோவினிசம் விளங்கி வந்தது. பாகிஸ்தான் ஒரு "இந்து" இந்தியாவினால் விழுங்கப்பட்டுவிடும் ஆபத்தில் இருந்து கொண்டுள்ளது என்ற கோரிக்கையானது சமூக பதட்ட நிலைமையை "வெளிநாட்டு எதிரிக்கு" எதிராகத் திருப்பவும் பாகிஸ்தானிய தொழிலாளர்கள் தமது நிலச்சுவாந்தர்களுடனும் முதலாளித்துவ ஒடுக்குமுறையாளர்களுடனும் ஒன்றுபட்டாக வேண்டும் என்ற நம்பிக்கையை ஊக்குவிக்கவும் பயன்படுத்தப்பட்டது.

இந்தச் சித்தாந்தம் பல்வேறுபட்ட பிராந்தியக் குழுக்களுக்கு இடையேயான தகராறுகளை தவிர்க்கவும் பாகிஸ்தான் அரசை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லக் காரணமாகும் பற்றாக்குறை வளங்கள் மீதான மோதுதல்களை தடைசெய்யவும் கையாளப்பட்டது. (பாகிஸ்தானின் இரண்டாவது பெரிய மாநிலம் என்ற முறையில் சிந்து மாகாணமும் முக்கிய நகரமும் துறைமுகமும் என்ற வகையில் கராச்சியும் ஒரு தசாப்த காலமாக சிந்துக்களுக்கும் உருது மொழி பேசுபவர்களுக்கும் இடையே ஒரு தேசிய இனக்குழு மோதுதலில மூழ்கிப் போய்க் கிடந்தது. ) ஷெரீபின் சொந்த வார்த்தைகளில் சொன்னால் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் இந்தியாவுக்கு "கருணையுடன்" அக்கறை காட்டாது போனால் பாகிஸ்தானிய அரசின் அரசியல், சித்தாந்த அடிப்படை பிரச்சினைக்கு உள்ளாகிவிடும்.

## அரசியலமைப்பு இடைநிறுத்தம்

இந்தியாவின் பாரதீய ஜனதா அரசாங்கமும் ஷெரீபின் ஆட்சியும் ஜனநாயக உரிமைகளை தாக்க யுத்த மிரட்டலை பயன்படுத்தும். அணுக்குண்டு பரிசோதனை அறிவிக்கப்பட்ட ஒரு சில மணித்தியாலங்களுள் பாகிஸ்தான் ஜனாதிபதி றபீக் தாரகர் அரசியலமைப்புச் சட்டத்தையும் சிவில் உரிமைகளையும் இடைநிறுத்தும் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தார். இந்தியாவில் பாரதீய ஜனதா அரசாங்கம் அதனது கோணத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான அதனது ஆக்கிரமிப்பு முஸ்தீபுகளை எதிர்ப்போர் சகலரையும் "துரோகிகள் "எனப் பெயர் சூட்டியுள்ளது.

இந்த இருநாட்டினதும் ஆளும் வர்க்கங்களும் தடைகளால் சிருஷ்டிக்கப்பட்ட பொருளாதார பிரச்சினைகளின் சுமைகளை மக்களின் மீது சுமத்த முயற்சிக்கின்றன. இந்தப் பொருளாதாரத் தடைகள் ஒரு பாரிய தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்பதை ஷெரிப் ஒப்புக்கொண்டதோடு "ஒரு பாகிஸ்தானி ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பாடு எடுத்தால் எனது பிள்ளைகள் ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பாடு மட்டுமே எடுப்பர் "என வாக்குறுதி அளித்தார். எவ்வாறெனினும் இதைத் தொடர்ந்து ஷெரிபின் மிகவும் சக்தி வாய்ந்த வர்த்தக ஆதரவாளர்கள் ஷெரிப் ஒரு செல்வந்த கைத்தொழில் அதிபர் அணுகுண்டு பரிசோதனை பற்றி முன்னோடியே எச்சரிக்கை செய்யப்பட்டதால் அவர்கள் தமது வெளிநாட்டு நாணயக் கையிருப்பை பாகிஸ்தானில் இருந்து வெளியேற்றிக் கொள்ள முடிந்தது.

இந்தியாவும் பாகிஸ்தானும் ஸ்தாபிக்கப்பட்டதன் 50 ஆண்டுகளின் பின்னர் இந்திய, பாகிஸ்தானிய தேசிய முதலாளி வர்க்க ஆட்சியானது தென் ஆசிய வெகுஜனங்களை ஒரு அணுவாயுத பேரழிவின் விழிம்பிற்கு கொணர்ந்துள்ளது. இவ்விரு நாடுகளிலும் இலட்சோப இலட்சம் மக்கள் அடிப்படைத் தேவையும் சுகாதார வசதி, சுத்தமான குடிநீர், வீடு, உணவு இல்லாது உள்ளனர். இந்தக் கடந்த வாரத்தில் புது டில்லி அரசியல்வாதிகள் இந்தியாவின் அணுசக்தியைப் பற்றி ஜம்பம் அடித்துக் கொள்கையில் பல தலைநகரங்களில் 11 மில்லியன் மக்கள் தொடர்ந்து மின்சாரமோ அல்லது தண்ணீரோ இல்லாமல் 45 டிகிரி சென்றிகிரேட் அதிகரித்த வெப்பநிலைக்குள் தள்ளப்பட்டனர். அரசாங்க அதிகாரிகளின் அலட்சியப் போக்கினால் ஆத்திரம் கொண்ட புதுடில்லியின் சில வறிய மக்கள் மாநகரசபை, பா.ஜ.க. அலுவலகங்களை தாக்கினர்.

கொதிக்கும் எந்த ஒரு சமூகப் பிரச்சினையும் பிரபுத்துவம், சாதி ஒடுக்குமுறை, இனப்பாகுபாடுகளை ஒழித்தல் அல்லது அடிப்படை பொதுச் சேவை வசதிகள் தேசிய முதலாளி வர்க்கத்தின் கீழ்த் தீர்க்கப்படவில்லை. மாறாக முதலாளித்துவத்திற்கு முன்னைய சுரண்டலின் மிச்சசொச்சங்கள் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுடன் பின்னிப் பிணைந்து கொண்டுள்ளன.

தென்ஆசியாவில் யுத்த பயமுறுத்தலானது சமூக சமத்துவமின்மையையும் அநீதியையும் வாய்பிளக்கப் பார்த்தபடி நின்ற நிலையில் தோன்றிய வெடித்துச் சிதறும் முரண்பாடுகளின் திரட்சியின் காட்டுமிராண்டி வெளிப்பாடாகும். ஒரு சுயாதீனமான அரசியல் சக்தியாக தலையிட்டு ஒடுக்கப்படும் மக்களுக்கு தலைமை வழங்குவதன் மூலம் இந்த முரண்பாடுகளுக்கு ஒரு முற்போக்கு தீர்வைக் காண்பது தொழிலாளர் வர்க்கத்தின் பணியாகும். அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்துடனான ஐக்கியத்தின் மூலம் தேசிய முதலாளி வர்க்கத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் இதைச் சாதிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



*அட்டன்*

# ஷனொன் தேயிலை பக்டரியில் குண்டுவெடிப்பு

ஜூன் 1ம் திகதி அட்டனுக்கு சமீபமாக உள்ள ஷனொன் தேயிலை பக்டரிக்கு குண்டுகளுடன் வந்த இருவர் நடாத்திய தாக்குதலினால் பக்டரியின் முன் பகுதிக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. பக்டரியின் உள்ளே சென்று குண்டு வெடிப்பை நடாத்துவது அவர்களின் திட்டமாக இருந்ததாகத் தெரிகின்றது. ஆனால் பக்டரியின் அதிகாரியின் அறிவித்தலைத் தொடர்ந்து ஓடி வந்த தொழிலாளர்கள் தாக்குதல் நடாத்த வந்தவர்களை தாக்கத் தொடங்கியதும் குண்டினை பக்டரியின் முன்னால் போட்டுவிட்டு அவர்கள் ஓடித் தப்பியுள்ளனர்.

கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் டெலிகொம் நிலையங்களையும் மின்சார நிலையங்களையும் தாக்கும் ஆத்திரமூட்டும் இயக்கம் இடம்பெற்றுவரும் ஒரு நிலைமையில் இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. இந்த குண்டு தாக்குதலை விடுதலைப் புலிகள் தான் நடாத்தினார்கள் என்ற ஆத்திரமூட்டும் பிரச்சாரத்தை நடாத்த அரசாங்கத்துக்கோ அல்லது பொலிசுக்கோ முடியாது போய்விட்டது. இது ஒரு விடயத்தை தெளிவுபடுத்துகின்றது. அது விடுதலைப் புலிகள் செய்தால் என்ன வேறு எவர்தான் செய்தால் என்ன அதன் நோக்கம் பயங்கரமும் ஆத்திரமூட்டலும் நிறைந்த ஒரு சூழ்நிலையை உருவாக்குவதே. அது இராணுவ பொலிஸ் அடக்குமுறை ஆட்சிக்கான நிலைமைகளை சிருஷ்டிப்பதேயாகும். இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கம் உக்கிரமாக்கிவரும் இனவாத யுத்தத்தின் மூலமும் இராணுவமய நடவடிக்கைகள் மூலமும் இந்த நிலைமையை அபிவிருத்தி செய்கின்றது. இந்த அபிவிருத்திகளையிட்டு தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் விழிப்பாயிருக்க வேண்டும்.

இந்த ஆபத்துக்களை தொடர்ந்தும் அவர்கள் நடாத்துவது தொழிற்சங்கங்களதும் சமசமாஜ, கம்யூனிஸ்ட், இ.தொகா. மலையக மக்கள் முன்னணி முதலான அமைப்புக்களதும் ஒத்துழைப்புடனேயாகும். ஷனொன் பக்டரிக்கு குண்டுத்தாக்குதல் இடம் பெற்றதுதான் தாமதம் இவர்கள் பொலிசாரையும் தொழிற்சங்க அதிகாரிகளையும் தொழிலாளர்களையும் கொண்ட பாதுகாப்பு கமிட்டிகள் அமைக்க வேண்டுமென யோசனை தெரிவித்ததோடு அதை நடைமுறைக்கிடுவதிலும் ஈடுபட்டுள்ளனர். இது முதலாளித்துவ அரசுடன் தொழிலாளர்களைக் கட்டிப் போடுவதாகும்.

தொழிலாளர்களிடையே ஒரு பகுதியினரை இதற்கு பலிகடாக்கள் ஆக்கிக்கொண்டு இத்தகைய அமைப்புக்களை ஸ்தாபிக்க இதற்கு முன்னரும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அவற்றின் பணி, தொழிலாளர்களைப் பற்றி உளவு பார்ப்பதாகவும் தொழிலாளர்களுக்கு எதிரான படை அமைப்பதாகவும் விளங்கியது. இந்த பக்டரி குண்டு வெடிப்புடன் அரசின் ஆத்திரமூட்டும் நிழலை படியவைக்கவும் தொழிலாளர்களை பொலிஸ் வலையில் கட்டும் ஒரு முயற்சியாகவும் உள்ளது. இது இங்கு மட்டும் அல்ல நாட்டின் ஏனைய இடங்களிலும் இத்தகைய அரச படை அணிகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கான ஒரு வாய்ப்பாகும்.

தொழிலாளர் எதிரில் தமக்கு பாதுகாப்பை ஏற்படுத்தும் — ஆத்திரமூட்டல்கள் மூலம் சிருஷ்டிக்கும் இராணுவ பொலிஸ ஆட்சிக்கான நிலைமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் பிரச்சினையாகும். தொழிலாளர்கள் பொலிசாரின் பாதுகாப்பு கமிட்டிகளில் சேரக் கூடாது. தொழிலாளர் உரிமைகளைக் காக்கப் போராடுவதற்கு நடவடிக்கைக் குழுக்களையும் பாதுகாப்பு வழங்க அதன் கீழ் தொழிலாளர் பிரதிநிதிகளைக் கொண்ட ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு குழுக்களையும் அமைக்க வேண்டும். அதற்கான அரசியல் தலைமையை சோசலிச சமத்துவக் கட்சி வழங்குகின்றது.

## புதிய தொழிலாளர் பாதை வெளியீடு



### லியொன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்



### சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00

## மார்க்சிசமும் இருபதாம் நூற்றாண்டின் பிரச்சினைகளும்

### ஒன்பது விரிவுரைகள்

1. லியொன் ட்ரொட்ஸ்கியும் இருபதாம் நூற்றாண்டின் சோசலிசத்தின் தலைவிதியும்
2. பூகோளமயமாக்கமும் வரலாற்று அர்த்தமும் புரட்சிகரத் தன்மையும்
3. சீர்திருத்தவாதமும் புரட்சியும்-பேர்ண்ஸ்டீனிற்கு எதிரான போராட்டமும் வரலாற்று முன்நோக்கும்
4. கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிசம்: ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்.
5. நிரந்தரப் புரட்சி--இந்தியாவிலும் சீனாவிலும் அதன் படிப்பினைகள்.
6. நிரந்தரப் புரட்சி-காஸ்ட்ரோவாதமும் குட்டி முதலாளித்துவ தேசியவாதமும்
7. தொழிற்சங்கங்களின் 150 ஆண்டுகள்- ஒரு மார்க்சிச மதிப்பீடு
8. கலை, கலாச்சாரம், சோசலிசம்
9. சோசலிச சமத்துவமும் புரட்சிக் கட்சியின் வேலைத்திட்டமும்

| சிலாபம் மெஸ்புர சனசமூக நிலையம் | கம்பஹா சுபத மாவத்த | கொழும்பு பொது நூல் நிலையம் |
|---|---|---|
| மார்ச் 15 | மார்ச் 22 | மே 10 |
| மார்ச் 29 | ஏப்பிரல் 05 | மே 24 |
| ஏப்பிரல் 5 | ஏப்பிரல் 26 | ஜூன்07 |
| ஏப்பிரல் 12 | மே 10 | |
| ஏப்பிரல் 26 | மே 24 | |
| மே 17 | ஜூன் 7 | |
| மே 31 | ஜூன் 21 | |
| ஜூன் 21 | ஜூலை 5 | |
| ஜூலை 5 | ஜூலை 19 | |




சந்தாதாரர் ஆகுங்கள்

சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.27 |
| இதழ் 6 | ரூ.54 |
| இதழ் 12 | ரூ.108 |
| இதழ் 24 | ரூ.216 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10
தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . திகதி . . . . .

இச் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி

பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10
தொ.பே. 682220

படிப்பகம்

... 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.